
குண்டூசி
ஏப்ரல் '55.... 8 அணா
517
நரசு ஸ்டுடியோஸ்
போர்ட்டர் கந்தன்
டைரக்ஷன்
K. வேம்பு..

ஈடில்லாத பரிமளத்திற்கு..
டிராலி
டால்க் பவுடர்
TALC
A.V.R.A & CO. MADRAS & BOMBAY

விநியோகஸ்தர்கள் :

சென்னை நகரம், வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கல்பட்டு, சித்தூர் : } ராஜா பிலிம்ஸ், மதராஸ்—2.

மதுரை, ராமனாதபுரம், திருநெல்வேலி : எவரெஸ்ட் பிக்சர்ஸ், மதுரை.

திருச்சி & தஞ்சாவூர் : வீ. ஆர். பிலிம்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை,

கோயம்புத்தூர் & நீலகிரி : மஜீத் & ஆனந்தா பிக்சர்ஸ், கோயம்புத்தூர்.

சேலம் : எம். ஏ. வி. பிக்சர்ஸ், சேலம்.

பெங்களூர், மைசூர் & கூர்க் : தல்லம் பிக்சர்ஸ் சர்கூட், பெங்களூர்.

மற்ற விபரங்களுக்கு :

எம். ஏ. வி. பிக்சர்ஸ், சென்ட்ரல் ஸ்டுடியோஸ், கோயம்புத்தூர்.

இந்தியாவின்
இணையற்ற பட்டணம் பொடி தொழிற்சாலை



N.V.ஷண்முகம் கம்பெனியார்
பட்டணம்பொடி தொழிற்சாலை
த.பெ.555. மதராஸ்-21.

குண்டூசி

இந்த ஊசியில்

மீண்டும் துண்டுப் படங்கள்	....	தலையங்கம்	... 4
பரஸ்பரம்	....		... 6
அன்றொரு நாள்	....		... 8
காணக் கிடைக்காத தங்கம்	....	"மயிலன்"	... 10
குண்டூசியைக் கேளுங்கள்	....	"குண்டூசி"	... 15
பிரம்மலோகம்	....	படச் செய்திகள்	... 21
புஸ்தகப் பொழுது	....	புஸ்தக விமர்சனம்	... 26
முதல் தேதி	....	படக் காட்சிகள்	... 27
பத்மினி	...	மூவர்ணப் படம்	... 29
இ. ஆர். சகாதேவன்	....	ஆர்ட் படம்	... 30
இ. ஆர். சகாதேவன்	....	வாழ்க்கை வர்ணனை	... 31
நுனிப்புல்	....	"வெட்டுக்கிளி"	... 36
தேவிகா ராணி	....	வாழ்க்கை	... 40
பிலிம் பக்கடா	....	"ஸ்டவ்"	... 42
நான் சாக விரும்புகிறேன்	....	திலிப் குமார்	... 44
சிங்கப்பூர் கடிதம்	....	சப்தகிரி சர்மா	... 48
வட நாட்டிலே	....		... 49
போர்ட்டர் கந்தன்	....	படக் காட்சிகள்	... 51
அம்பி ஷூட்டிங் பார்க்கிருன்	....		... 56
முதல் தேதி	....	பட விமர்சனம்	... 60
தயாராகும் புதுப் படங்கள்	....		... 63
பொதுஜனம் பேசுகிருர்	....	கடிதங்கள்	... 65
சங்கமம்	....	"மாயாவி"	... 71
இது செய்தி	....		... 81
எது நடிப்பு?	....	ஸ்ரீகாந்தன்	... 88
குழந்தைகள் நாடக சினிமா விழா			... 90

★

காரியாலயம்: 26, கிடங்குத் தெரு, சென்னை-1.

குண்டூசி

ஏப்ரல் 1955 | ஆசிரியர் : பீ. ஆர். எஸ். கோபால் | பட்டை 8 ஊசி 7 பிரதி 91

மீண்டும் துண்டுப் படங்கள்

சில மாதங்களுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட் அளித்த தீர்ப்பின் விளைவாக, சினிமாத் தியேட்டர்களில் துண்டுப் படங்கள் காட்டப்படுவது நிறுத்தப்பட்டது. அதன் பிறகு, (நாம் முன்பொரு தலையங்கத்தில் எழுதியிருந்தது போலவே) துண்டுப் படங்களை மிகுந்த ஆவலுடன் பார்த்து வந்த பட ரஸிகர்கள் அவை நிறுத்தப் பட்டவுடன் பலத்த ஏமாற்றம் அடைந்தனர். படம் பார்ப்பதே அவர்களுக்குச் சப்பிட்டு விட்டது. 'எப்படியாவது மீண்டும் துண்டுப் படங்களைக் காட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று பல நேயர்கள் நமக்கும், இதர பத்திரிகைகளுக்கும் எழுதி வருகின்றனர். எனவே, 'துண்டுப் படங்களை மக்கள் விரும்பவில்லை' என்று யாராவது சொன்னால், அது உண்மையை மறைத்துப் பேசும் வாதமே ஆகும்.

இம்மாதம் முதல் தேதியன்று இவ்விஷயங்களெல்லாம் சென்னை சட்ட சபையில் விவாதிக்கப்பட்டன. முடிவில், சினிமா (ஒழுங்கு) மசோதா சட்டமாக்கப் பட்டது. இந்தச் சட்டமானது, சினிமாத் தியேட்டர்காரர்களுக்கு சர்க்கார் லைஸென்ஸ் அளிக்கும்போது சில நிபந்தனைகளை விதிப்பதற்கு அதிகாரம் அளிக்கிறது. சினிமாப் படங்களை தணிக்கை செய்வது, பொதுவாக சினிமாத் தொழில் சம்பந்தமான சட்ட திட்டங்கள் செய்வது இவையெல்லாம் மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்கு உட்பட்டவை. ஆனால், சினிமாத் தியேட்டருக்கு லைஸென்ஸ் அளிப்பது, அவைகள் பொது ஜன பந்தோபஸ்துக்கும், படம் பார்ப்பவர்களின் சௌகரியத்திற்கும், நன்மைக்கும், சுகாதாரத்திற்கும் உகந்ததாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளுவது ஆகியவை ராஜ்ய சர்க்கார்களின் பொறுப்பாகும். இதை யொட்டியே மேற்சொன்ன சட்டம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

புதிதாக நிறைவேற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி, இனி தியேட்டர்காரர்கள் முன் போலவே ஒவ்வொரு காட்சியிலும் இரண்டாயிரம் அடி நீளமுள்ள, அல்லது காட்சி நேரத்தில் ஐந்தில் ஒரு பங்கு நேரத்திற்கு ஓடக்கூடியதான துண்டுப் படங்களைக் கட்டாயம் காட்டியாக வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்று நடக்காத தியேட்டர்காரர்களுக்கு லைசென்ஸ் வழங்கப்பட மாட்டாது. இந்திய சர்க்காரால்

தயாரிக்கப் பட்ட துண்டுப் படங்களை மட்டும் தான் காட்ட வேண்டும் என்ற நிபந்தனை இல்லை. தனிப்பட்ட நபர்களால் தயாரிக்கப்பட்டு இந்திய சர்க்காரின் அங்கீகாரம் பெற்ற துண்டுப் படங்களையும் காட்டலாம்.

வருஷ சந்தா: இந்தியா, இலங்கை ரூ. 6; வெளிநாடுகள் ரூ. 9. தனிப் பிரதி: இந்தியா 8 அணா; இலங்கை 50 சதம்; வெளிநாடு 12 அணா.

குறிப்பு: "குண்டூசி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் காணப்படும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே. அவை நிஜ நபர் யாரையும் குறிப்பிடுபவை அல்ல.

"இலவசமாக இத் துண்டுப் படங்களைக் கொடுத்தால் இவைகளைக் காட்டுவதற்கு ஆட்சேபனை இல்லை" என்று தியேட்டர்காரர்கள் கூறி வந்தார்களல்லவா? இதுபற்றி கனம் சுப்ரமண்யம் பேசிய போது, "துண்டுப் படங்களுக்கான செலவை தியேட்டர்காரர்கள் ஏற்க வேண்டியதில்லை. அவர்கள் இதற்காக பிரவேசக்கட்டணங்களை உயர்த்தி, படம் பார்ப்போரிடமிருந்தே இத் தொகையை வசூலித்துக் கொடுக்கட்டும்" என்று கூறினர்.

இது அவ்வளவாக நல்ல யோசனையல்ல என்று நாம் குறிப்பிட வேண்டியிருக்கிறது. தியேட்டர் கட்டணங்கள் முன்பே வெகுவாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. இனி மேலும் உயர்த்தப்பட்டால், படம் பார்ப்போரின் எண்ணிக்கை குறைவதோடு, படங்களின் வசூலும் பாதிக்கப்படும். ஆதலால் தியேட்டர்காரர்கள் பிரவேசக் கட்டணங்களை தற்போதைய நிலையில் இருந்து உயர்த்துவது விவேகமான செய்கையாகாது.

மசோதாவைக் கொண்டு வந்த கனம் மந்திரி சுப்ரமண்யம் கூறினர்: "துண்டுப் படங்களை மக்கள் விரும்புகிருர்கள் என்பதையும், அவை மூலம் ஏற்படும் நன்மைகளையும் தியேட்டர்காரர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அவர்கள் தேசிய மனப்பான்மையுடன் சர்க்காரோடு ஒத்துழைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நாம் இதை முழு மனதுடன் ஆதரிக்கிறோம். தியேட்டர்காரர்கள் தங்களுக்கு ஏற்படும் செலவைப் பொருட் படுத்தாமல் முன் போலவே—கட்டணங்களை உயர்த்தாமலே—துண்டுப் படங்களைக் காட்ட வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

லைசென்ஸ் வழங்கப்படுவதற்கு, பந்தோபஸ்து, பொது ஜன அமைதி, சுகாதாரம் இவை பற்றி முன்பு இருந்த நிபந்தனைகளோடு, படம் பார்ப்போருக்கான வசதிகள் சம்பந்தமான நிபந்தனையும் சேர்க்கப் பட்டுள்ளது. இதன் மூலம் தியேட்டர்களில் வசதிகள் அதிகரிப்பதற்கு வழி உண்டு என்பதால் இதைப் படம் பார்ப்பவர்கள் ஆதரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நமது நேயர்களுக்கும், ஏஜண்டுகளுக்கும், அபிமானிகளுக்கும்

எமது தமிழ்ப் புது வருஷ வாழ்த்துகள்

பரஸ்பரம்

இம்மாத "குண்டூசி"யை நீங்கள் கையில் வாக்கியவுடன் கொஞ்சம் கனம் அதிகரித்திருப்பதாகத் தோன்றும். அது உண்மைதான். இம்மாதம் எட்டு பக்கங்கள் அதிகமாக சேர்க்கப் பட்டிருக்கின்றன. ஆக, இம்மாத ஊசி 90 பக்கங்கள் கொண்டதாக வெளிவந்திருக்கிறது. வாசகர்களுக்கு படிப்பதற்கு அதிக விஷயங்களும், புது விஷயங்களும் அளிக்க வேண்டும் என்று நாம் சிறிது காலமாகவே திட்டமிட்டு வந்தோம். அதன் பலனாக, இப்பொழுது எட்டு பக்கங்கள் கூட்டியிருக்கிறோம். மற்றும் எட்டு பக்கங்களை கூடியவிரைவில் சேர்ப்பதற்கும் நாம் முயன்று வருகிறோம்.

சுமார் இரண்டு வருஷங்களுக்குமுன் காகித மார்க்கெட்டில் நெருக்கடி ஏற்பட்டபோது பல பத்திரிகைகள் பக்கங்களை குறைத்தன; சில விலையை உயர்த்தின. ஆனால், "குண்டூசி"யோ இரண்டையும் செய்யவில்லை. வழக்கமான பக்கங்களுடன், வழக்கமான விலையுடனேயே வெளிவந்து கொண்டிருந்தது. இப்பொழுதும் சென்ற சில மாதங்களாக காகித விலைகள் விஷம்போல் ஏறிவருகின்றன. பக்கங்களைக் குறைக்கவோ, விலையைக் கூட்டவோ வேண்டியதான இந்நிலையில் நாம் பக்கங்களை அதிகரிக்கிறோம். இதை நேயர்கள் பாராட்டுவார்கள் என்று நம்புகிறோம்.

ஆர்ட் காகிதங்களின் விலை அபாரமாக உயர்ந்து வருவதால் ஆர்ட் படங்களை நான்கு பக்கத்திலிருந்து இரண்டு பக்கமாகக் குறைத்துள்ளோம். இதற்குப் பதில் ஒரு ஆர்ட் படத்தை அட்டையின் மூன்றாவது பக்கத்தில் இனி வெளியிட்டு வருவோம். ஆகவே இந்த மாறுதல் மூலம், நீங்கள் நான்கு ஆர்ட் படங்களில் ஒன்றே ஒன்றைத்தான் இழக்க நேரிடுகிறது. இக்குறையை, சாதாரணப் பக்கங்களில் அதிக படங்களை வெளியிட்டு ஈடுசெய்யத் தீர்மானித்திருக்கிறோம்.

"அனார்க்கலி" தெலுங்குப் படத்தில் அஞ்சலி தேவி ஆடுகிறார்.

"அம்பி ஷூட்டிங் பார்க்கிறான்" என்ற தொடர் கட்டுரை சென்ற மூன்று மாத காலமாக வெளி வந்து கொண்டிருக்கிறது. இதை வாசகர்கள் மிக விரும்புவதாக பல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஆனல், "இந்த சுவாரஸ்யமான கட்டுரையை எழுதுபவர் யார்? என்று குறிப்பிடவில்லையே" எனப் பலர் கேட்டிருக்கிறார்கள். இக்கட்டுரை சினிமா உலகிலும், பத்திரிகை உலகிலும் ஒருங்கே அனுபவமுடைய ஒருவரால் எழுதப்படுகிறது. ஆனல், அவரது விருப்பப்படியே பெயரை இப்பொழுது வெளியிடவில்லை. கட்டுரை முடிவடைந்ததும் அவரது பெயரையும், — ஏன் உருவத்தையும்கூட — உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறேன்.

வடநாட்டு நக்ஷத்திரங்களைப் பற்றியும் வாசகர்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறார்கள். அதற்காகவே, "வடநாட்டிலே" என்ற பகுதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இப் பகுதியில் வடநாட்டு நக்ஷத்திரங்கள், பிரமுகர்கள் சம்பந்தப்பட்ட ரஸமான விஷயங்கள் தொடர்ந்து வெளிவரும். தேவிகா ராணியின் வாழ்க்கை வரலாறுகள், திலிப் குமாரின் சொந்த அனுபவம்— ஆகிய கட்டுரைகளையும் நீங்கள் மிக ரஸிப்பீர்கள்.

"அன்றொரு நாள்" என்று ஒரு சிறு பகுதி இம் மாதம் சேர்க்கப்பட்டிருக்கிறது. நக்ஷத்திரங்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த அபூர்வமான—ரஸமான நிகழ்ச்சிகள் இப் பகுதியில் தொடர்ந்து விவரிக்கப்படும்.

"சங்கமம்" தொடர் கதை அடுத்த மாதத்துடன் முடிவடைகிறது. இக் கதைக்காக "மாயாவி" உருவாக்கிய கதாபாத்திரங்களை நேயர்களுக்கு பிரிய மனமே வராது. அவ்வளவு தத்ரூபமாய், அழகாக, மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து விடும் வண்ணம் தம் எழுத்து மூலம் சித்தரித்திருக்கிறார் "மாயாவி". "சங்கமம்" கதையை நம் வாசகர்கள் மட்டுமன்றி சக எழுத்தாளர்கள்கூட வாயாரப் புகழ்கிறார்கள். இவ்வளவு நல்ல கதையை எழுதி உதவிய "மாயாவி"க்கு உங்கள் சார்பாக நாம் நன்றி தெரிவிக்கிறோம்.

"மாயாவி"யைப் போலவே தற்போதைய தமிழ் எழுத்தாளர் முன்னணியில் நிற்பவர் "எல்லார்வி". அவருடைய அமைப்பான சிறு கதைகளைப் படிக்காதவர்களே இருக்க முடியாது. அவர் இதற்கு முன்பே சில தொடர் கதைகளையும் எழுதி பிரசித்தி பெற்றிருக்கிறார். எனவே, அவருடைய ஒரு தொடர் கதையைக் "குண்டூசி"யில் வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளோம் என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். "வானவில்" என்ற இக் கதை ஒரு சமூகச் சித்திரம்; 'காதல் பெரிதா, கடமை பெரிதா?' என்ற அடிப்படையில் சுவாரஸ்யமான முறையில் எழுதப்பட்டது. இக் கதை அடுத்த (மே) மாத ஊசியில் ஆரம்பமாகிறது. பிரதிகள் தவறாமல் கிடைப்பதற்கு இப்பொழுதே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். அடுத்த மாத ஊசியில் ஓரிரண்டு புது அம்சங்களும் வெளிவரப் போகின்றன.

இந்த மாத ஊசியில் நீங்கள் காணும் மாறுதல்கள் உங்கள் மனதிற்குப் பிடித்தவையாகவே இருக்கும் என்று நம்புகிறோம். எங்கே உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவியுங்கள் பார்க்கலாம்.

சென்ற மாதம் 25ந் தேதியன்று மியூஸியம் தியேட்டரில் அரங்கேறிய பேபி கே. குமுதா



அன்றொரு நாள்

மூன்றும் வகுப்பு உபாத்தியாயர் கதை சொல்லிக் கொண்டிருந்தார். பையன்கள் தங்கள் விஷமத்தனத்தையும் மறந்து வாயைப் பிளந்தபடி அவர் சொல்லும் கதையை ரஸித்துக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

அவர் அன்று சொன்ன கதை இதுதான் : ஒரு சில நாணயங்கள் தன்னுடையது என்று ஒரு வாணியனும், இரும்பு வியாபாரியும் பஞ்சாயத்துக்கு வந்தார்கள். பஞ்சாயத்துத் தலைவர் நியாயம் வழங்குவதில் சமர்த்தர். அவர்கள் இருவரும் உரிமை கொண்டாடிய அந்த நாணயங்களைத் தம்மிடம் கொடுத்துவிட்டு, தீர்ப்புக்கு மறுநாள் வரும்படி பஞ்சாயத்துத் தலைவர் அவ்விருவரையும் அனுப்பி வைத்தார். மறுநாள் அந்த நாணயங்கள் வாணியனுடையவை என்று சரியான தீர்ப்பைக் கூறினார். ஒரு வாளி ஜலத்தில் அந்த நாணயங்களைப் போட்டு, ஜலத்தில் எண்ணெய் மிதக்கவே அது வாணியனுக்குச் சொந்தமானது என்று கண்டுபிடித்துத் தீர்ப்புக் கூறினார் அவர்.

இந்தக் கதையை உபாத்தியாயர் சொல்லி பத்து தினங்களுக்குப் பிறகு அந்த சம்பவம் நடந்தது. உபாத்தியாயர் பிரம்பும் கையுமாக பாடம் போதித்துக் கொண்டிருந்த சமயம் ஒரு பெஞ்சியில் அடுத்தடுத்து உட்கார்ந்திருந்த இரு பையன்களுக்குள் சச்சரவு ஏற்பட்டது. கோபத்தில் வாத்தியாரது மூக்கும் கைப் பிரம்பும் சேர்ந்து துடித்தன. "டேய், வாங்கடா ரெண்டு பேரும் இங்கே" என்று கர்ஜித்தார்.

பலிபீடத்தில் கொண்டு வந்து நிறுத்தப்பட்ட ஆடுகள் போல் இருவரும் உபாத்தியாயர் முன்னால் வந்து நின்றார்கள். "என்னடா சச்சரவு அங்கே" என்று விசாரிக்க ஆரம்பித்தார் அவர்.

"என்னுடைய அரையணாவை (அந்தக் காலத்தில் முழு செப்பு அரையணா உண்டு) இந்தக் கண்ணன் பையன் எடுத்துக் கொண்டு விட்டான், ஸார்" என்று நடுங்கும் குரலில் சொன்னான் முதல் பையன்.

கண்ணன் என்ற குற்றம் சாட்டப்பட்ட அந்தப் பையனோ, "ஆணையாச் சொல்றேன்; அது என்னுடையதேதான் ஸார்" என்று அடித்துப் பேசினான்.

வாத்தியாரின் நிலைமை தர்ம சங்கடமாகிவிட்டது. பாவம், அவர் எப்படி அது யாருடையது என்று முடிவு கட்ட முடியும்!

"நான் கண்டு பிடிச்சுச் சொல்றேன், ஸார்" என்று கணீரென ஒரு வாண்டுப் பயல் குரல் கொடுத்தான்.

"அதிகப் பிரசங்கி எப்படியடா நீ கண்டு பிடிப்பாய்?" என்று ஏளனமாகக் கேட்டார் உபாத்தியாயர்.

அந்த வாண்டுப் பயல் சட்டென்று பதில் அளித்தான்: "ஸார், ஒரு வாளியிலே ஜலம் கொண்டுவரச் சொல்லுங்க. அந்த அரையணாக் காசை தண்ணியிலே போடுவோம். கண்ணன் பால்காரன் மகன், ஸார். காசு அவனுடையதாயிருந்தால் தண்ணிமேலே பால் மிதக்கும். அப்படிப் பால் மிதக்கல்லேன்னா காசு அவனது இல்லை, ஸார்." இதைக் கேட்ட வாத்தியார் 'கொல்'லென்று சிரித்துவிட்டார்.

அன்று அப்படி நியாயம் வழங்கிய வாண்டுப் பயல்தான், பிறகு சட்டப் படிப்புப் படித்து, திரையுலகில் இன்று கதாசிரியர் – வசன கர்த்தா-நடிகராக இருந்துவரும் ஜாவர் என். சீதாராமன்.

வானவில்

"எல்லார்வி"

புதுத் தொடர் கதை

மே மாத "குண்டூசி"யில்

ஆரம்பமாகிறது

நெஞ்சையள்ளும் சம்பவங்கள்
நிறைந்த சமூகச் சித்திரம்

முதல் அத்தியாயம் முதலே தவருமல் படிப்பதற்கு, இப்பொழுதே உங்கள் ஊர் ஏஜண்டிடம் ஏற்பாடுகள் செய்து கொள்ளுங்கள். அல்லது, ஒரு வருஷ சந்தா (ரூ. 6) வை எமக்கு அனுப்பி வையுங்கள்.

காணக் கிடைக்காத தங்கம்

'மயிலன்'

திருச்சி டவுன் ஸ்டேஷனில் நான் வந்த புகைவண்டி வந்து நின்றது. அதை எதிர்த்தாற்போல் பக்கத்தில் திருச்சி ஜங்ஷனிலிருந்து வந்த வண்டியும் நின்றது. நானும் தங்கமும் உட்கார்ந்திருந்த இடத்துக்குப் பக்கத்திலே இரு வாலிபர்கள் இருந்தனர். அவர்களிலே ஒருவன் எதிரே நின்ற வண்டியிலிருந்த ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டி, ''அது யார் தெரியுமா?'' என்றான். ''தெரியாதே!'' என்றான் இன்னொருவன். உடனே நானும் அந்த வண்டியிலிருந்த பெண்ணைப் பார்த்தேன். என் ஆச்சரியம் அளவு கடந்தது. என்னை நானே நம்ப முடியவில்லை. கனவு உலகிலே சஞ்சரிக்கிறேனோ என்கிற சந்தேகம் ஏற்பட்டது. கண்களைக் கசக்கி நன்றாக உற்றுப்பார்த்தேன். ஆம்! அவளே தான்! சந்தேகமில்லாமல் அவளே தான்! அதற்குள், கூட இருந்த வாலிபன், ''அவள்கூட உட்கார்ந்திருக்கும் அந்த ஆள் யார் தெரியுமா?'' என்றான். பதிலுக்கு, ''பிரபல மான தரகன்'' என்றான் இன்னொருவன். இதைக் கேட்டதும் எரிமலை இடிந்து என் தலையிலே விழுந்தது போன்ற நிலையை அடைந்தேன். ஆ! அவளுக்குப் பக்கத்தில் பேர்போன தரகன்! அவளை நெருங்கிப் பார்க்கலாமா என்ற எண்ணம். இந்த நிலையில் புகைவண்டி தண்ணீர் பிடிப்பதற்காகப் பின்நோக்கி நகர ஆரம்பித்தது. என் நினைவுகளும் பின்னோக்கி ஓடின.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் எனக்குத் திருமணம் நடந்தது. நான் விரும்பாத — வேண்டாத — வெறுத்து ஒதுக்கிய திருமணம் நடந்தது. எனக்கர்கத திருமணம் செய்துகொள்ளவில்லை. என அம்மாவின் வேண்டுதலுக்குப் பயந்து பணிந்து திருமணம் செய்து கொண்டேன். என்றாலும் எனக்கிருந்த கவலை—மனநோய் நீங்கியபாடில்லை. என் மனைவி அழகி, நல்லவள் என்று எல்லோருமே சொன்னார்கள். நான் பேசியதே இல்லை அவளுடன். மூன்று மாதங்கள் ஓடிவிட்டன. என் இருதயத்திலே இருந்த புண் வடுவாகிவிட்டதே தவிர, ஆறவில்லை. ஒரு நாள் நான் என் அருமைத் தங்கத்தை நினைவுபடுத்தி அழாதகுறையாக அமர்ந்திருந்தேன்.

''அத்தான்'' என்றொரு குரல். என் மனைவியின் குரல்தான் அது. மீண்டும் ஒரு முறை ''அத்தான்'' என்றாள். வேண்டா வெறுப்பாகத் திரும்பிப் பார்த்தேன். பாவம்! அவளின் முகம் பரிதாபகரமாயிருந்தது பாக்க! நேரிடையாக முதன் முதலில் அவள் முகத்தைப் பார்த்தேன். ''ஏன்?'' என்றேன். ''மூன்று மாதமாகவே ஏன் இப்படி இருக்கிறீர்கள்'' என்றாள். ''ஹூம்'' என்றேன் நான் பெருமூச்சோடு. பிறகு அவளே ''எனக்குத் தெரியும் அத்தான் தங்கள் வாட்டத்தின் காரணம்'' என்றாள். சற்றுக் கடுமையாகவே ''என்ன தெரியும்?'' என்றேன். ''தாங்கள் காதலிலே தோற்றவர் அல்லது ஏமாந்தவர்'' என்றாள் அவள். ''யார் சொன்னது?'' என்றேன் நான். ''அத்தையும் தங்கள் டயரியும்'' என்று சொல்லி, ''ஏன் அத்தான் தங்கம் நல்ல அழகியாம் அத்துடன் அன்பு உள்ளமும் கொண்டவராமே'' என்றாள் அவள்.

ஒருவேளை கேலி செய்கிறாளோ என்று தலையைத் தூக்கிப் பார்த்தேன். அவள் பார்வையில் கேலி இல்லை; கிண்டல் இல்லை; ஆனால் கவலை இருந்தது. பொறாமை இல்லை; பொறுமை இருந்தது. பரிதாபகரமான குரலோடு அனுதாப முகத்தோடுதான் என்னைப் பார்த்தாள். அவள் பார்வையிலே இருந்த பரிதாபம் அவளிடம் இருந்த கோபத்தையெல்லாம் விட்டு உட்காரச் சொல்ல வேண்டியதாயிற்று. அவளும் உட்கார்ந்தாள். அவளே மீண்டும் பேசினாள். ''அத்தான்! ஆச்சரியப்படுகிறீர்களா என் செய்கைக்கு? உள்ளபடியே எனக்கு

உங்கள் மேலே பரிதாபமும் தங்கத்தின் மேலே அனுதாபமும் தான் ஏற்படுகின்றன. நீங்கள் வேதனையோடு உட்கார்ந்திருப்பதைப் பார்க்கப் பார்க்க எனக்கே அழுகை வருகிறது. உங்களைப் போன்றோர்—மென்மையான உள்ளங் கொண்டோர்—அருள் நெஞ்சு பெற்றோர்—அன்பு இதயம் படைத்தோர் ஆகியோரின் வாழ்க்கையிலே ஏற்படுகிற காதல் தோல்வி இதயத்திலே மாறாத வடுவாகத்தான் இருக்குமே தவிர ஆறிவிடக்கூடிய புண்ணாக இருக்காது. சஞ்சலபுத்தி யுடையோருக்கும் சபல எண்ணங் கொண்டோருக்கும் காதல் தோல்வி சாதாரணமானது. அவர்கள் காதலிப்பது இன்பத்துக்காக—உடற்பசிக்காக. நீங்கள் காதலிப்பது வாழ்க்கைக்காக—உள்ளத்துக்காக! எனவேதான் உங்களாலே திருமணம் ஆகியும் மனசாந்தி பெறமுடியவில்லை" என்றாள்.

அப்போதுதான் அவளை—அவளின் குணத்தை—பண்பை — படிப்புக்கேற்ற நடத்தையை — உள்ளத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது என்னால்! என்றாலும் என் சந்தேக புத்தி விடவில்லை. அவள் யாரையாவது காதலித்திருப்பாளோ என்ற ஐயம் எழுந்தது. உடனே, "நீ யாரையாவது காதலித்திருக்கிறாயா?" என்றேன. உடனே அவள் பொறுமையாக "அத்தான்! காதலன் பெருமை பேசி—உங்களிடத்திலே என் காதலைக் கூறி விடுதலை பெற முயற்சிப்பேன் என்று எண்ணுகிறீர்கள்? இல்லை அத்தான இல்லை! நான் யாரையும் காதலிக்கவில்லை. இன்றைய உலகிலே பகட்டுக்காக—படாடோபத்துக்காகப் பலபேர் காதலிக்கிறார்கள். பணத்துக்காக—பசிக்காகப் பலர் காதலிக்கின்றனர். நடத்தைக்காகச் சிலர் காதலிக்கின்றனர். அறிவுக்காகச் சிலர் காதலிக்கின்றனர். ஆனால் அன்புக்காக — குணத்துக்காக—வாழ்க்கைக்காக வெகு சிலாதான் காதலிக்கிறார்கள். அந்த வெகு சிலரிலே மிகச்

சிலருக்குத்தான்—தங்கம் போன்றோருக்குத்தான் தங்களைப் போன்றோர் கிடைக்கின்றனர். எனக்கு யாரும் உங்களைப் போன்று கிடைக்கவில்லை. ஆகவே, யாரையும் நான் காதலிக்கவும் இல்லை அத்தான்'' என்றாள். நான் அவளின் பேச்சைக் கேட்டு ஆச்சரியப்பட்டேன். பிறகுதான் அவள் உண்மையிலேயே எனக்காக அனுதாபப்படுகிறாள் என்பதைத் தெரிந்து கொண்டேன்.

நான் அழகனல்ல. ஆனால், நான் அழகு நோயாளியும் அல்ல. நான் பள்ளி வகுப்பிலிருந்தே நல்லவன் என்று பெயர் எடுத்தவன். எங்கள் ஊரில் தங்கம் என்றொரு அழகி இருந்தாள். அன்பு உருவானவள். காலம் எங்களைச் சந்திக்க வைத்தது. சந்திப்பு எங்களைச் சிந்திக்க வைத்தது. சிந்தனை எங்களைக் காதல் ஜோடியாக்கிற்று. "நீ எனக்குத்தான் நான் உனக்குத்தான்!" என்றுகூடக் கடிதம் எழுதினேன்.

காலம் வளர்ந்தது. எங்கள் காதலும் வளர்ந்தது. திருமணத்துக்கு அவள் தந்தையைக் கேட்டேன். இல்லை! இல்லை கெஞ்சினேன். கால்களைப் பிடித்துக் கெஞ்சினேன். கைகளைப் பிடித்து கெஞ்சினேன். மன்றாடினேன். ஆனால் அவர் மறுத்துவிட்டார். அதுவும் ஏழை என்ற காரணம் காட்டி மறுத்துவிட்டார். எதற்குமே இசையவில்லை. தங்கத்தைப் பம்பாயிலிருந்த ஒருவனுக்கு மணம் முடித்துவிட்டார். மண நாளுக்கு முதல் நாள் கடைசி முறையாகத் தங்கம் என்னைச் சந்தித்தாள். வெகுநேரம் பேசினோம். அவள் இறக்கக்கூட தயாராக இருந்தாள். மணக்கோலத்திலே இருக்க மறுத்தாள். பிணக்கோலத்திலே இருக்க ஆசைப்பட்டாள். நான் எடுத்துச் சொன்னேன், "காதலே வாழ்க்கை அல்ல! வாழ்க்கையின் ஒரு பகுதிதான் காதல். ஆகவே, அதிலே ஏற்படுகிற தோல்வி வாழ்க்கையிலே ஏற்படுகிற தோல்வி ஆகாது. என்னோடு உன்னால் வாழவும் முடியாது; தனியாக வாழவும் கூடாது. என்னால் தனியாக வாழமுடியும். நீயாவது உன் கணவனோடு நிம்மதியாக இரு. நான் தனியாகவே வாழுகிறேன் உனக்காக—உன் காதலுக்காக" என்று.

அவள் எப்படியோ ஏற்றுக்கொண்டு, "நீங்களும் திருமணம் செய்து கொள்ளுங்கள். உங்கள் மனைவி பெரிய பாக்யசாலிதான்'' என்றாள். பிறகு அவள் ஞாபகார்த்தமாக அன்பின் அடையாளமாக "தங்கம்'' என்று எழுதப்பட்ட மோதிரத்தை என் கையிலே அணிவித்தாள். நான் எதுவும் அவளுக்குப் பரிசாகத் தரவில்லை. ஆனால் அவள் டயரியிலே "இருக்கிறேன் சாகவில்லை" என்று மட்டும் எழுதினேன்.

இதையெல்லாம் நான் என் மனைவியிடத்திலே கூறினேன். அவள் மிக மிகப் பரிதாபப் பட்டாள். அனுதாபப் பட்டாள் அழாக் குறையாக. அவள் செய்கையைக் கண்டு நான், "பெண்கள் பொறுமைக்காரர்கள் என்று எண்ணியிருந்தேன், ஆனால் உன்னுடன் பேசிய பிறகு அவர்கள் பொறுமையின் உருவங்கள் என்று எண்ணுகிறேன்" என்றேன். அதற்கு அவள், "ஆண்கள் அவசரக்காரர்கள் என்றுதான் எண்ணியிருந்தேன். உங்கள் கதையைக் கேட்ட பிறகு அன்பு உருவானவர்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன் அத்தான்'' என்றாள். உள்ளபடியே அவள் பேச்சைக் கேட்டு நான் ஆச்சரியப்பட்டேன், ஆனந்தப்பட்டேன். அவளை என் மனைவியாக அல்ல—உயிர்த்தோழனாகக் கருதினேன். அவள்மேல் இருந்த கோபமெல்லாம் மாறி அன்பு வெள்ளம் பெருக்கெடுத்தது. என்னை அறியாமலேயே "மரகதம்!" என்றேன் முதன் முறையாக. "தங்கம் எனக்குத் தந்தாள் மோதிரத்தை, அவள் நினைவாக. ஆனால் எங்கள் இருவரின் நினைவாக உனக்கு இந்த மோதிரத்தைத் தருகிறேன்'' என்று சொல்லி நானே அவள் கையில் ஒரு மோதிரத்தை அணிவித்தேன்.

இப்படியே எங்கள் வாழ்வு நகர ஆரம்பித்தது. நான் மட்டும தங்கத்தை மறக்கவில்லை. மரகதம் தினம் தினம் தங்கத்தைப்பற்றிப் பேசுவாள்—கேட்பாள் பொறுமை ஏதுமின்றி. அவளைக் காணவேண்டுமென்று துடியாய்த் துடித்தாள். எனக்கோ தங்கத்தின் முகவரி தெரியாது. நாங்களோ அப்போது சென்னையிலே இருந்தோம். தங்கமோ தாராவியிலே இருந்தாள். எப்படி அவளைப் பார்க்க முடியும்? கடிதம் எழுதுவது முடியாது—கூடாது. முறையும் ஆகாது. தங்கத்தை நான் நினைத்ததை



''வீணைக் காட்சிகள் இனி வராது என்று எண்ணியது வீணே'' என்று இப் படம் நிருபிக்கிறது. மஹேஸ்வரியின் ''கண்ணின் மணிகளி''ல் ஒரு 'கண்மணி' இவர்—எம். வி. ராஜம்மா.

விட. என் மனைவி அதிகம் நினைத்தாள். பேசினாள். எங்கள் வீட்டில் தங்கத்தின் படம் ஒன்று மாட்டப்பட்டது. அதற்கு இருந்த மதிப்பும்—பக்தியும ஆண்டவனுக்குக்கூட கிடையாது!

நாளடைவில் மரகதம் எனக்கு வழி காட்டியாக—உயிர்த் தோழனாக மாறி விட்டாள். தங்கம் இல்லையே என்று கூட ஏங்கினேன். மரகதம் போன்றோர் வாழ்க்கையிலே கிடைப்பது அரிது. தன் கணவன் வேறொருத்தியைக் காதலித்தவனாயிருந்தும்—அவளுக்காக ஏங்குகிறவனாயிருந்தும் — அவனிடத்திலே அன்பை அளவுக்குமீறிச் செலுத்தி அவனை அடிமைப்படுத்தும் திறமை இந்த உலகிலே எத்தனைபேருக்குவரும்? தங்கம் என் காதலி! மரகதம் என் மனைவி. இருவரும் என் கண்களாகத் தென்பட்டனர். இருவரும் குணக்குன்றுகள்தான். அன்புருவங்கள்தான். நான் இப்படிப்பட்ட மனைவி கிடைப்பாள் என்று கனவில்கூட கருதியதில்லை.

நாளடைவில் மரகதம் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள். குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது என்ற முடிவுக்கு வரமுடியாமல் திண்டாடினேன். அப்போது மரகதம் ''தங்கம்'' என்று பெயர் வைக்கலா மென்றாள். நான் ஆச்சரியத்தோடு, ''ஏன்?'' என்று கேட்டேன். ''தங்கம் என்ற பெயர் உங்களாலே மறக்க முடியாதது. என்னாலே தினமும் புகழ் பாடப்படுவது. ஆகவே உங்கள் காதலியின் நினைவாக ''தங்கம்'' என்ற பெயரே இருக்கட்டும்!'' என்றாள். பிறகு என் குழந்தைக்கு ''தங்கம்'' என்றே பெயரிடப்பட்டது. குழந்தை ஆறு மாதமாக இருந்தபோது எங்கிருந்தோ வந்தது அந்தப் பாழுங் காலரா! என் மனைவி காலராவினாலே தாக்கப்பட்டு இறந்துவிட்டாள், என்னையும் தங்கத்தையும் மறந்து உலகைவிட்டே பறந்துவிட்டாள். நான் ஏங்கினேன். ஏங்கி ஏங்கிச் செத்துக் கொண்டே இருக்கிறேன்.

உயிருக்கு உயிராய் காதலித்த தங்கத்தைக் கைவிட வேண்டியதாயிற்று. காதலை மறக்க முடியாமல் தவித்தேன். எங்கிருந்தோ வந்தாள் மரகதம். ஆறுதல் பெற்றேன். நிம்மதி பெற்றேன், அவளின் பேச்சாலும் குணத்தாலும்,

மரகதம் இருந்தபோது தங்கத்தை நினைவுபடுத்திக் கொள்வேனே தவிர முன்புபோல் அவளுக்காக ஏங்குவது இல்லை. இதயவடுக்கூட மறைய ஆரம்பித்தது. இந்த நிலையிலேதான் என் மனைவி—வாழ்க்கைத் துணை—வழிகாட்டி—தோழன்—ஆகிய முறைகளிலே எல்லாம் இருந்த மரதகம் இறந்தாள். முதல் ஏமாற்றத்தை—வடுவைப போக்க மரகதம் வந்தாள். இப்போது அவளாலே ஏற்பட்ட புண்ணை ஆற்ற யார் வருவார்கள்? எப்படியோ மூன்று ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இப்போது தங்கம் மூன்று வயதுக் குழந்தை. இந்த நிலையிலேதான் நான் திருச்சிக்கு வரவேண்டியதாயிற்று. வந்த இடத்திலே அவளை அடுத்த இரயிலிலே சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் கிடைத்தது.

எம். கே. ராதா இன்ஸ்பெக்டர் வேஷத்தில் நடிப்பது மஹேஸ்வரியின் "கண்ணின் மணிகள்" படத்தில்.

இவ்வளவும் என் மனத்திரையில் ஓடி மறைந்தன. அப்போதுதான் அருகிலிருந்த வாலிபன் பேசிக்கொண்டிருப்பதைக் கவனித்தேன். "நண்பன் நாகராஜனின் மனைவி தங்கம் அவள். ஓராண்டுக்கு முன்னால் நாகராஜன் விமான விபத்திலே இறந்துவிட்டான். தங்கம் இப்போது காரைக்குடியிலே ஆசிரியர் வேலைக்குப் படித்துக் கொண்டிருக்கிறாள். நீ நினைக்கிற மாதிரி எல்லாம் தவறானவள் அல்ல தங்கம். அந்த மடையன் இடம் இல்லாத காரணததால் அங்கே உட்கார்ந்திருக்கலாம். அவள் ஒருவேளை பழைய காதலனைத் தேடிக்கூட இருக்கலாம்" என்றான்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! 'என் அருமைக் காதலி தங்கம் இப்போது விதவை! என்னைத் தேடிப் போகிறாள் சென்னைக்கு' என்பதைக் கேட்டவுடன் அவளைக் கூப்பிடுவது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். எங்கள் இரயில் பழையபடி இருந்த இடத்துக்கே வர ஆரம்பித்தது. அந்த வாலிபர்கள் இருவரும் அந்த இடத்திலேயே இறங்கி நண்பர்களைச் சந்திக்கப் போய்விட்டனர். எங்கள் வண்டிவந்து நின்றதோ இல்லையோ தங்கம் இருந்த அந்தப் பாமும் ரயில் வேகமாகப் புறப்பட்டுவிட்டது. தங்கம் தலையை வெளியே நீட்டினாள். நான் தங்கம் என்று கத்தினேன். பக்கத்திலிருந்த என் குழந்தை தங்கம் "அப்பா!" என்றாள். ரயிலை ஓடிப் பிடிக்க முடியவில்லை. நண்பர்கள் வருவார்கள் விசாரிக்கலாம் என்று இருந்தேன். அவர்கள் வரவே இல்லை. எங்கள் வண்டியும் புறப்பட்டுவிட்டது. ஏமாற்றத்தின் காரணமாக நான் விட்ட பெருமூச்சு ரயில் வண்டி விட்ட அனல் மூச்சோடு கலந்தது. அந்த இரு மூச்சுகளின் புகை மண்டலத்தினிடையே "அவள் காணக்கிடைக் கிடைக்காத தங்கம்!" என்ற பாட்டு மட்டும் எங்கிருந்தோ கேட்டது!

குண்டூசியைக் கேளுங்கள்

சினிமா, நாடகம், நடனம், சங்கீதம் சம்பந்தமாக உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை ''குண்டூசி''யாரிடம் கேளுங்கள்.

டி. ராமலிங்கம் (சென்னை-1)

லலிதா-பத்மினி சகோதரிகள் சொந்தப் படம் தயாரித்து வருகின்றனரா?

சொந்தப் படம் தயாரித்துக் கொடுப்பதில் அவர்களுக்கு இணையே யில்லை. ஆனால், அந்தப் படங்கள் திரைக்குத் தான் வருவதேயில்லை; பத்திரிகைகளில் அச்சாவதோடு நின்றுவிடுகின்றன அவை. நம் பட முதலாளிகள் அவர்களுக்குக் கொஞ்சமாவது ஓய்வு அளித்தாலல்லவா அவர்கள் சொந்தப் படம் தயாரிக்கும் விஷயத்தைப்பற்றி யோசிக்கவாவது முடிவதற்கு!

பி. நயினர் (ஆழ்வார்திருநகரி)

வைஜயந்திமாலா தற்போது எந்தப்படத்தில் நடித்து வருகிறார்? அவரது விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

வைஜயந்தி தற்போது சென்னையில் ''மனைவியின் மகன்'' தமிழ்—ஹிந்திப் படங்களிலும் பம்பாயில் பல ஹிந்திப் படங்களிலும் நடித்து வருகிறார். விலாஸம்:-ஸதர்ன் அவென்யூ, சென்னை-18.

டி. ரங்கநாதன் (வேலூர்)

என் அபிமான வசனகர்த்தா-நடிகர் ஏ. பி. நாகராஜனுக்கு ''கலைஞர்'' என்ற பட்டம் யாரால் எங்கு எப்பொழுது கொடுக்கப் பட்டது? அவர் தற்போது எந்த ஊரில் வசிக்கிறார்?

நாகராஜன் தற்போது கோயமுத்தூரிலேயே வசிக்கிறார். கலையில் தேர்ந்தவர் கலைஞர். இது யாராலும் கொடுக்கப்பட வேண்டியதேயில்லை. நீர் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுமேன்.

*　　*　　*

என் தி. மு. க. நண்பன் ஒருவன் கூறுகிறான்: ''நாகராஜன் வசனங்களையும், கதையையும் திருடி எழுதுகிறார்'' என்று. உண்மை என்ன?

தி. மு. க. வசன கர்த்தாக்களின் இலக்கியத் திருட்டுகளை யெல்லாம் நாகராஜன் அம்பலப்படுத்தி வருகிறார். ஆதலால், அவர்கள் பதிலுக்கு ''நாகராஜன் தான் திருடுகிறார்'' என்று பிரசாரம் செய்வது சகஜந்தானே!

*　　*　　*

பாகவதரின் ''புது வாழ்வு'' திரைக்கு வருமா, வராதா?

வரும் போது வரவில் வைத்துக் கொள்ளுவோமே! பாகவதருக்குப் பதில் நீர் ஏன் தவிக்கிறீர்? படம் மிகத் தாமதித்து வந்தால் பெயரை ''பழைய வாழ்வு'' என்று மாற்றி விட்டால் தீர்ந்தது!

எல். எஸ். என். மூர்த்தி (தூத்துக்குடி)

ஜெமினி கணேசனின் விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

நெ. 42, டாக்டர் திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை-6.

''மைனாவதிப்பிரியன்'' (கமுதி)

எந்த சூழ்நிலை இருந்தால் ஒருவனுக்கு கர்வம் அதிகமாகும்?

ஒருவன் 'கார்' வாங்கியவுடன் தானாகவே அவனுக்கு ''கார்வம்'' ஏற்பட்டு விடுகிறது. பிறகு, அவன் 'காலை யிழந்தவன்' ஆகிவிடுவதால் ''கார்வ''மும் காலை யிழந்து ''கர்வம்'' ஆகிவிடுகிறது.

*　　*　　*

சினிமாவை அறவே வெறுக்கும் ஒரு நண்பர், சினிமாவை மிக விரும்பும் ஒரு நண்பர்—இவர்களில் நீங்கள் யாருடைய நட்பை அதிகம் விரும்புவீர்?

சினிமாவை அறவே வெறுக்கும் நண்பரைத் தான். ஏனென்றால், அவர் சதா சினிமாப் பேச்சையே பேசி எனக்குச் சலிப்பை ஏற்படுத்தமாட்டார் அல்லவா?

*　　*　　*

ஒரு நடிகை எந்த லக்ஷியத்திற்காக உயிர் வாழ்கிறாள்?

முதலில் பணத்திற்காக; பிறகு அமைதிக்காக; பிறகு இறுதியில் சாவிற்காக

மீபத்தில் வெளிவரவிருக்கும் ஏவி. ம். மின் "செல்லப் பிள்ளை"யில் பிரபல ண்ணும்பாவும், பண்டரிபாயும் சேர்ந்து நடிக்கின்றனர்.

ஸஸ். சுப்ரமணியன் (மைலாப்பூர்)

பிரபல எழுத்தாளர்களின் சுவையான ாவல்கள் பல வெளிவந்துள்ளனவே. அவைகளைப் படமாகத் தயாரிக்காமல் ர்த்தமில்லாத கதைகளைப் படமாக்கு ரூர்கள் நம் பட முதலாளிகள் ?

நம் பட முதலாளிகள் சுவை மிக அறிந்தவர்கள். அவர்கள் மீது நீங்கள் ரேயடியாய் குறைப்பட்டுக் கொண்டு ட முடியாது! பிரபல நாவல்களில் ள்ள சம்பவங்கள், கருத்துக்கள் இவைகளை யெல்லாம்தான் அவர்கள் ம் படங்களில் எடுத்துப் போட்டு வரு ரூர்களே!

. ஆர். நாகராஜன்

நான் ஒரு கதையும், அதற்கு வசனமும் ழுதியிருக்கிறேன், அதை யாருக்கு னுப்பி வைக்கலாம் ?

சமீப காலமாய் நம் கதாசிரியர்கள் து "திருட்டுக் குற்றம்" அதிகரித்து ருகிறது. உம் கதையை அவர்களுக்கு அனுப்பி வைத்தீரானால், உம்முடைய கதையையும் தம்முடைய பெயரையும் சேர்த்துக் கொண்டு கொஞ்ச காலம் தள்ளுவார்கள்!

என். எம். நூர்மகம்மது (மசூலிப்பட்டினம்)

கே. ஆர். ராமசாமியின் விலாஸம் என்ன? கடிதம் எழுதினால் பதில் எழுதுவாரா ?

எழுதுவார் என்று நினைக்கிறேன். 3வது மெயின் தெரு, காந்தி நகர், அடையாறு, சென்னை.

ம. ப. சுப்ரமண்யம் (கரூர்)

"தேவதாஸ்" படத்தில் நடித்த நாகேஸ்வரராவ் இதுவரை எத்தனை படங்களில் நடித்திருக்கிறார்? அவர் நடித்த முதல் படம் எது ?

நீர் "குண்டூசி"யைத் தொடர்ந்து படிக்காததால் ஏற்பட்ட சந்தேகம் இது. முன்பே "குண்டூசி"யில் நாகேஸ்வர ராவின் வாழ்க்கை வர்ணனை வெளியிடப்பட்டிருக்கிறது.

எம். கே. ஹனீப் (இளம்குளத்தூர்)

நான் எந்த சினிமாப் படத்தையும் ஒரு தடவைக்கு மேல் பார்ப்பதில்லை. ஆனால், "மிஸ்ஸியம்மா"வை மட்டும் ஐந்து தடவை

பார்த்து விட்டேன். இதற்காக சாவித்திரியிடமும் சாரங்கபாணியிடமும் எனக்குப் பரிசு வாங்கித் தர முடியுமா?

நன்ருய்ச் சொன்னீர்! இதற்காக நான் சாரங்கபாணியிடம் போனுல், "முதலில் வெள்ளையப்பனைத் தள்ளு!" என்று என்னிடமே கையை நீட்டுவாரே! சாவித்திரியோ தம் கழுத்தில் அணிந்திருந்த சிலுவையை உமக்குப் பரிசாக அளித்திருக்கக்கூடும். ஆனல் அதைக் கூட (தகப்பனுர்) துரைசாமி வாங்கிக் கொண்டு போயிருப்பாரே!

என். பிரேமா (கடலூர்)

பானுமதியின் விலாஸம் என்ன?

முலோனி ரோடு, தியாகராயநகர், சென்னை-17 என்று எழுதுங்கள்.

ஏ. ராமலிங்கம் (மல்லாகம், யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசனின் திடீர் மாறுதல் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

"வாய்ச் சொல் வீரர்" என்று புகழ் பெற்றுள்ள அவரால் தம் மனச்சாட்சியுடன் போராடி வெற்றி பெற முடியவில்லை என்பது தெளிவாகி விட்டது. தேசத்திற்காக சிறை சென்ற ஒரு தியாகியின் புதல்வர் இவ்வளவு நாள் தவருன கட்சியில் இருந்தது தானே ஆச்சரியம்!

* * *

உங்களுக்கு கர்னுடக சங்கீதம், ஹிந்துஸ்தானி சங்கீதம்—இவைகளில் எது அதிகம் பிடிக்கும்?

நீர் சினிமாவில் கேட்கும் கதம்ப சங்கீதத்தை ஹிந்துஸ்தானி சங்கீதம் என்று எண்ணிக்கொண்டிருந்தால் அது தவறு. சாஸ்திரீய ஹிந்துஸ்தானி சங்கிதமும், கர்னுடக சங்கிதமும் ஒரே அடிப்படையில் தோன்றி, மாறுதலான இரு வகையில் வளர்ச்சி பெற்றவை. இவற்றுள் கர்னுடக சங்கிதம் அடைந்துள்ள வளர்ச்சியே எனக்கு அதிகம் பிடித்திருக்கிறது.

ஜே. அப்பாஸ் (வழுத்தூர்)

புரட்சிகரமான படங்கள் வந்தால் வெற்றி பெறுகின்றன. மற்றவைகளோ தோல்வியுறுகின்றன. இதன் மூலம் மக்கள் பெரும்பாலும் எந்தக் கொள்கையை விரும்புகிருர்கள் என்பதை நிர்ணயிக்கலாமா?

ஒரு படத்தின் வெற்றி தோல்வியின் மூலம் எதையுமே நிர்ணயித்துவிட முடி

நீண்டு பெருகும் கூந்தல் வேண்டுமானல்

கேசவர்த்தினி

தடவுங்கள். தலை அரிப்பைப் போக்குங்கள். மயிர் கொட்டுவதை நிறுத்துங்கள். அகால நரையைத் தடுங்கள். நரையைத் தாமதிக்கச் செய்யுங்கள். பளபளப்பான கேசத்தைப் பெருக்கிக் கொள்ளுங்கள்.

மறைந்துள்ள கூந்தலழகை எடுத்துக் காட்டுங்கள் **கேசவர்த்தினி**யின் உதவியால்.

ஷாம்புவின் உதவியால் தலையை சுத்தமாகவும், பரிமளமுள்ளதாகவும் ஆக்குங்கள். கேசவர்த்தினி அணு 14; ஷாம்பூ அணு 14: தபால் செலவு வேறு. எங்கும் கிடைக்கும்.

கேசவர்த்தினி ப்ராடக்ட்ஸ்,
கோயமுத்தூர்.

யாது. அதில் சம்பந்தப்பட்டவர்களின் அடுத்த முயர்சி அதில் பாதியளவாவது வெற்றி பெறும் உறுதியாகச் சொல்ல முடியாது. அதிருக்கட்டும்; நீர் ஏன் விஷயங்களைத் திரித்துக் கூறுகிறீர்? "புரட்சி"ப் படங்கள் பல படு தோல்வியடைந்திருக்கின்றன. இதற்கு மாருக "புரட்சி"யற்ற சில படங்கள் பிரமாதமான வெற்றியைப் பெற்றிருக்கின்றன. இதுவல்லவோ உண்மை நிலை.

ஆர். நடேசன் (செகந்தராபாத்)

லலிதா பத்மினியின் விலாஸத்தை நான் தெரிந்து கொள்ளலாமா?

தெரிந்து கொள்ளுவதில் தவறே யில்லை. விலாஸம்: எட்வர்டு எலியட்ஸ் ரோடு, மைலாப்பூர், சென்னை.

ஆ. கந்தசாமி (மாங்குடி)

மு. கருணாநிதி, அண்ணாத்துரை முதலியோர் தமிழ் மக்களுக்காக சேவை புரிவதாகக் கூட்டங்களில் பேசுகிறார்களே, தமிழ் மக்கள் பார்ப்பதற்காகத் தயாரிக்கப்படும் படங்களுக்கு அவர்கள் காசில்லாமல் கதை வசனம் எழுதிக் கொடுப்பார்களா?

நன்ருய்ச் சொன்னீர்! காசில்லா விட்டால் கட்சி ஏது; கதை வசனம் ஏது? படத்தில் புகுத்தப்படும் பிரசாரங்களும் நீதிகளும் அதைப் பார்ப்பவர்களுக்கேயன்றி தயாரிப்பவர்களுக்கல்ல! ஏழையின் கண்ணீரைக் காட்டி, பணம் குவித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிகிறார்கள் பட முதலாளிகள். பதிவிரதை பற்றிய படத்தைத் தயாரித்தவர்கள் மஹா யோக்கியர்களாகத் தான் இருப்பார்கள் என்று நினைப்பது தவறு. பதிவிரதையாக நடித்த நடிகையின் நடத்தையைப் பற்றியோ பேசவே கூடாது! பக்திப் படங்களைத் தயாரித்தவர்களெல்லாம் பக்திமான்கள் அல்ல; நாஸ்திகப் படங்களைத் தயாரித்த பலர் உண்மையில் ஆஸ்திகர்கள்! எல்லாம் பிழைப்பதற்கான உபாயங்களே!

ஆர். விஜயன் (வண்டிப்பெரியார்)

எஸ். பாலச்சந்திரன் எந்த ஜாதியை, எந்த தேசத்தைச் சேர்ந்தவர்?

அவர் ஒரு அசல் தென்னிந்திய ஐயர்.

'பின்னணி'யி (பாட்டி) லிருந்து முன்னணிக்கு வர முயன்று கொண்டிருக்கும் பி. ஸ்ரீநிவாஸன் இவர். 'ஏழை உழவன்', 'நல்ல காலம்', 'நல்ல வீடு' போன்ற ஏழு படங்களில் இவர் பின்னணி பாடியிருக்கிருர்.

அதியற்புதமான

ஸ்டுடியோ போர்ட்ரெய்ட்
பிளாஷ் போட்டோக்கள்
ஸ்டில் போட்டோக்கள்
குருப் போட்டோக்கள்
டெவலப்பிங், பிரின்டிங்,
என்லார்ஜ்மென்ட்

இவைகளுக்கு
விஜயம் செய்யுங்கள்

தேவன் ஸ்டுடியோ

151 பிராட்வே :: சென்னை-1
தபால் பெட்டி நெ. 1363

போன்: 8607 தந்தி: FOTODYES



நான்
இவை இல்லாமல்
இருப்பதில்லை
WILLS'S
Berkeley
CIGARETTES
Berkeley
CIGARETTES
5 அணுவுக்கு 10. ½ அணுவுக்கு ஒரு சிகரெட்
சென்னை, ஆந்திரா, ஹைதராபாத், மைசூர் அல்லது
குடகு விற்பனை வரி உள்பட

பேசும் படங்கள் தோன்ற ஆரம்பித்த காலத்திலேயே சினிமாவுலகில் பிரவேசித்துப் பிரபலம் அடைந்தவர் சாந்தா தேவி! "இந்திர சபா", "பதிபக்தி", "சகுந்தலா" முதலான பல படங்களில் நடித்துள்ள அவரது புத்திரி எஸ். சுகந்தினியின் படம்தான் மேலே உள்ளது. பதினறு வயதான சுகந்தினி பள்ளியில் ஐந்தாம் பாரத்தில் படித்துக் கொண்டிருக்கிருர், அம்மாவைப் போலவே தானும் சினிமா நக்ஷத்திரம் ஆகிவிடவேண்டும் என்ற அபார ஆசை அவருக்கு. இதற்காகவே அவர் நடனப் பயிற்சி பெற்றிருக்கிருர். சினிமா உலகில் பிரவேசிப்பதற்கு சரியான சந்தர்ப்பத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்.

கி. நவநீதம் (பெரம்பலூர்)

ஜெமினி நிரந்தர நடிகரான ஸ்ரீராமிற்கு கல்யாணம் ஆகிவிட்டதா? குழந்தைகள் உண்டா?

மணம் ஆகிவிட்டது; குழந்தைகள் இரண்டு.

"மைனுவதிப் பிரியன்" (கமுதி)

சுந்தர ராவ் நட்கர்னி டைரெக்ட் செய்த படங்களில் மிகச் சிறந்த இரண்டைக் கூறவும்.

"ஹரிதாஸ்", "பூகைலாஸ்" ஆகியவை.

எஸ். பழனியப்பன் (கிமின், அஸ்ஸாம்)

காலஞ் சென்ற பி. யு. சின்னப்பா என்ன ஜாதியில் பிறந்தவர். அவர் இறப்பதற்கு முன் "வான விளக்கு" என்ற படத்தை தயாரித்து வந்தாராமே. அது என்ன ஆயிற்று?

சின்னப்பா சுபனுர வேளாள ஜாதியைச் சேர்ந்தவர். "வான விளக்கு" படத்தைத் தயாரிப்பதற்கு அவர் முன்னேற்பாடுகளை மட்டுமே முடித்திருந்தார். அதற்குள் அவரே வானத்தில் பிரகாசிக்கச் சென்றுவிட்டாரே.

"அன்பு" (செருவாமணி)

எம். ஆர், ராதா நடித்த "ரத்தக் கண்ணீர்" படத்தின் மூலக் கதையை எழுதியவர் கே. தங்கராசுவா அல்லது தாரை ஏ. கே. சிங்கா.

தங்கராசு எழுதியதுதான்.

ராஜா (கல்லடிஉப்போடை)

விஜயா தயாரிப்புகளிலெல்லாம் பின்னணி பாடிவந்த கண்டசாலா "மிஸ்ஸியம்மா"வில் மட்டும் ஏன் பாடவில்லை.

கண்டசாலா இப்பொழுது விஜயாவில் இல்லாததுதான் இதற்குக் காரணமாகும்.

என். சின்னக்கண்ணன் (புதுச்சத்திரம்)

அழகில் சிறந்தவர் பி. கே. சரஸ்வதியா? கிருஷ்ண குமாரியா? வித்யாவதியா?

முதலில் கூறப்பட்டவர் தான் என்பது என் அபிப்பிராயம்.

எஸ். தங்கராஜன் (நெல்லை)

மாதுரிதேவி ஹிந்துமதத்தைச் சேர்ந்தவரா? கிறிஸ்துவமதத்தைச் சேர்ந்தவரா?

கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்

எஸ். கலைச் செல்வன் (கமுதி)

இன்றையப் பட முதலாளிகள் எந்த விஷயத்தில் தாராள மனப்பான்மை உள்ளவர்களாக இருக்கிருர்கள்?

பேச்சு விஷயத்திலும், தற்பெருமையிலும் தான்! அவர்களிடம் (பெரும்பாலோரிடம்) தான் பணம் கிடையாதே! பணம் வந்து விட்டாலும் அதைக் கொடுப்பதற்கு மனம் வருவதில்லையே!

பிரம்மலோகம்

ஜெயஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸாரின் பெயரிடப்படாத சமூகப் படம் பாதிக்கு மேல் உருவாகிவிட்டிருக்கிறது. இப் படத்தில் மனோஹர், பாலய்யா, அசோகன், பிரண்ட் ராமசாமி, சிவதாணு, கருப்பய்யா, பி. கே. சரஸ்வதி, ஸி. ஆர். ராஜகுமாரி, கிரிஜா ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

பெண்ணரசி

தமிழ் வருஷப் பிறப்பன்று (இம் மாதம் 14ம் தேதி) ரஸிகர்களை மகிழ்விக்க வருகிறது. "பெண்ணரசி" தமிழ்ப் படம். எம். ஏ. வி. பிக்சர்ஸின் இரண்டாவது தயாரிப்பாகும் இது. ஒரு வீரங்கனையின் கதையாகஇருக்கும் இது எனத் தெரிகிறது. இப் படத்தின் கதை வசனத்தை ஏ. பி. நாகராஜன் எழுதியிருக்கிறார். இப் படத்தில்பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளைக் காணலாமெனத் தெரிகிறது. கே. சோமு படத்தின் டைரெக்டர். ஏ. பி. நாகராஜன், எம். என். நம்பியார், ஏ. கருணாநிதி, வி. எம். ஏழுமலை, இ. ஆர். சஹாதேவன், பி. கண்ணாம்பா, சூர்யகலா, ராஜசுலோசனா, இ. வி. சரோஜா ஆகப் பலர் நடித்துள்ள இப்படம், படப்பிடிப்பு முடிவடைந்து நகாசு வேலைகள் பெற்று வருகிறது.

மஹேஸ்வரி

மாடர்ன் தியேட்டர்ஸிலிருந்து அடுத்து சீக்கிரமே திரைக்கு வரக்கூடிய படமாக இருக்கும் அவர்களது "மஹேஸ்வரி" தமிழ்ப் படம். கணவனுடைய அன்பே பெரிதென்ற லக்ஷியத்திற்குப் போராடும் ஒரு உத்தமியின் கதையாம் "மஹேஸ்வரி". இப் படத்தின் வசனங்களை ஸ்ரீதர் எழுதியிருக்கிறார். சாவித்திரி, ஜெமினி கணேசன், எம். என். ராஜம், தங்கவேலு ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களாக நடித்து வருகின்றனர். இப்படத்தை கே. ராம்நாத் டைரெக்ட் செய்து வருகிறார்.

கணவனே கண்கண்ட தெய்வம்

நாராயணன் கம்பெனியாரின் "கணவனே கண்கண்ட தெய்வம்" தமிழ்ப் படத்திற்கான சிலகாட்சிகள் சென்ற மாதம் பம்பாய் மெஹ்பூப் ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டன. 'கேவா' கலரில் மேற்படி படத்தில் சேர்க்கப்படவிருக்கும் காட்சிகளே ஆகும் அவை. நாகய்யா, அஞ்சலி, ஜெமினி கணேசன், நம்பியார், முத்துலக்ஷ்மி, பானுமதி ஆகியோர் இக் காட்சிகளில் நடித்தார்கள். இப் படத்தில் கண்ணிழந்த மன்னனாக நாகய்யாவும், அவரது மகளாக அஞ்சலி தேவியும், அவள் மனதைக் கவரும் வீரனாக ஜெமினி கணேசனும் நடிக்கிறார்கள். வீரனைக் காதலித்தும் கைகூடாத நாகலோகக் கன்னிகையாக பானுமதி நடிக்கிறார். பல அருமையான சம்பவங்களைக் கொண்ட கிராமியக் கதையாக இருக்கும் இப் படக் கதை. வசனங்களை கே. வி. ஸ்ரீனிவாஸன் எழுதியிருக்கிறாராம். படத்தை டி. ஆர். ரகுநாத் டைரெக்ட் செய்து வருகிறார். இப் படமும் அநேகமாக மன்மத வருஷப் பிறப்பன்றே திரைக்கு வந்துவிடலாம்.

அவனே கடவுள்

"எவன் ஒருவன் தனது சுகங்களை மறந்து தன்னைச் சார்ந்தோருக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணிக்கிறானோ, அவனே கடவுள்" என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டதாய் இருக்கும் "அவனே கடவுள்" படக் கதை. சந்திரிகா புரொடக்ஷன்ஸின் தயாரிப்பான இப் படத்திற்கு ஏ. எல். நாராயணன் வசனங்களை எழுதுகிறார். திரைப்பட உலகில் பல வருஷ அனுபவம் பெற்ற எஸ். கே. வாசகம் டை

முன்பு அகில இந்திய ரேடியோவில் பணியாற்றி வந்த பி. ஸி. ராஜ் புரட்யூஸராக மாறி, "அவனே கடவுள்" படத்தைத் தயாரிப்பதோடு அதில் அவரும் நடிக்கிறார்.



டைரெக்டர் ப. நீலகண்டன் கொஞ்சி விளையாடும் பேபி உமா "மு,ுல் தேதி" படத்தில்நடித்துள்ள பெண்தான்.

ரெக்ஷனில் படம் பில்ம் சென்டரில் ஷூட்டிங் ஆரம்பமாகி நடந்து வருகிறது. கே. ஆர். ராமசாமியும் குமாரி ருக்மணியும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தில் அவர்கள் தவிர சுதாகர், சுவர்ணமாலா ஆகிய புது முகங்களும் நடித்து வருகின்றனர். அகில இந்திய ரேடியோவில்— நாடகத் துறையில் பணியாற்றி வந்த பி. ஸி. ராஜ் முன்னின்று தயாரிக்கும் இப் படத்தில் அவரே ஒரு முக்கிய பாத்திரமாக நடிக்கவும் செய்கிருர்.

மாமன் மகள்

டைரெக்டர் ஆர். எஸ். மணியின் தயாரிப்பான "மாமன் மகள்" படப்பிடிப்பு நெப்டியூன் ஸ்டுடியோவில் துரிதமாகநடைபெற்று வருகிறது. படத்தின் கதை—வசனத்தை ஸ்ரீதர் எழுதி யிருக்கிருர். ஜெமினி கணேசன்—சாவித்திரி இப்படத்தில் காதல் ஜோடியாக நடித்து வருகின்றனர். மற்றும் இப் படத்தில் பாலய்யா, சந்திரபாபு, துரைராஜ், ஸி. கே. சரஸ்வதி ஆகியோரும் நடித்து வருகின்றனர்.

போர்ட்டர் கந்தன்

தமிழ் வருஷப் பிறப்பன்று வெளிவரப்போகும் மற்ருெரு படமாகும் நரஸூவின் தயாரிப்பான "போர்ட்டர் கந்தன்". ஒரு ரயில்வே கூலியின் வாழ்க்கையைச் சுற்றிப் பின்னப் பட்டுள்ள இக் கதையில் கூலியாக எம். கே. ராதா மிகவும் இயற்கையாக நடித்திருக்கிருராம். அவரது மனைவியாக ஜி. வரலக்ஷ்மி திறம்பட உணர்ச்சியுடன் நடித்துள்ளாராம். நரஸூவின் பெயர் புகழ்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு அதன் அதிபர் வி. எல். நரஸூ தமது மேர்ப் பார்வையில் ஏராளமாகப் பொருட்செலவு செய்து—இப் படத்தைத் தயாரித்திருக்கிருர். டைரெக்டர் கே. வேம்புவுக்கு இப் படம் இதுவரை அளிக்காத பெரும் புகழை அளிக்குமாம். ராதா—வரலக்ஷ்மி தவிர, லலிதா என்ற ஒரு புது முகம் இப்படத்தில் பிரமாதமாக நடித்திருக்கிருராம். இவர்கள் தவிர டி. பாலசுப்ரமண்யம், முஸ்தாபா, டி.எஸ். துரைராஜ், எஸ். வி. சுப்பய்யா, எம். என். நம்பியார், கே. துரைஸ்வாமி, டி. பி. முத்துலக்ஷ்மி ஆகப் பலர் நடித்துள்ளனர்.

நான் பெற்ற செல்வம்

வெகு சுருசுருப்பாகப் படமாகி வருகிறது. "நான் பெற்ற செல்வம்" என்ற தமிழ்ப் படம் எனத் தெரிகிறது. 'நல்லது சொல்லுவது, நன்மையைச் செய்வது, உள்ளதை உரைப்பது' இவைகளை எடுத்துக் காட்டுவதாக இருக்குமாம் இந்த "நான் பெற்ற செல்வம்". பாரகன் பிக்சர்ஸின் முதல் தயாரிப்பான இது கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. இப்படத்தின் கதை வசனத்தை ஏ. பி. நாகராஜன் எழுதியிருக்கிருர். படத்தின் சங்கீத டைரெக்ஷனை ஜி. ராமநாதனும், டைரெக்ஷனை கே. சோமுவும் கவனித்து வருகின்றனர். சிவாஜி கணேசன், கே. சாரங்கபாணி, சிறுகளத்தூர் சாமா, வி. கே. ராமசாமி, வி. எம். ஏழுமலை, ஏ. கருணாநிதி, ஜி. வரலக்ஷ்மி, எம்.என். ராஜம்,

டி. பி. முத்துலக்ஷ்மி, வி. டி. ராஜகாந்தம் ஆகிய பிரபல நக்ஷத்திரங்கள் நடித்து வருகின்றனர்.

படித்த பெண்

நளினி பிக்சர்ஸ் என்ற புதிதாக ஆரம்பமாகியுள்ள படக் கம்பெனியார் "படித்த பெண்" என்ற ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரித்து வருகின்றனர். திருவேங்கடம் டைரெக்ஷனில் இப்படம் சியாமளா ஸ்டுடியோவில் படமாகி வருகிறது. எம். என். நம்பியார், கண்ணப்பா, டி. கே. பாலசந்தர், லலிதா (புது முகம்) ராஜசுலோசன ஆகியோர் இப்படத்தில் முக்கிய பாகங்களில் நடித்து வருகின்றனர்.

செல்லப் பிள்ளை

எம். வி. ராமன் டைரெக்ஷனில் உருப்பெற்று முடிந்து வரும் "செல்லப பிள்ளை" தமிழ்ப் படம் இம்மாதம் 14உ திரைக்கு வருகிறது. ஏவி. எம்மின் இத் தயாரிப்பிலே காதுக்குஇனிய கீதங்கள், வயிறு வெடிக்கும் ஹாஸ்யம், கவர்ச்சிகரமான நடனங்கள் இப்படிப் பொது ஜன ரஞ்சகமான பல அம்சங்கள் இடம் பெற்றுள்ளதாகத் தெரிகிறது. இப் படத்தின் கதையில் சில மாறுதல்களை செய்து வசனங்களையும் எழுதியிருக்கிருர் ஜாவர் சீதாராமன். அத்துடன் அவர் இப் படத்தில் ஒரு தமாஷான கதாபாத்திரமாகவும் நடித்துள்ளார். இப்படத்தில் வரும் "குல்லாப் பாட்டு" பிரமாதப்படும் எனத்தெரிகிறது. கண்ணும்பா, சாவித்திரி, பண்டரி பாய், கே. ஆர். ராமசாமி, பி. ஆர். பந்துலு, டி. எஸ். பாலய்யா, தங்கவேலு, ராதாகிருஷ்ணன், வாதிராஜ் ஆகியவர்கள் இப் படத்தில் நடித்துள்ளனர்.



"நான் பெற்ற செல்வம்" துவக்க விழாவிற்கு வந்தவர்களை ஏ. பி. நாகராஜன் வரவேற்றுப் பேசினர்.

தெனலி ராமன்

விக்ரம் புரொடக்ஷன் ஸின் "தெனலி ராமன்" தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு சென்ற மாதம் 25ம் தேதி ரேவதி ஸ்டுடியோவில் ஆரம்பமாகிவிட்டது. இப் படத்தில் சிவாஜிகணேசன் தெனலி ராமனகவும், என். டி. ராமராவ் கிருஷ்ண தேவ ராயராகவும், நாகய்யா

காயல் பட்டினத்தில் பின்னணிப் பாடகர் திருச்சி லோகநாதனுக்கு முதல் மந்திரி காமராஜ நாடார் அவர்கள் "இசைத் தென்றல்" என்ற பட்டத்தை வழங்கிரை்.

அப்பாஜியாகவும், தாத்தாச்சாரியாக நம்பியாரும், கிருஷ்ணாவாக பானுமதியும், ஜமுனா கமலாவாகவும், பாலசரஸ்வதி ராதாவாகவும் நடித்து வருகின்றனர். விஸ்வநாதன், ராமமூர்த்தி சங்கீத டைரெக்ஷன் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள். இப் படத்தின் வசனங்களை கண்ணதாஸன் எழுதியிருக்கிறார். படத்தை டைரெக்ட், செய்வதுடன், ஒளிப்பதிவையும் தாமே செய்கிறார் பி. எஸ். ரங்கா. இதே படத்தை "தெனாலி ராமகிருஷ்ணா" என்ற பெயரில் தெலுங்கிலும் படமாக்கி வருகிறார். தெலுங்குப் படத்தில் நாகேஸ்வரராவ் தெனாலி ராமனாக நடிக்கிறார்.

நல்ல நாள்

லக்ஷ்மி புரொடக்ஷன்ஸார் "நல்ல நாள்" என்ற தங்கள் படத்தின் படப்பிடிப்பை வாஹினியில் ஆரம்பித்துவிட்டார்கள். சென்ற மாதம் 30ம் தேதி வாஹினியில் விஜயா புரொடக்ஷன்ஸ் அதிபர் நாகி ரெட்டி காமிராவை முடுக்கிவிட இப்படப் பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. ஏ. பி. ராஜ் என்பவர் டைரெக்ட் செய்யும் இப் படத்தின் சங்கீத டைரெக்டரும் அவர்தான். படத்தின் கதை—வசனத்தை கே. ஆர். ராஜகோபாலன் என்பவர் எழுதியுள்ளார். ஜெமினி கணேசன், ராஜசுலோசனா, சட்டாம்பிள்ளை வெங்கட்டராமன், எம். என். ராஜம் ஆகியோர் இப் படத்தில் நடித்து வருகின்றனர்.

கிரஹலக்ஷ்மி

ரோஹிணியின் "கிரஹலக்ஷ்மி" தமிழ்ப் படமும் ரஸிகர்கள் காணப் போகும் புத்தாண்டுப் பரிசாக இருக்கும். தெலுங்கிலே படமாகத் தயாரித்து வெற்றிகண்ட

ஏவி எம். மின் "செல்லப் பிள்ளை" பட ஷூட்டிங்கின்போது நம் காமிராவுக்குள் அகப்பட்ட காட்சி இது! தங்கவேலு சாவித்திரி இவர்களுக்கு அருகிலுள்ள ரேலங்கியின் தோள்மீது கை வைத்து நிற்பவர்தான் பிரபல அகில இந்திய டைரெக்டர் எம். வி. ராமன்.



திரிவேணி பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்பின் 'நாமகரண விழா'வின் போது கூடியிருந்த கூட்டத்தில் ஒரு பகுதி. மாதுரி தேவி, மனோஹர், குமுதினி முதலிய பிரபல நக்ஷத்திரங்களை மேலே உள்ள படத்தில் நாம் காணலாம்.

கல்தயாகும் இது. எச். எம். ரெட்டியின் மேற்பார்வையில் அவர் தயாரிப்பாகும் இது. படத்தை எச். வி. பாபு டைரெக்ட் செய்துள்ளார். எம். கே. ராதா, அஞ்சலி தேவி, மீனாக்ஷி, ரகுவீர், கிட்டன், சாயிராம், பீர் முஹமது, அங்கமுத்து ஆகிய பலர் நடிக்கும் இப் படத்தில் நாகய்யாவும் குமுதினியும்கூட வந்து போகிறார்களாம். இப்படத்தை குட்வில் பிக்சர்ஸார் வெளியிடுகிறார்கள்.

ஆசை

"அன்பு" படத்தைத் தயாரித்த நடேஷ் ஆர்ட் புரொடக்ஷன்ஸார் தங்களது இரண்டாவது படமாக "ஆசை" என்ற கதையை உருவாக்கப் போகிறார்களாம். இதன் வசனத்தை, "இளங்கோவன்" எழுதுகிறார். கே. ஆர். ராமசாமி, ராஜ சுலோசனா, நாகய்யா, பி. சாந்தகுமாரி ஆகியோர் பிரதம பாகங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளனர்.

சிலம்பு

ஏற்கெனவே பதினான்கு ஆண்டுகளுக்கு முன், சிலப்பதிகாரத்தை "கண்ணகி" என்ற பெயரில் தமிழ்ப் படமாகத் தயாரித்து வெற்றி கண்ட ஜூபிடர் பிக்சர்ஸ் மீண்டும் அக்காவியத்தை "சிலம்பு" என்ற பெயரில் படமாக்கப் போகிறார்கள். இது எம். சோமசுந்தரம் (சோமு) தயாரிப்பாக தமிழ்-தெலுங்கு-ஹிந்தி மூன்று பாஷைகளிலும் படமாக்கப்படுமாம். "சிலம்பு" இம்முறை வர்ண ஓவியமாகத் தயாரிக்கப்படுமாம்.

மிஸ் நிர்மலா

சில டெக்னீஷியன்கள் கூட்டுறவில் ஆரம்பமாகியிருக்கும் திரிவேணி பிக்சர்ஸார் தாங்கள் தயாரித்து வரும் படத்திற்கு "மிஸ் நிர்மலா" என நாமகரணம் சூட்டியிருக்கிறார்கள். இப்படத்தின் கதையை "சம்சாரம்" புகழ் சதாசிவ பிரம்மம் எழுதிக் கொடுத்திருக்கிறார். மாதுரி தேவி, மனோஹர், ஸஹஸ்ரநாமம், தங்கவேலு, பிரண்ட் ராமசாமி, செல்லம், குமுதினி, சந்திர பாபு, சட்டாம்பிள்ளை வெங்கடராமன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இப் படத்தின் மூலம் புதிய முகம் ஒன்றையும் திரை உலகிற்கு அறிமுகப் படுத்தப் போகிறாராம் படத்தின் டைரெக்டரான என். கிருஷ்ணசாமி.

ஆசிரியை அல்லி

[ஆசிரியர் : தாரை கோ. கண்ணன் ; கிடைக்குமிடம் : 'திங்கள் கலையகம்'. 5, சர்ச் தெரு. தாராபுரம். விலை : 12 அணு.]

சின்னஞ் சிறு நாவலை திரைக் கதைக்கு ஏற்ற முறையில் வசனங்களுடன் இப்புத்தகத்தில் எழுதியிருக்கிருர் ஆசிரியர்.

பத்மினிக்கு ஏன் இந்த புத்தி?

[ஆசிரியர் : எஸ். எஸ். குப்புராஜு ; விலை : இரண்டணு ; கிடைக்குமிடம்: டபிளேஸ்கே பதிப்பகம் : 109. சந்தை ரோடு. திண்டுக்கல்.]

விசித்திரயான தலைப்பைக் கொண்ட இச் சிறு புத்தகத்தில், ஆசிரியர், சில மாதங்களுக்கு முன்னர் திருவாங்கூர் சகோதரிகள் படவுலகை விட்டு விலகப் போவதாக அறிக்கை வெளியிட்டது குறித்து ஆராய்ச்சி செய்திருக்கிருர். அவர்கள் முடிவு ஓரளவுக்குச் சரியானது என்று தம் போக்கில் முடித்திருக்கிருர்.

நிவேதனம்

[ஆசிரியர் : கலைவாணன்: விலை: ருபாய் ஒன்று, கிடைக்குமிடம் : பழனி பிரசுரம், 107, பெரிய தெரு, சென்னை –5.]

ஆசிரியரின் ஐம்பது கவிதைகள் இப்புத்தகத்திலே இடம் பெற்றுள்ளன. கவிதைகள், பல்வேறு கருத்துகளும் கொண்டவைகளாக இருக்கின்றன.

சிந்தாமணி

இலக்கிய மாதப் பத்திரிகைகளின் ஜாபிதாவில் புதுச் சேர்க்கையாகும் இந்த "சிந்தாமணி" பத்திரிகை. 'கண்ணன்' தீட்டிய கலைவாணியின் அழகிய சித்திரத்துடன் முதல் இதழ் வெளியாகி, இரண்டாவது, மூன்ருவது, நான்காவது ஐந்தாவது, இதழ்களும் தொடர்ந்து வெளி வந்து விட்டன. முதல் இதழிலே பாபநாசம் சிவனின் வாழ்த்தும், நாமக்கல் கவிஞரின் ஆசியும் கவிதைகளாக மிளிர்கின்றன. தமிழ் நாட்டிலுள்ள சில நல்ல எழுத்தாளர்களின் சிறு கதைகளும், "மாயாவி"யின் "பெண்" என்ற நீளச்

உயருங்கள்

பதினைந்து நாட்களுக்குள் 2 முதல் 6 அங்குலம் "வொயிட் பில்ஸ்" மூலம் உயரமாகுங்கள். 40 வயது வரையுள்ள ஆண், பெண் இரு பாலருக்கும் தகுந்தது. குணம் உத்திரவாதம். இல்லையேல் முழுத் தொகை வாபஸ். M. O. மூலம் ரு. 6-0-0 அனுப்புங்கள்.

Dr. K. K. NARULA,
(G.M.) Kingsway, Delhi—9.

வயோதிகருக்கும் வாலிபருக்கும்

இழந்த வாலிபம், வீரியம், பலம் இவைகளுக்கு **க்ரீன் டானிக்.** முழுசு: ரூ. 10/-. அரை: ரூ. 6/-. தபால் செலவு ரூ. 1-12-0 தனி.

Dr. K. K. NARULA,
(G.M.) Kingsway, Delhi—9.

இனும்! இனும்!! இனும்!!!



எமது நெ.501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன்மூலம் எல்லாவிதமான மயிரும் மைக் கருப்பாக மாறி. பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து. மிகவும் நீண்டதாகவும். பிரகாசமாகவும். சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை ரூ. 1-15-0. 3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5-0-0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட் வாட்சும், நியூகோல்டு மோதிரமும் அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிரேம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட்வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனல் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும் :

London Commercial Company
P. B. 2, (G.M.) AMRITSAR.

பத்மினி பிக்சர்ஸ்
முதல் தேதி
சில காட்சிகள்

சிறு கதையும் இடம் பெற்றுள்ளன. "சாண்டில்ய"னது சினிமாப் பகுதி சுவாரஸ்யமாக உள்ளது. 'சமர்ப்பண'த் தலையங்கம்தான் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் த்வனியில் அமைந்துவிட்டது. தனிப் பிரதி நான்கணா விலையுள்ள இப்பத்திரிகை, 180, மவுண்ட் ரோடு, சென்னை-2 என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

தாமரைக் குமரி

[ஆசிரியர்: மு. அண்ணாமலை; விலை: ரூ. 1-8-0; வெளியிட்டோர்: அன்புப் பண்ணை, சென்னை-5; கிடைக்கும் இடம்: பழனி பிரசுரம், புதுக்கோட்டை, திருச்சி, சென்னை-5.]

ஆசிரியரால் எழுதப்பட்டுள்ள 32 கவிதைகளின் தொகுப்பாகும் இது. இயற்கை, காதல் இவைகளைக் குறித்து அதிகமான கவிதைகள் உள்ளன. பாரதி, பாரதிதாஸன் இவ் விருவரையும் பற்றிக் கூட கவிதைகள் புனைந்திருக்கிறார். அழகிய அட்டைப் படத்துடன் கூடிய இப்புத்தகத்தின் உள்ளடக்கமும் சிறப்பாகவே உள்ளது.

PRINTECH

இந்த ஆங்கிலப் பத்திரிகை "தி இந்தியன் பெடரேஷன் ஆப் பிரின்டிங் டெக்னாஜிஸ்ட்ஸ்" ஸ்தாபனத்தால் வெளியிடப்படுகிறது. அச்சடித்தல் விஷயமான கட்டுரைகள் அடங்கியுள்ள இப்பத்திரிகை அச்சுத் தொழிலில் ஈடுபட்டுள்ள பலருக்கும் பயன்படும்.

கலாவல்லி

[ஆசிரியர்: பி. எம். கண்ணன்; விலை; தனிப் பிரதி அணா 4; கிடைக்கும் இடம்: 12/13, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.]

தமிழ்ப் பத்திரிகை உலகில் புதிதாகத் தோன்றியுள்ள ஒரு பத்திரிகையாகும் "கலாவல்லி" என்ற இந்த மாதப் பத்திரிகை. முதல் இதழில் ரா. பி. சேதுப்பிள்ளை, கி. வா. ஜகந்நாதன் ஆகியோரது கட்டுரைகளும், பி. வி. ஆர்., "எல்லார்வி" இவர்களின் சிறுகதைகள் இவைகளுடன் பி. எம். கண்ணன் எழுதும் "நிலவுத் தாமரை" என்ற தொடர்கதையும் ஆரம்பமாகி யுள்ளது. பத்திரிகை உலகில் பல வருஷ அனுபவம்பெற்ற பி. எம். கண்ணனை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திரிகை தமிழ் இலக்கிய உலகில் ஒரு புது முயற்சியாகும்.

தி

யுனைட்டெட் கமர்ஷியல் பாங்க் லிமிட்டெட்

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

செலுத்தப்பட்ட மூலதனம் 2 கோடி ரூபாய்

ஒதுக்கப்பட்ட மூலதனம் $86\frac{1}{2}$ லக்ஷ ரூபாய்

வேலையும், சேவையும்

இந்த பாங்க், டெபாஸிட்களை பெற்றுக்கொள்கிறது; அங்கீகரிக்கப்பட்ட ஈடுகளின்பேரில் கடன் கொடுக்கிறது; பில்களை விலைக்கு வாங்குகிறது; உண்டிகளை விற்கிறது; தந்தி மூலம் பணம் மாற்றிக் கொடுக்கிறது; மற்றும் எல்லா விதமான வெளிநாட்டு நாணயமாற்று வியாபாரங்களையும் செய்கிறது. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏராளமான கிளை ஸ்தாபனங்களை அமைத்துக் கொண்டு, அகில உலக வியாபகமான ஏற்பாடுகளைச் செய்திருப்பதால், உங்களுக்கு ஒரு பாங்க் மூலம் ஆக வேண்டிய எந்தக் காரியமானாலும் இந்த பாங்க் செய்துகொடுக்கும்.

ஜி. டி. பிர்லா,
அக்ராசனர்.

பி. டி. தாகூர்,
ஜெனரல் மானேஜர்.

இ. ஆர். சகாதேவன்

ஒரு ட்டத்திற்குக் கதாநாயகன், நாயகி எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானவர்கள் உப நடிகர்களும், நடிகைகளும். நடிப்புத் திறமையுள்ள ஒருவர் புகழ் பெறுவதற்கும் நக்ஷத்திர மதிப்புப் பெறுவதற்கும் கதாநாயகன், நாயகி வேஷங்களில் தோன்றித் தான் ஆகவேண்டும் என்பதில்லை. உப பாத்திரங்கள் மூலமே பிரதம பாத்திரங்களைக் காட்டிலும் அதிகமான புகழைப் பெற முடியும் என்று அநேக நடிகர் நடிகைகள் நிரூபித்துக் காட்டியிருக்கின்றனர். அவர்களில்ஒருவரே "மலைக் கள்ளன்" புகழ் இ. ஆர். சகாதேவன்.

சகாதேவன் இதுவரையில் கால் நூறு படங்களுக்கு மேலாகவே நடித்து விட்டார். அவர் பலதரப்பட்ட பாத்திரங்களிலும் தோன்றி யிருக்கிறார். இதனால் அவரது பெயர் சாதாரணமாக எல்லா ரஸிகர்களுக்கும் தெரிந்த பெயராகியிருக்கிறது. அதோடு

"நால்வர்" தமிழ்ப் படத்தில் சகாதேவன்.

அவர் ஒருநல்ல உபபாத்திர நடிகர் என்பதையும் அவர்கள் அறிவார்கள்.

கவி பாரதியாரின் பிறந்த ஊரான எட்டயாபுரமே நம் சகாதேவனுடைய சொந்தஊர் ஆகும். அந்த ஊரில்—எட்டயபுரம் ராஜாவிடம் மெய்க்காப்பாளராக இருந்த ராமசாமித் தேவர் என்ற ஒருவர் வசித்து வந்தார். அவரது மனைவி முத்தம்மாள் பதினோரு குழந்தைகளைப் பெற்றெடுத்தார். அவர்களுள் ஒன்பதாவதாக, 1918ம் வருஷம் ஜூன் மாதம் 5ம் தேதி பிறந்தவரே சகாதேவன். இவருக்கு மூத்தவர்கள் ஐந்து ஆண்களும் மூன்று பெண்களும், இளையவர்கள் ஒரு தம்பியும் தங்கையும் ஆவர். சகாதேவன் குடும்பத்தினரோ, நெருங்கிய உறவினர்களோ யாருக்கும் சினிமா நாடக சம்பந்தமே கிடையாது. அவருடன் பிறந்தவர்கள் வியாபாரம், உத்தியோகம் இப்படி வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். சகாதேவன் முதலில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். ஆனால், அவரது கவனமெல்லாம் படிப்பில் ஆழ்ந்து போய் விடாமல் இதர விஷயங்களிலேயே சென்றுகொண்டிருந்தது. இயற்கையாகவே இனிய குரல் வசதியைப் பெற்றிருந்ததால் காதில் விழும் பாட்டுகளை யெல்லாம் அவர் பாடிக்கொண்டிருப்பார். இதன் விளைவாக, அந்த ஊரில் உள்ள முருகன் கோயில் பஜனைகளில் இவருக்கு "சான்ஸ்" கிடைத்தது.

இப்படி யிருக்கையில், (மேடையின் மீதே உயிர் துறந்த) பிரபல நடிகர் விஸ்வநாத தாஸின் நாடகக் கம்பெனி பக்கத்து ஊர்களில் நாடகங்களை நடத்தி வந்தது. அந்தக் கம்பெனியில் பிரதம நடிகராய் இருந்து வந்த

"ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி"யில்

''கலாநிதி'' படத்தில்'

''நால்வர்'' படத்தில்

தென் காசி ஷண்முக சுந்தரப் புலவர் என்பவர் எட்டயாபுரத்தில் வசித்து வந்த ஹார்மோன்யம் சோமய்யாவை பார்ப்பதற்காக அடிக்கடி வருவது வழக்கம். இப்படி வந்த போது அவர் ஒரு தடவை சகாதேவன் பாடிய பஜனைப் பாட்டுகளைக் கேட்க நேர்ந்தது. உடனே அவருக்குப் பையனைத் தம் நாடகக் கம்பெனியில் சேர்த்து விட வேண்டும் என்று தோன்றியது. சகாதேவனின் பெற்றோர்களும் ஆமோதித்தனர். ஆகவே, அந்தப் புலவர் ஊர் திரும்பிய போது, சகாதேவனையும் கூட அழைத்துச் சென்று கம்பெனியில் சேர்த்தார். அப்பொழுது சகாதேவனுக்கு ஏழே வயது தான் நிரம்பியிருந்தது. கம்பெனியில் கந்தசாமிப் புலவர் சகாதேவனுக்கு முதல் குருவாய் அமைந்து, நாடகம் சம்பந்தமான விஷயங்களை யெல்லாம் அவருக்கு போதித்து வந்தார். சகாதேவனே தம் ஊரில் பள்ளியில் படித்த படியே விஸ்வநாத தாஸின் ஸ்பெஷல் நாடகங்களிலும் நடித்து வந்தார். முதன் முதலில் அவருக்கு மோஹினி ராஜா வேஷமும், முழுதாக மூன்று ரூபாய் சம்பளமும் வழங்கப் பட்டது!

சகாதேவன் சுமார் மூன்று வருஷ காலம் விஸ்வநாத தாஸ் கம்பெனியில் இருந்தார். அந்த சமயத்தில், மதுரை பெரிய தகரக் கொட்டகையில் ஜகன்னதய்யர் கம்பெனி நாடகங்களை நடத்திவந்தது. பால மீன ரஞ்சனி சங்கித சபா என்ற அக்கம்பெனியை நாகலிங்கம் செட்டியார் என்பார் விலைக்கு வாங்கிக் கொண்டு, பெயரை பால மோஹன ரஞ்சனி சங்கித சபா என்று மாற்றி வைத்தார். எம். கே. ராதா, எஸ். வி. வெங்கட்டராமன் (தற்போதைய சங்கீத டைரெக்டர்), டி. வி. சேதுராமன், டி. ஆர். ராமச்சந்திரன் ஆகியோர்

அந்த சமயத்தில் கம்பெனியில் இருந்தனர். படிப்பை நிறுத்திவிட்டு சகாதேவன் இக்கம்பெனியில் சேர்ந்தார். அவருக்கு முதன்முதலாக பரதன் வேஷம் கிடைத்தது. இந்தக் கம்பெனியில் வாத்தியாராக இருந்த கந்தசாமி முதலியார் சகாதேவனுக்கு மிகுந்த சிரத்தையுடன் பயிற்சி அளித்து, அவரை ஒரு நல்ல நடிகனுக்கி வைத்தார்.

சுமார் மூன்று வருஷங்கள் நடந்தபின் இக்கம்பெனி மூடப்பட்டது. சகாதேவனும், இதர சில நடிகர்களும் பொன்னுசாமிப் பிள்ளை கம்பெனியில் போய்ச் சேர்ந்தனர். சிறிது காலத்திற்குப்பின் அக்கம்பெனியும் நின்றது. அதன் பிறகு, சகாதேவன் செய்யாறு தாலூகா திருவொத்தியூர் பால கான சபாவில் சேர்ந்து சுமார் ஐந்து வருஷ காலம் நடித்தார். அக்கம்பெனி சளைத்துப் போகும் நிலைமையில் இருந்தபோது, குறிஞ்சிப்பாடியில் புதுக் கம்பெனி ஆரம்பித்திருந்த எஸ். வி. வெங்கட்டராமன் இவரை அழைத்தார். அவரது அழைப்பிற்கு இணங்க சகாதேவன் சென்ருர். கம்பெனி சரிவர நடைபெருததால், அவரும் இதர நடிகர்களும் பல கஷ்டங்களுக்குள்ளாயினர். முடிவில் சகாதேவன் பழனிச்சாமி ஐயர் என்ற ஒருவரிடம் டிக்கெட்டிற்குப் பணம் வாங்கிக் கொண்டு, கோயில்பட்டி போய்ச் சேர்ந்தார்.

'இனி நாடகக் கம்பெனிகளில் இருந்து கொண்டு அவஸ்தைப்படக்கூடாது; சினிமாவில் முயற்சித்துப் பார்க்க வேண்டும்' என்ற எண்ணம் சகாதேவனின் மனதில் உதயமாயிற்று. அதற்கேற்றுர்ப் போல் அவருக்கு மீனுக்ஷி ஸினிடோன் முதலாளி வள்ளி நாயகம் பிள்ளையவர்களிடமிருந்து அழைப்பு வந்தது—அவர்கள் தயாரிக்க விருந்த "ராஜசேகரன்" படத்தில் நடிப்பதற்காக.

தஞ்சை விஸ்வநாதய்யர் என்பவரால் எழுதப்பட்ட "ராஜசேகரன்" அதற்கு முன்பாகவே மேடையில் நாடகமாக நடிக்கப்பட்டு பிரபலம் அடைந்திருந்தது. அதோடு, அக்கதையில் ஜெயவீரன் பாத்திரத்தைநடிப்பதில் இணையற்றவர் என்று சகாதேவன் புகழ்பெற்றிருந்தார். ஆதலால், கதாசிரியர் செய்த சிபாரிசு காரணமாகவே பிள்ளையவர்கள் சகாதேவனை அழைத்திருந்தார். இந்தப் படம்தான் எம். ஆர். ராதாவும் நடித்த முதல் படம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆர். பிரகாஷ் டைரெக்ஷனில் (1937ல்) வெளிவந்த இப்படம் வெற்றி பெறவில்லை. சகாதேவனின் நிலைமை இரண்டும் கெட்டான் பிழைப்பாகி விட்டது. எப்பொழுதாவது ஸ்பெஷல் நாடக 'சான்ஸ்' கிடைக்கும்; நடித்து விட்டு சொற்பத் தொகையுடன் திரும்புவார். இப்படியாக அவர் இரண்டு வருஷ காலம் பட்ட கஷ்டம் பட்டினிக் கஷ்டமாகவே இருந்தது. கையில் கிடைத்த எதையாவது புசித்துவிட்டு, மதுரை மீனுக்ஷி அம்மனை வலம் வருவதில் அவரது காலம் கழிந்துவந்தது.

[தொடர்ச்சி 86-ம் பக்கத்தில்]

"லக்ஸ் டாய்லட் சோப்பிலுள்ள புது மணம் எவ்வளவு கவர்ச்சியானது என்று உங்களுக்குத் தெரியுமா?"
— நிகார்
LUX
TOILET SOAP
★ சினிமா நட்சத்திரங்களின் சுத்தமான, வெண்மையான, அழகுதரும் சோப் ★
இந்தியாவில் தயாரித்தது.
LTS. 436-50 TM

நுனிப்புல்

வெட்டுக்கிளி

என்னுடைய ரஸிகர்களுக்கெல்லாம் என் மீது ரொம்ப ரொம்பக் கோபம் அதை வெளிப்படுத்தும் வாயிலாக, அவர்கள் என்மீது பாணம் தொடுத்திருக்கிறார்கள்—பல கடிதங்களின் வாயிலாகத்தான். அவர்களுடைய கோபத்திற் கெல்லாம் காரணம், நான் ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மௌனமாயிருப்பதுதான். ஒருகதை-வசனகர்த்தா 'சினிமாப் பத்திரிகைக'ளைப்பற்றி விமரிசிக்கப் போனவர், நம் "குண்டூசி" பத்திரிகையையும் பற்றி அதில் பேத்தியிருந்தார். அதாவது நமது பத்திரிகை ஒரு "ஓல்ட் மாடல்" என்று. அவருடைய இந்தப் பேத்தலுக்கு நான் சரியானபடி சாட்டை அடி கொடுக்கவில்லை என்பதே நமது நேயர்களின் கோபத்திற்குக் காரணம். இப்பகுதியில், அந்தக் கதாசிரியரைப் பொருட்படுத்தி பதில் எழுதி அவரைப் பெரிய மனிதராக்க விருப்பமில்லாமலே இது நாள் வரை நான் சும்மா யிருந்தேன். அபிமானிகளின் அன்புக் கட்டளைக்கு அடிபணிந்து சுருக்கமாகப் பதிலளித்து விட்டு நிறுத்திவிடுகிறேன்.

• • •

திடீர் திடீரென்று சில பத்திரிகைகளுக்கு, பட உலகிலுள்ள சில நபர்களுக்கு மண்டையில் தினவு எடுக்கும். அவர்கள் நம் மீது வந்து முட்டிக் கொண்டு மண்டையை உடைத்துக் கொண்டு போய்ச் சேர்வார்கள். அதாவது, அவர்கள் அந்தரங்கமான எண்ணம், நம்மைத் தாக்கி நாம் அவர்களுக்கு பதில் எழுதி அதனால் தாங்கள் பிரபலமாகி விடலாம் என்பது தான். ஆனால், பாவம், அவர்கள் நம்மிடம் மோத வந்து மண்ணைக் கவ்வ வேண்டிய நிலைதான் ஏற்படுகிறது. சில வருஷங்களுக்கு முன் ஒரு பத்திரிகாசிரியருக்கு—அவர் பத்திரிகைக்கு ஏற்பட்ட தலைக்குனிவு, பாவம், இந்த வசனகர்த்தாவுக்குத் தெரியாது போலும்! கலைக்கு சேவை செய்வதாகக் கிளம்பிய மேற்படி பத்திரிகை, தான் பிரபலமாக வேண்டுமென்ற ஒரே நோக்கத்தோடு நம் மீது மோதிப் பார்த்தது. அப்பொழுது நாம் அதற்குக் கொடுத்த பதில் அப்பட்டமாக அப்படியே பலித்து விட்டது. மேற்படி பத்திரிகைக்கு நாம் மூடுவிழாக் கொண்டாடுவதாக அப்பொழுது எழுதினோம். பாவம், அதே மாதிரி மேற்படி பத்திரிகை முதலில் சென்னையை விட்டு ஓடி, பிறகு மறைந்து போய், போன இடத்தில் புல்லும் முளைத்துவிட்டது. இதை எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் நாமாக வலுச் சண்டைக்குப் போக மாட்டோம்; அதற்காக வந்த சண்டையையும் விடமாட்டோம். அகாரணமாக நம் மீது போர் தொடுத்து நம்மிடம் மாட்டிக் கொள்பவர்கள் அடையும் கதிக்குத்தான் ஒரு உதாரணம் சொல்லி விட்டேனே? நிற்க.

• • •

மேற்படி வசனகர்த்தா நமது பத்திரிகையை சுத்த "ஓல்ட் மாடல்" என்று குறிப்பிட்டிருந்தது குறித்து எனக்கு மகிழ்ச்சிதான். ஏன் தெரியுமா? 'ஓல்ட் மாடல்'தான் எப்பொழுதுமே திடமானது என்பதை நாம் அன்றாட வாழ்க்கையில் பல துறைகளிலும் கண்டு வருகிறோம். பழைய காலத்து 'ரோல்ஸ் ராய்ஸ்' காருக்கு நிகராக இன்று வேறு கார் எதையாவது சொல்ல முடியுமா? பழையமுது சாப்பிட்டு வளர்ந்த எண்பது வயது ஆசாமிபோல் கதாசிரியரைப் போன்ற இளைஞர்கள் திடமாக இருக்க முடியுமா? அந்த வசனகர்த்தா இவைகளை யோசித்துப் பார்த்திருந்தால் நம்மை 'ஓல்ட் மாடல்' என்று குறிப்பிட்டிருக்க மாட்டார். இறுதியாகச் சொல்லுகிறேன், 'குண்டூசி' பத்திரிகை "ஓல்ட்மாடலா"னாலும் மற்றும் சில பத்திரிகைகளைப் போல் ஒரு "புஷ் (தள்ளு) மாடல்"

சிறுவர் சிறுமியர் விளையாடும் இந்த ரயில் தமாஷை "வள்ளியின் செல்வன்" தமிழ்ப்படத்தில் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

இல்லை. 'திருட்டு மாடல்' இல்லை. ஒரிஜனல் மாடல்; பல அபிமானிகள் எழுதியுள்ளதுபோல் நம்முடையது "கோல்ட் (பொன்) மாடல்". இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் இந்த வசன கர்த்தா தம்பட்டமடித்துக் கொள்ள வென ஒரு பத்திரிகை வைத்துக்கொண்டிருந்தும், மற்றொரு பத்திரிகை, அதுவும் நமது அபிமானி ஒருவர் நடத்துவது வாயிலாகப் பிதற்றியிருப்பது தான்!

• • •

சமீப காலமாக கலை உலகில் நடைபெற்றுவரும் சில நிகழ்ச்சிகளைப் பற்றி நினைக்கும்போது இதை "மயக்கம் போட்டு விழும் ஸீஸன்" என்று ஏன் குறிப்பிடக் கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. சென்ற மாதம் ஒருநாள் நவாப் ராஜமாணிக்கம் நடத்திய "குமார விஜயம்" நாடகத்தைப் பார்க்க வந்த ஒரு ஸ்த்ரீக்கு ஆவேசம் வந்து விட்டது. அவர் "முருகா முருகா" எனக் கதறி மயக்கமுற்றார். அவ்வளவு தான். கொட்டகையே "முருகா முருகா" நாமத்தால் எதிரொலித்தது. இந்த முருகன் வேஷமிட்டவர் இல்லை என நினைக்கிறேன். ஜெமினி "ஔவையார்" திரையிடப்பட்ட சமயம், முருகன் ஔவைக்கு தரிசனம் கொடுக்கும் காட்சியில் பல நகரங்களில் பலர் மயக்கமுற்றதாகச் செய்திகள் அடிபட்டன. அது உண்மை நிகழ்ச்சிதான் என்றாலும், 'விளம்பரத்திற்காகக் கையாளப்படும் தந்திரமோ அது' என்று பலர் சந்தேகிக்கும் அளவுக்குப் போய்விட்டது. ஜனவரி மாதம் சென்னையில் நடந்த, "தேவன்" எழுதிய, திருவல்லிக்கேணி பைன் ஆர்ட்ஸ் கிளப் அங்கத்தினர்கள் நடித்த "ஸ்ரீமான் சுதர்சனம்" நாடகத்தில் கூட ஆஞ்சநேயராக வந்த நபருக்கு ஆவேசம் வந்து ஆர்ப்பாட்டம் செய்து

நாம் கொஞ்சம் வேறு பக்கம் செல்வதே நாஸுக்கா்ய் இருக்கும்! "பெண்ணரசி" தமிழ்ப் படத்தில் சூர்யகலாவும், கதாசிரியர்—நடிகர் ஏ. பி. நாகராஜனும் காதல் புரியுமிடத்தில் நமக்கெனன வேலே ?

விட்டார் என்பதையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகவே படுகிறது!

• • •

இந்த சமயத்தில் விஜயாவின் "மிஸ்ஸியம்மா" சம்பந்தபபட்ட செய்தி ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. பேச்சுக்கு "வயிறு வெடிக்கச் சிரித்தல்" என்று சாதாரணமாகச் சொல்வது உண்டு. ஆனல் அது செய்கையிலேயே நடப்பதைப் பார்க்கும்போது உண்மையிலேயே மிகவும் வியப்பாக இருக்கிறது. அப்படிப்பட்ட செய்திதான் "மிஸ்ஸியம்மா" படம் சம்பந்தப்பட்டதும். மேற்படி படத்தைப் பார்த்த பூர்ண கர்ப்பிணிகளான இருவர் தியேட்டரிலேயே பிரசவித்து விட்டிருக்கிருர்கள். இவைகளில் ஒன்று, சென்னையிலும் மற்ருென்று பெங்களூரிலும் நடந்துள்ளது.

• • •

படம் பார்க்க வந்த கர்ப்பிணி ஸ்த்ரீ தியேட்டரிலேயே பிரசவிப்பது என்ற இந்த நிகழ்ச்சி தமிழ் நாட்டில் இது முதல் நிகழ்ச்சி இல்லே என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். "மா" (அம்மா) என்ற ஹிந்திப் படம் சில வருடங்களுக்கு முன் திரையிடப்பட்டது. அப்படத்தைப் பார்க்க வந்த ஒரு ஸ்த்ரீ தியேட்டரிலேயே அம்மாவாகும் வாய்ப்பைப் பெற்ருர். இது தமிழ் நாட்டில் ஒரு நகரத்தில் நடந்த நிகழச்சியாகும்.

• • •

"மிஸ்ஸியம்மா"வைப் பார்த்துவிட்டுப் பூர்ண கர்ப்பிணிகளான இருவருக்கு சுகப் பிரஸவம் ஏற்பட்ட இந்த சம்பவம் எனக்கு சில யோசனைகளை வெளியிட ஒரு வாய்ப்பை அளித்து விட்டது. அவைகள் வருமாறு :—

ஒவ்வொரு பிரசவ ஆஸ்பத்திரியிலும் ஒரு சிறு தியேட்டரைக் கட்டி வைக்க வேண்டும். பிரதி தினமும் அத் தியேட்டரில் "மிஸ்ஸியம்மா" படத்தைத் திரையிட்டுக் காட்ட வேண்டும்.

பூர்ண கர்ப்பிணிகளே படம் பார்க்க அனுமதிக்கப்பட வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் 'ஸீரியஸான' ஆயுதக் கேஸுகளைக்கூட சுலபமாகப் பிரசவிக்கும்படி செய்துவிடலாம் அல்லவா? பின்பற்ற முடியாத யோசனை என்ருலும் பிரமாதமான 'ஐடியா' இல்லையா இது?

• • •

மருந்து தினுசுகளைத் தயாரிப்பவர்கள் இதை ஒரு பொன்னன சந்தர்ப்பமாகக் கருதக் கூடும். பிரபலமான படங்கள் திரையிடப்படும் பொழுது புடவை, வளை, பக்ஷணம் இப்படியாகப் பல பொருள்களுக்கும் அப்படத்தின் பெயரைச் சூட்டும் வழக்கம் இருந்து வருகிறது. அதேபோல் மருந்து தயாரிப்பவர்கள், "மிஸ்ஸியம்மா சுலபப் பிரசவ ஔஷதம்", "மிஸ்ஸியம்மா பிரசவ லேகியம்" என்று பலமருந்துகளைத் தயாரித்து வெளியிடக் கூடுமல்லவா? ஏன், "மிஸ்ஸியம்மா" படத்திற்கேகூட இனிமேல், "சுலபமாகப் பிரசவம் ஆக வேண்டுமா? அப்படியானல் எங்கள "மிஸ்ஸியம்மா"வைப் பாருங்கள்" எனப் படத் தயாரிப்பாளர்கள் விளம்பரப்படுத்திக் கொள்ளலாமே!

• • •

"மிஸ்ஸியம்மா"வைப் பார்த்து, சிரித்துச் சிரித்துப் பிறந்த மேற்படி குழந்தைகளுக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று அவைகளின் பெற்ருேர் யோசிக்கவே தேவையில்லை. ஆனந்த மிகுதியினல் பிறந்த குழந்தைகளல்லவா அவை? ஆகவே, ஆண் குழந்தையாக இருந்தால் ஆனந்தன் என்ருே குதூகலன் என்ருே அவைகளுக்குப் பெயர் வைக்கலாம். பெண் குழந்தையாக இருந்தாலோ ஆனந்தி என்று கூசாமல் பெயர் சூட்டிவிடலாம். இவைகளைவிடப் பொருத்தமான பெயர் வேறு என்ன கிடைக்கப் போகிறது?

• • •

மேற்படி இரு குழந்தைகளின் விஷயமாக, அவைகளின் வாழ்க்கையைக் குறித்து நான் ஜோஸ்யம்கூடச் சொல்லுவேன். பிறக்கும் பொழுதே சிரிப்பால் பிறந்த அக்குழந்தைகள் ஜீவியம் முழுவதும் மகிழ்ச்சியுடனே இருக்கும். யார் கண்டது! சிரித்துப் பிறந்த குழந்தைகள் பின்னல் சிரிப்பாகச் சிரிக்கின்றனவோ என்னவோ? இன்னென்றுகூட நான் சொல்லுவேன். மேற்படி இரு குழந்தைகளும் வருங்காலத்தில் பிரபல சினிமா நக்ஷத்திரங்களாகத் திகழ்ந்தாலும் திகழக் கூடும். நான் ஏன் அப்படிச் சொல்கிறேன் என்ருல், பிரபல மேனட்டு நடிகையான வெர்ஜீனியா மேயோவை, அவரது தாயார் சினிமாவுக்குப் போய்வந்து உடனே தான் பிரசவித்தாராம். சினிமாவுக்குப் போய் வந்தவுடன் பிறந்த குழந்தைக்கே நக்ஷத்திரப் பதவி கிடைத்திருக்கிறது என்ருல், சினிமாக் கொட்டகையிலேயே பிறந்த குழந்தைக்கு நக்ஷத்திரப் பதவி என்ன, அதைவிட மேலாக சந்திர பதவி என்று ஒன்று இருந்தால் அதுகூடக் கிடைத்தாலும் அதில் யாரும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லையே?

நறுமண உலகின் மூவேந்தர்கள்

சேரன் சோழன் பாண்டியன் K.T.R ஜவ்வாஜி பத்திகள்

K.T.R வாசனுதி திரவிய சாலை விஜயபுரம், தஞ்சை ஜில்லா.

திரைப்பட அரசி

தேவிகா ராணி

டில்லியில் நடைபெற்ற சினிமா அரங்கில் பிரதான பொறுப்பேற்று நடத்திய தேவிகா ராணி, இந்திய சினிமா உலகிலே மறக்க முடியாத ஒரு புள்ளி ஆவார். இந்திய சினிமாவின் சரித்திரம் எழுதப்படுமானுல் அதன் வளர்ச்சிக்கு ஆரம்ப காலத்தில் பாடுபட்டவர்களில் தேவிகா ராணிக்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப்படும். இன்றையப் பட உலகிலே பல புதுப் புது நட்சத்திரங்கள் மின்னுகின்றனர் என்ருலும், பழம் பெரும் நட்சத்திரமான தேவிகா ராணியின் நினைவு ரஸிகர்களின் உள்ளங்களிலே என்றும் பசுமையாக இருக்கும்.

சினிமா நம் நாட்டிலே தோன்றிய ஆரம்ப காலத்தில் அவர் அதன் வளர்ச்சியிலே சிரத்தை கொண்டு உழைத்தார். இத்தொழில் சுபீட்சம் அடைந்ததைக் கண்டு மகிழ்வுடன் தான், 1945-ம் ஆண்டு ஓய்வு பெற வென இத்துறையிலிருந்து விலகினுர்.

தேவிகா ராணி மிகவும் கௌரவமான குலத்திலே பிறந்தவர். தாய் வழியிலே கவி தாகூருக்கு அவர் பேத்தி முறை ஆகவேண்டும். கர்னல் எம். என். சௌத்ரி ஐ. எம். எஸ்ஸுக்கும், லீலா சௌத்ரிக்கும் மகளாகப் பிறந்தவர் தேவிகா ராணி. அவரது தந்தை வைத்திய உலகிலே பிரபலமானவர். சென்னையிலேயே சர்ஜன் ஜெனரலாக நியமனம் பெற்ற முதல் இந்தியர் அவர் தான்.

தேவிகா ராணி தமது பத்தாவது வயது முதல் லண்டனில் கல்வி கற்ருர். பள்ளியில் படிக்கும் காலத்திலேயே லண்டனிலுள்ள 'ராயல் அகாடமி ஆப் டிரமாடிக் ஆர்ட்ஸ்' என்ற ஸ்தாபனத்திலிருந்து பரிசு பெற்றிருக்கிருர். தமது பதினுராவது வயதிலேயே அவர் அங்கு ஒரு வேலையில் அமர்ந்து சம்பாதிக்கத் தொடங்கி விட்டார்.

1928-ம் வருஷம் "ஆசிய ஜோதி" "ஷிராஸ்" "எ த்ரோ ஆப் டைஸ்" ஆகிய மூன்று படங்கள் தயாரிப்பு சம்பந்தமாக ஹிமான்ஸு ராய் லண்டன் வந்திருந்தார். அவரை தேவிகா ராணி சந்திக்க நேர்ந்தது. அவர், தேவிகா ராணி போன்ற படித்த குடும்பப் பெண்கள் படத் துறையில் புகுந்து அதை உயர்த்த வேண்டுமெனக் கூறி, தமது கோஷ்டியில் அவரைச் சேரும்படி வற்புறுத்தினுர். அவர் சம்மதித்து, "எ த்ரோ ஆப் டைஸ்" படத்திற்கென ஹிமான்ஸுராயுடன் இந்தியாவுக்கு வந்தார்.

ஹிமான்ஸுராயை 1929-ம் வருஷத்தில் தேவிகா ராணி மணந்துகொண்டு, அவருடன் ஜெர்மனிக்குப் பயணமானுர். ஜெர்மனி—பெர்லின் நகரிலுள்ள யூ. எப். ஏ. ஸ்டுடியோவில் ஒரு படத் தயாரிப்பாளராக அமர்ந்தார். ஹிமான்ஸுராய். அந்த ஸ்டுடியோவில் மேக்-கப் உடை அலங்காரம் ஆகிய துறைகளிலும், நடிப்பில் விசேஷப் பயிற்சியும் பெற்ருர் தேவிகா ராணி. மௌனப் படங்களை முறியடிக்கப் பேசும் படங்கள் கண்டுபிடிக்கப்பட்ட சமயம் அது. ஆகவே, அந்த முறைகளை இருவரும் நன்கு தெரிந்து கொள்ள முடிந்தது.

அதன் பின், "கர்மா" படத்தைத் தயாரிக்க அவர்கள் இருவரும் இந்தியா திரும்பினுர்கள். அப்படத்தில் அவ்விருவரையும் தவிர, பார்த்வான் இளவரசியும் நடித்தார். அப்படம் ஹிந்தி-ஆங்கிலம் இரு மொழிகளிலும் தயாரிக்கப்பட்டது. லண்டன் ஸ்டோல் ஸ்டுடியோவில் இப்படம் தயாரித்து முடிக்கப்பட்டது. முதன் முதல் வெளியிடப்பட்ட இந்தியத் தயாரிப்பு அப்படம்தான். பிரமாதமான ஆதரவையும் பாராட்டுதலையும் பெற்றது "கர்மா". லண்டனில் அப்படத்தின் முதல் காட்சி இர்வின் பிரபுவின் தலைமையில் நடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒரு ஸ்டுடியோவை ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆசை ஹிமான்ஸுராய்க்கு பல வருஷங்களாக இருந்து வந்தது. அந்த எண்ணத்துடன் அவர் "ஹிமான்ஸு ராய், இந்தோ-இண்டர் நாஷனல் டாக்கிஸ் லிமிடெட்" என்ற கம்பெனியை ஆரம்

பித்தார். இக்கம்பெனியின் முயற்சியால் 1934-ம் வருஷம் பம்பாய் டாக்கீஸ் தோன்றியது. அதை நிர்வகிக்கும் பொறுப்பு மேற்படி கம்பெனியிடமே விடப்பட்டது. பிற்காலத்தில் பிரபலமாகியுள்ள பல நக்ஷத்திரங்கள், கவிகள், கதாசிரியர்கள், டெக்னீஷ்யன்கள் ஆகியோரையெல்லாம் அறிமுகப்படுத்திய பெருமை பம்பாய் டாக்கீஸையும். அதைத் திறமையுடன் நிர்வகித்த ஹிமான்ஸுராய், தேவிகாராணி ஆகிய இருவரையும் சேர்ந்ததே.

அப்பொழுது பம்பாய் டாக்கீஸின் பிரதம நடிகை தேவிகா ராணிதான். சீக்கிரமே அவர் ரஸிகர்களின் பாராட்டுதல்களை அமோகமாகப் பெறலானார். அவர் நடித்துள்ள சிறந்த படங்களில் சில, "ஜவானிகி ஹவா", "ஜீவன் நயா" "அச்சுத்கன்யா" "சாவித்திரி" "ஜீவன் பிரபாத்" "துர்க்கா", "வசன்" "இஸாத்" ஆகியவை.

1940-ம் வருஷம் அவருடைய கணவர் ஹிமான்ஸுராய் இறந்துவிட்டார். ஆகவே, பம்பாய் டாக்கீஸின் நிர்வாகப் பொறுப்பை அவர் ஏற்று, ஏற்கெனவே வெளியிட்ட படங்களின் தரத்திற்குக் குறையாத முறையில் பல படங்களைத் தயாரித்து பம்பாய் டாக்கீஸ் முத்திரையில் வெளியிட்டார். "புனர்மிலன்" "பஸந்த்" "இஸ்மத்", "ஹமரி பாட்" ஆகியவை அவரது மேற்பார்வையில் தயாராகி வெளிவந்தவை.

தேவிகா ராணி 1945-ம் ஆண்டு ஓய்வு பெறும் நிமித்தம் பம்பாய் டாக்கீஸிலிருந்து விலகினார். அதே வருஷம் அவர் ஸ்வெடோஸ்லவ் ரோயரிச் என்பவரை மறுமணம் செய்து கொண்டார். தேவிகா ராணியின் இந்தக் கணவர் ஒரு ரஷ்யர். சிறந்த சைத்ரீகர். பிறகு ஹிமயமலைச் சாரலிலுள்ள தமது கணவரின் மாளிகையில் நிம்மதியாகக் காலங்கழிக்கத் தொடங்கினார் தேவிகா ராணி.

திரையுலகிலே காலடி வைத்த-முதல் உயர் படிப்புப் படித்த-குடும்பப் பெண் தேவிகா ராணிதான். அவர் இப்பொழுது அரசாங்க திருஷ்டி போதனை முறை போர்டு, நாடக சங்கீத அகாடமி, நாஷனல் அகாடமி ஆகியவைகளில் முக்கியமான அங்கம் வகிக்கிறார்.

புத்தி தன் சுய நிலையிலிருந்து தவறி விட்டால் **பைத்தியம்** என்கிறோம்.

அவ்வித நிலையிலிருந்து குணமடைய

நவரத்ன கல்பம்

ஓர் இன்றியமையாத சஞ்சீவி.

- ★ **உடை, பழக்கவழக்கங்களில் புதுமை**
- ★ **வெற்றுப் பார்வை**
- ★ **கவலையும் பீதியும் கொண்ட தோற்றம்**
- ★ **ஞாபகச் சக்தியின்மை**
- ★ **எதையும் புரிந்துகொள்ள முடியாமை**
- ★ **தன்னடக்க மின்மை**
- ★ **மாயை, ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்வது, பிரமை.**

இவைகளே **சித்தசுவாதீனம்** தவறி விட்டதற்கான அறிகுறிகளாகும்

இவைகளை முளையிலேயே கிள்ளிவிட

வைரம், கெம்பு, நீலம், மரகதம், புஷ்பராகம் முத்து, பவழம், கோமேதகம், வைடூரியம்

முதலிய ஒன்பது உயர்ந்த கற்களின் சேர்க்கை கொண்ட

நவரத்ன கல்பம்

எனும் உலகப் பிரசித்தமான மருந்தை உட்கொள்ளுங்கள்

○●○

கவிராஜ் பண்டிட் **துர்க்காதத்த சர்மா** வைத்தியவாசஸ்பதி அவர்களால் கண்டு பிடிக்கப் பட்டது.

○●○

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

THE MANAGER:

NAVRATNA KALPA PHARMACY

JULLUNDUR CITY (India)

Grams: 'NAVRATNA' **Phone: 401**

பிலிம் பக்கடா

'ஸ்டவ்'

''தாய்மையும், நக்ஷத்திரப் பதவியும் ஒன்றோடொன்று ஒத்துக் கொள்ளக் கூடியவையே அல்ல'' என்று உஷா கிரன் கூறுகிறார்.

''தாய்மை மட்டுமா; தாம்பத்தியம் கூடத்தான்'' என்று நம் நக்ஷத்திரங்களில் சிலர் கூறக் கூடும்.

* * *

''ஷம்மி கப்பூர் என்ற நட்சத்திரம் படத் தயாரிப்பின்போது மனமுவந்து ஒத்துழைத்ததற்காகப் படமுதலாளிகள் அவருக்கு ரூபாய் 23,000 விலையுள்ள ஒரு மோட்டாரைப் பரிசளித்தார்கள்.''

—ஆங்கில வாரப் பத்திரிகை.

பெண்கள் தற்பெருமை பேசிக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள் என்பது தவறான அபிப்பிராயமாகும்! எவ்வளவோ படமுதலாளிகள் எத்தனையோ நடிகைகளுக்கு என்னென்ன வெல்லாமோ வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் யாராவது ஒரு வார்த்தையாவது சொல்லுகிறார்களா!

* * *

''இருப்போர் இல்லாதோர் என்ற பேதம் ஒழிந்து விட்டால் ''எல்லாம் இன்ப மயம்'' தான் என்ற உண்மையைச் சித்தரிக்கிறது பி. என். டி.யின் படம்.''

—ஒரு மாத வெளியீடு.

இது படத்தின் நோக்கமே தவிர படமுதலாளியின் நோக்கம் அல்ல—என்ற ஒரு சிறிய விளக்கத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

* * *

நாராயணன் கம்பெனியார் ''கணவனே கண் கண்ட தெய்வம்'' என்ற படத்தைத் தயாரித்திருக்கிறார்கள்.

—செய்தி.

நல்ல வேளையாக, இதில் நடிக்கும் பிரதம நடிகைகளான பானுமதியும், அஞ்சலி தேவியும் விவாஹம் ஆனவர்களாக இருக்கிறார்கள்!

வாஹினியில் ''படித்த முட்டாள்'' என்ற படத்தை என். எஸ். கிருஷ்ணன் டைரெக்ட் செய்து வருகிறார்.

—ஸ்டுடியோச் செய்தி.

இவர் ஒரு ''படிக்காத புத்திசாலி'' என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

நீண்ட நாட்களுக்குப் பின்னர் குமாரி ருக்மணி ''முல்லை வன''த்தில் நடித்திருக்கிறார்.

—ஒரு சினிமாப் பத்திரிகை.

வாழ்க்கையில் பல முட் புதர்களைக் கடந்து வந்த ருக்மணிக்கு கடைசியாக ''முல்லை வன''த்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது அதிர்ஷ்டமே.

* * *

''முதல் தேதி'' படம் மார்ச் 10ந் தேதி வெளிவந்தது.

—பத்திரிகைச் செய்தி.

முதல் தேதியன்றே வெளி வந்திருந்தால் எவ்வளவு பொருத்தமாக இருந்திருக்கும்.

* * *

''லலிதா—பத்மினி சகோதரியருக்கு 'நடன அரசிகள்' என்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.''

—யாவரும் அறிந்த செய்தி.

இந்திய நாடு சோஷலிஸத்தை நோக்கி விரைந்து கொண்டிருப்பதால், ''அரசன் அரசி'' போன்ற பதங்களைப் பட்டங்களிலாவது ஞாபகார்த்தமாக வைத்திருப்பது நல்லதுதான்!

* * *

''கண்ணின் மணிகள்'' படத்திற்காக ''புது முகம் சுந்தர் தீ விபத்தில் சிக்கி கண்களை இழக்கும் காட்சி சமீபத்தில் தயாரிக்கப்பட்டது.''

—சினிமா மாதப் பத்திரிகை.

இருந்தபோதிலும் இதற்காக குருட்டு ஸ்திரீ ஹெலன் கெலர் அநுதாபம் தெரிவிப்பார் என்று எதிர் பார்ப்பதற்கில்லை!

காஞ்சனா

நான் சாக விரும்புகிறேன்

திலிப் குமார்

தற்புகழ்ச்சியில் தனி ஆனந்தம் அடைபவர்கள் பலருண்டு. ஆனல் எனக்குத் தற்புகழ்ச்சி என்ருலே கொஞ்சமும் பிடிக்காது. சினிமாவில் நான் நடிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே என் வாழ்க்கையில் ருசிகரமான சம்பவங்கள் எதுவும் நடந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. சிறு பிராயத்தில் வேறு சிலரைப் போல் நான் எவ்விதக் கஷ்டத்தையும் அனுபவித்தவனல்ல. 'இன்று எப்படியோ கழிந்து விட்டது; நாளை எப்படிக் கழியப் போகிறதோ தெரியவில்லையே' என்று பயந்து சாகும் அளவிற்கு நெருக்கடியான நிலைமை கூட எனக்கு ஏற்பட்டது கிடையாது.

இசைத்தட்டில் பதிவு செய்யப்பட்ட சங்கிதம் போல எனது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கிறது. அவசியம் ஏற்படும் பொழுது பெட்டிக்குச் சாவி கொடுத்து, இசைத்தட்டு நின்றுவிடாமல் சுற்றும் படி செய்வதுதான் எனது வேலை.

"அண்ணு, நான் ரொம்பவும் கஷ்டப் படுகிறேன்" என்று இதுவரையில் நான் யாரிடமும் சொல்லியது கிடையாது. உண்மையாகச் சொன்னல், மற்றவர்களுக்காக நான் ஏதேனும் செய்ய வேண்டும் என்று என்னலான முயற்சிகள் செய்திருக்கிறேன். பிறருக்கு ஒரு சிறிய உதவி செய்தாலும் அதில் எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சி ஏற்படுகிறது.

உங்களிடம் பச்சையாகச் சொல்கிறேன், நான் ஒரு உணர்ச்சி வசப்பட்டவன். மற்றவர்களின் இன்பமும் துன்பமும் அதனதன் சாயல்களை என் மனதிலும் பதிய வைத்து விடுகின்றன. ஆகவே, யாரேனும் ஒருவருடைய துன்பத்தைப் பற்றிய செய்தியைக் கேட்டாலும் என் இருதயம் நெகிழ்ந்து விடுவதுண்டு. இனிமையான சங்கீதத்தின் ஒரு சிறு அசைவு, அல்லது ஏதேனும் காவியத்தில் உள்ளத்தைத் தொடும் ஒரு வரி போதும்—உள்ளப் பூரிப்பால் ஒரு முழம் அகன்றுவிடும் என் மார்பகம். அவ்வளவு மிருதுவான இருதயம் படைத்தவன் நான். ஒரு கவிஞனல்ல என்றுலும் என் உள்ளம் காவியத்தில் முங்கித் திளைத்திருக்கிறது.

கலாசாலையில் நான் படிக்கும் காலத்திலும், படிப்பை விட்ட பின்புங்கூட 'ஷெல்லி' தான் என்னை ஆகர்ஷித்த கவிஞன். படிக்கும் காலத்தில் துணிகரமான செயல்கள் எதிலும் நான் ஈடுபட்டதுமில்லை; 'சினிமா நடிகனுக ஆகவேண்டும்' என்று ஆசைப்பட்டதுமில்லை. பகல் முழுவதும் படித்துக் கொண்டே தான் இருப்பேன்; அப்படியிருந்தும் படிப்பில் 'மண்டு' என்று தான் கருதப்பட்டேன். கால் பந்தாட்டம், கிரிக்கெட் இந்த இரண்டு விளையாட்டுகளிலும் எனக்கு ரொம்பப் பிரியம். விஜய் மெர்ச்சன்ட், முஷ்டாக் அலி இவ் விருவருடைய ஆட்டத்தையும் கவனிப்பதில் எனக்குத் தனி ஆனந்தம்.

எனது வாழ்க்கை ஓட்டம் நேரான பாதையிலேயே சென்று கொண்டிருந்தது. மாணவனுக இருக்கும்பொழுது நான் ஒரு அப்பாவி. என்றுலும், அப்பொழுதே வர்த்தகத்தில் நான் ஒரு

மைசூர் பிலிம் கார்ப்பரேஷன் தயாரித்துள்ள ''ஸ்த்ரீ ரத்னு'' கன்னடப் படத்தில் தமிழ் நடிகை டி. ஏ. மதுரம் நடித்துள்ளார்

பெரும் புள்ளியாக விளங்கவேண்டும் என்ற ஆசை என்னிடம் இருந்தது. பெரிய முதலாளியாகி விட்டேன் என்று திடீரென்று நானே கற்பனை செய்து கொள்வேன். மூன்று நான்கு டெலிபோன்கள் என் மேஜையின் மீது இருக்கின்றன. ஒவ்வொன்றிலும் ஓயாமல் மணி மாறி மாறி அடித்துக் கொண்டே இருக்கிறது. போனைக் கையிலெடுத்து, "அமெரிக்காவிலிருந்து வந்திருக்கும் சரக்குகளை டெலிவரி எடுத்து விடு! சீனா சரக்கை வந்த விலைக்கு விற்று விடு! பத்து லக்ஷம் ரூபாய் பெறுமான இயந்திரங்களுக்கு ஆர்டர் கொடுக்க வேண்டும்! லண்டனிலுள்ள நமது கிளைக் காரியாலயத்திற்கு புதிய சரக்குகள் அனுப்பி வைக்கிறோம் என்று கேபிள் மூலம் தெரியப்படுத்து" என்றெல்லாம் உத்தரவுகள் கொடுப்பதாக நான் நினைத்துக் கொள்வேன்.

உண்மையில், இப்படிப்பட்ட ஒரு வர்த்தக முதலாளியாக ஆகவேண்டும் என்றுதான் நான் ஆசைப் பட்டுக் கொண்டிருந்தேன். ஆனால், அதிர்ஷ்டம் எங்கு கொண்டு போய் விடும் என்று யாருக்குத்தான் தெரிய முடிகிறது? முதன் முதலில் நான் பார்த்த சினிமாப் படம் "ஏக்–ஹி–ராஸ்தா",.. மறு நாள் "வித்யாபதி" பார்த்தேன். சினிமாப் படத்திற்குள்ள சக்தியும் பெருமையும் அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தன. நானும் ஏன் சினிமாவில் சேரக் கூடாது என்ற ஒரு எண்ணம் என் மனதில் உதயமாயிற்று. எத்தனையோ ஆசைகளில் அதுவும் ஒன்று என்று அதோடு விட்டு விட்டேன். ஆனால், எனது வாழ்க்கைப் படகு சினிமா சாகரத்திலேயே இப்படி நங்கூரம் பாய்ச்சிவிடும் என்று நான் எப்பொழுதும் நினைத்ததேயில்லை.

சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை–14, கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு சோல் ஏஜண்டுகள்; **B. பால பட்டாபி செட்டியார்,** (1933-ல் ஸ்தாபிக்கப்பட்டது) **கோயமுத்தூர்.**

ஏவி. எம், துரிதமாகத் தயாரித்து வரும் ''செல்லப்பிள்ளை'' தமிழ்ப் படத்தில் கே. ஆர். ராமசாமியும், பண்டரிபாயும்.

பம்பாயில் கலாசாலைப் படிப்பிற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, பூனாவிற்குச் சென்று ராணுவத்தினரின் ஒரு 'கான்டீ'னில் வேலை செய்ய ஆரம்பித்தேன். அங்கு பல ராணுவ அதிகாரிகளோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. மாதம் முப்பத்தாறு ரூபாய் சம்பளத்தில் எனது வாழ்க்கை ஆரம்பமாயிற்று. என் வயிற்றிற்கு நானே சம்பாத்தியம் செய்வதற்குத் தெரிந்து கொண்டேன் என்பதில் நான் மகிழ்ச்சி அடைந்தேன். எனக்கு அளிக்கப்பட்ட குறைவான சம்பளத்தைப் பற்றி நான் கொஞ்சமும் கவலைப்பட்டதே கிடையாது. அடுத்த மாதம் ரூ. 450 சம்பளத்தில் வேறொரு வேலை கிடைத்தது. அங்கு சில காலமவரை வேலை செய்துவிட்டு, சிறிய சிறிய தொழில் திட்டங்களை வகுத்துக்கொண்டு அதில் ஈடுபட்டேன்.

பிறகு பம்பாய் வந்து சேர்ந்தேன். வாழ்க்கைப் போராட்டத்தின் ஒரு கட்டத்தில், எனது நண்பர் ஒருவரின் மூலமாக டைரெக்டர் அமியா சக்ரவர்த்தியோடு எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவருடைய படத்தில் நடிக்கும்படி அவர் என்னிடம் சொன்னதும், அடக்க முடியாமல் நான் சிரித்துவிட்டேன்.

''அது என்னால் முடியாது, ஸார். என்னைப் போன்றவர்களுக்கு அந்தத் தொழில் லாயக்கில்லை. மணிக்கணக்கில் காமிராவின் முன்பாக என்னால் நிற்கவும் முடியாது, எனக்கு நடிக்கவும் தெரியாது'' என்றேன்.

''ஒரு தடவை வந்து முயற்சி செய்துதான் பாரேன்'' என்றார். மாதம் ரூ. 750 சம்பளம் தருவதாகவும் சொன்னார். அப்பொழுது என்னுடைய வயது இருபத்தியொன்று. அவ்வளவு சிறிய வயதில் இவ்வளவு அதிகமான சம்பளம் எனக்குக் கொடுப்பதாகச் சொன்னது என்னை அப்படியே மயக்கி விட்டது. 'சரி' என்று ஒப்புக்கொண்டு, பம்பாய் டாக்கீஸில் சேர்ந்து விட்டேன். அந்த ஸ்டுடியோவில் அப்பொழுதிருந்த ரம்மியமான சூழ்நிலையை நான் இன்னும் மறக்க முடியவில்லை. 'ஒரு நல்ல ஸ்தாபனத்தில் நான் சேர்ந்து வேலை செய்து கொண்டிருக்கிறேன்' என்ற மகிழ்ச்சி எனக்கு உண்டாயிற்று. ''ஜ்வார் பட்டா''

தான் நான் நடித்த முதல் படம். அதைத் திரையில் பார்த்த பின்பு, நடிப்பு விஷயத்தில் நான் இன்னும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

அந்தப் படம் என் வாழ்க்கையைப் புதிய பாதையில் திருப்பி விட்டது. அதிகமான படங்களில் நடிப்பதற்குச் சந்தர்ப்பங்கள் என்னைத்தேடி வந்தன. அதனால் எனது நடிப்புத் திறமையும் அபிவிருத்தி யடைந்து கொண்டே யிருந்தது.

இன்று எத்தனையோ படங்களில் நடிப்பதற்கு என்னை விரும்பி அழைக்கிறார்கள். அவைகளில் பலவற்றை நான் நிராகரிக்க வேண்டி யிருக்கிறது. 'வருஷத்திற்கு இரண்டு படத்திற்குமேல் வேலை செய்யக் கூடாது' என்று நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறேன். அப்படி யிருந்தும் சில சமயங்களில் நான்கு படங்களில் வேலை செய்யும்படியாகவும் நேர்ந்து விடுகிறது.

தற்சமயம் எனது வாழ்க்கை போய்க் கொண்டிருக்கும் வேகத்தைக் கவனிக்கும் பொழுது, எனது முப்பத்தியாறுவது வயதில் நான் இறந்து போய் விட்டால் நன்றாயிருக்கும் என்று நினைக்கும் படியாக இருக்கிறது. ஜ்வரம் பீடிக்கப் பட்டவனின் செய்கைகள் நிறைந்ததாக எனது வாழ்க்கை இருப்பதால், அதுவரை வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறேன். அதற்குள் ஒரு அழகான ஸ்டுடியோவை என் சொந்தத்தில் நிர்மாணித்து, உன்னதமான சில படங்களையும் தயாரித்து விடவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். ஆனால், எதிர்காலம் எப்படி இருக்கப் போகிறதோ பார்ப்போம்!

[ஐந்து வருஷங்களுக்கு முன்பு ரஞ்சித் ஸ்டுடியோவில் ஒரு நிருபருக்கு அளித்த பேட்டியின்போது, சொல்லிய விஷயங்களே இக்கட்டுரைத் தொகுப்பு. மொழிபெயர்ப்பு: "ஏயெஸ்"]

தமிழ்நாடு ஏஜண்டுகள் :—சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், மேலகோபுர வாசல், மதுரை.

"ரத்தக் கண்ணீ"ருக்குத் தடை?

"அந்த நாளு"க்கு 'வெட்டு'

சென்னையில் சென்ஸார் போர்டினால் 5000 அடிகளுக்கு மேல் கத்திரிக் கோலுக்கு இரையாக்கப்பட்டதும், புரட்சிகரமான அம்சங்கள் கொண்டதென்று கூறப்படுவதுமான "ரத்தக் கண்ணீர்" படத்திற்கு மலாயா அரசாங்கம் தடை விதிக்கக்கூடும் என்று கருதப்படுகிறது.

சாதாரணமாக இங்கு வரவழைக்கப்படும் படங்கள் உடனுக்குடன் தணிக்கை போர்டினால் பார்வையிடப்பட்டு, திரையிட அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் "ரத்தக் கண்ணீர்" படம் வரவழைக்கப்பட்டு மாதம் நான்காகியும், தணிக்கை அதிகாரிகளால் இருதடவை பார்வையிடப்பட்டு முடிந்தும், இன்னும் திரைக்கு வரும் வழியைக் காணவில்லை.

ஆக்ஷேபகரமான அம்சங்கள் படத்தில் இருப்பதாகக் கூறி தணிக்கை அதிகாரிகள் தடுத்து வைத்திருப்பதாக, படத்தை வரவழைத்த பிரபல பட விநியோகக் கம்பெனியான ஷா பிரதர்ஸைச் சேர்ந்த ஒருவர் ஒப்புக் கொண்டார்.

"படத்தைத் தடை செய்வதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படுகின்றனவா?" என்று நான் கேட்டதற்கு, அவர் எதுவும் கூறாமல் மௌனம் சாதித்தார்.

"ரத்தக் கண்ணீ"ரை அப்படியே தடை செய்வதைவிட, பார்க்க ஆட்சேபகரமான அம்சங்களை நீக்கிவிட்டாவது படத்தைத் திரையிட்டால் போதும் என்று இங்குள்ள பட ரஸிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள். ஏற்கனவே இங்கு "பராசக்தி", "நாம்", "சொர்க்கவாசல்" ஆகிய படங்களிலிருந்து 'புரட்சிகர'மாகத் தோன்றிய அம்சங்களெல்லாம் 'கத்திரிக்கோல் பிரயோக'த்திற்குப் பின்னரே திரையிடப்பட்டன.

"நால்வர்" படத்துடன் இணைக்கப்பட்டிருந்த கட்டபொம்மன் நாடகம் தங்களைத் தூஷிப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் கருதி, அதை அப்படியே நீக்கிவிட்டுத்தான் "நால்வ"ரைத் திரையிட அனுமதித்தனர்.

ஹாலிவுட் - இந்தியப் பட முதலாளிகளால் கூட்டாகத் தயாரிக்கப்பட்ட "ஜான்ஸி-கி-ராணி" படத்தை லண்டனில் திரையிட அனுமதித்த பிரிட்டிஷ் அரசாங்கம், அது தனது காலனி ஆட்சிக்கு ஹானி ஏற்படுத்தும் என்று கருதி சிங்கப்பூரிலோ மலாயாவிலோ திரையிட அனுமதிக்கவில்லை.

ஏவி.எம். ஆடல் பாடலின்றிக் கச்சிதமான முறையில் சமீபத்தில் தயாரித்து வெளியிட்டிருந்த "அந்த நாள்" கடந்த மூன்று மாதங்களாக மலாயாவின் பல பாகங்களிலும் திரையிடப்பட்டு வருகிறது. இந்தப் படத்திலும் தணிக்கையாளர் கை வைக்கவே, குறைந்த நீளமுள்ள இப்படம், 'கழுதை தேய்ந்து கட்டெறும்பானது' போலாயிற்று!

அப்படத்தில், இந்திய சுதந்திரப் போராட்டம் சம்பந்தப்பட்ட ஒரு காட்சி வருகிறது. மகாத்மா காந்தியும் மற்ற தேசத் தலைவர்களும் வெள்ளையர்களால் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து ஒரு கல்லூரியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் 'ஸ்டிரைக்' செய்கின்றனர். இது சம்பந்தமாக மாணவ மாணவிகள் ஒரு கூட்டம் போடுகின்றனர். ஸ்டிரைக்கை எதிர்த்தும் ஆதரித்தும் மாணவர்கள் பேசுகிறார்கள். சிவாஜி கணேசனும் பண்டரி பாயும் இதில்

உணர்ச்சி ததும்பப் பேசும் இக் காட்சி கள் தணிக்கை செய்யப்பட்டுவிட்டன.

இதில் ஒரு அதிசயம் என்னவென்ருல் இது சம்பந்தமான வசனங்கள் கொண்ட திரைக் கதைப் புத்தகங்களுக்கும், திரை வசனத்துடன் அக் காட்சிப் படங்கள் கொண்ட சினிமாப் பத்திரிகைகளுக்கும் தடை எதுவும் விதிக்கப்படவில்லை! இவற்றை யெல்லாம் அனுமதிக்கும்போது ஏன் படத்திலும் அக் காட்சிகளை அனுமதிக்கலாகாது? சினிமாவில் இருட்டடிப்புச் செய்யும் விஷயத்தை சினிமாப் பத்திரிகைகளில் வரும் அது சம்பந்தப்பட்ட காட்சிப் படங்களைப் பார்த்தும் வசனங்களைப் படித்தும் மலாயா மக்கள் தங்கள் மனத்திரையில் அவற்றைப் படமாகப் பார்க்கிருர்கள் !

ஹிந்தியில் வெளியான 'லைலாமஜ்னு'வை மலாய் மொழியில் 'டப்பிங்' செய்ததில் மலாய் மக்களின் அமோகமான வரவேற்பைப் பெற்ற விஷயங்களை முன்பே ஒரு 'குண்டூசி' இதழில் வெளியிட்டிருந்தேன். இதன் வெற்றியை அடுத்து, மேலும் இரு ஹிந்திப் படங்களை மலாய் மொழி பேச வைத்திருக்கிருர்கள். பிரேம் நாத்தும், மதுபாலாவும் நடித்த "ஸாக்குவி", மதுபாலவும், அசோக் குமாரும் நடித்த "மஹால்" ஆகியவையே அவை. இப் படங்களும் சுமாரான வெற்றியை அளித்துள்ளன.

தமிழ்ப் படங்களுக்கு மலாய் மொழி 'டப்பிங்' கொடுத்தால் வெற்றியளிக்குமா என்று பார்ப்பது விஷப் பரீக்ஷையாகும்! தமிழ்ப் படங்களுக்கான கதைப் போக்கில் பெரும் மாற்றம் ஏற்பட்டாலொழிய இது சாத்தியப்படாது. அதுவரை தமிழ்ப் படங்கள் தமிழ் மக்களையே எல்லையாக வரையறுத்துக் கொள்ள வேண்டியதுதான்! உதாரணமாக, "பராசக்தி", "சொர்க்க வாசல்" போன்ற படங்களை மலாய் மொழியில் 'டப்பிங்' செய்து வெளியிட்டால், 'குண்டூசி'யார் ஒரு தடவை கூறியது போல்-' தனது மனைவியின் ஒழுங்கற்ற நடத்தையைப் போய் கணவனே பிரசாரம் செய்வது போல்'தான் இருக்கும். "சந்திரலேகா", "நிஷான்", "மனோகரா" போன்று கதையில் புதுத் திருப்பங்கள் கொண்டு தமிழ்ப் படங்கள் வந்தால்தான் இங்கு தமிழ்ப்பட மார்க்கெட்டை விஸ்தரிக்க முடியும்.

—எஸ். சப்தகிரி சர்மா.

13/4/52

வட நாட்டிலே....

பல வருஷங்களுக்கு முன் கல்கத்தா நியூ தியேட்டர்ஸ்"தேவதாஸ்"படத்தை தயாரித்துத் திரையிட்டது. அதன் பின் பி. வி. ராவ் என்ற டைரெக்டர் "தேவதாஸ்"தமிழ்ப்படத்தைதயாரித்து வெளியிட்டார். அது படுதோல்வியாக முடிந்தது. இதே கதையை சென்னை வினோத பிக்சர்ஸார் முதலில் தமிழிலும் பிறகு தெலுங்கிலும் தயாரித்து வெளியிட்டு வெற்றியும் கண்டனர். இப்பொழுது வட நாட்டின் பிரபல டைரெக்டர் பிமல் ராய் "தேவதாஸ்" படத்தைத் தயாரித்து வருகிருர். அப்படத்தில் தேவதாஸாக 'வங்காளத் திரை அழகி' யெனப் புகழப்படும் சுசித்ர ஸென் பார்வதியாகவும், வைஜயந்திமாலா சந்திரமுகியாகவும், திலீப் குமார் தேவதாஸாகவும் நடிக்கிருர்கள். இவர்கள் தவிர, மோதிலால், பேபி நஸீம், அஸீம் குமார் ஆகியோரும் நடிப்பார்களாம்.

* * *

"மச்சினன்களுக்கு சலுகைக் கட்டணம்" என்ருல் உங்களுக்கு விசித்திரமாக இருக்கிறது அல்லவா? படத் தயாரிப்பாளர்-டைரெக்டரான சேதன் ஆனந்த் சென்ற மாதம் திரையிட்ட "ஜோரு கா பாய்" என்ற தம் படத்திற்கு இப்படி ஒரு சலுகையை அளித்தார். ஆனல், அதற்கு ஒரு நிபந்தனை மட்டும் போட்டார். அவர்கள் தங்கள் சகோதரிகளுடனும், அவர்கள் கணவன்மார்களுடனும் வரவேண்டும்-என்பது அந்த நிபந்தனை! இந்த விசித்திர

மான சலுகை ஏன் தெரியுமா?படத்தின் பெயர் ''மச்சினன்'' என்பதனுல்தான்!

* * *

மகுடி வாசித்தால் அங்கு பாம்பு வந்து விடும்—என்ற நம்பிக்கை பலரிடை உண்டு. பகல்பூர் நகரில் இது உண்மையாகிவிட்டது. ஒரு படத்தில் மகுடி இசையைக் கேட்டு ஜனங்கள் மெய்ம் மறந்திருந்தபோது, ஆபரேட்டர்அறையிலிருந்து "ஐயோ, பாம்பு!'' என்ற அலறல் கேட்டது. எல்லோரும் ஓடுவதற்குள் அந்த நல்ல பாம்பு நைஸாக நழுவிவிட்டது!

* * *

சாதாரணமாக, 13ம் நம்பர் மிகவும் துரதிருஷ்டம் பிடித்த எண் என்று ஒரு அபிப்பிராயம் இருந்து வருகிறது: ஆனல், பிரபல வடநாட்டு நடிகை வீணு ராய் இதற்கு விதிவிலக்கானவர். "ஷோல்'' என்ற படப்பிடிப்பின்போது நடைபெற்றது அது: அவரும் அசோக் குமாரும் நடிக்கும் காட்சி ஒன்று பல முறை படம் பிடிக்கப்பட்டது. டைரெக்டர் சோப்ரா, பன்னிரண்டாவது தடவை எடுத்து விட்டு, அத்துடன் நிறுத்திக் கொண்டார். பன்னிரண்டாவது முறை எடுத்திருப்பதே பாதகமில்லை என்று கூறினர். அவருக்கு 13ம் நம்பர் மீது பயம். ஆனல், வீணு ராய் 13வது தடவை எடுக்கச் சொல்லி பிடிவாதம் பிடித்தார். முடிவில் அது தான் சரியாக அமைந்தது!

* * *

நக்ஷத்திரங்களுக்கு மக்களிடையே எவ்வளவு ரஸிகர்கள் இருக்கிருர்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம்: நடிகை பீகம் பாராவுக்கு கொரியாப் போர் முனையிலிருந்து சில போர் வீரர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கடிதம் எழுதினர்கள். அக் கடிதத்தை—''பீகம் பாரா, சலனப் படத் தொழில் மேற்பார்வை, இந்தியா'' என்று விலாஸமிட்டு அனுப்பினர்கள். சிறிதுகூடத் தாமதமில்லாமல் குறித்த காலத்தில் கடிதம் பம்பாயிலிருந்த பீகம் பாராவுக்குக் கிடைத்தது. சரியானபடி விலாஸமிட்ட கடிதங்களே ஒழுங்காகக் கிடைப்பது அரிதாகியுள்ள இந்தக் காலத்தில் சரியானபடி விலாஸம் எழுதப்படா விட்டாலும் குறித்த காலத்தில் கடிதம் நடிகைக்கு கிடைத்தது எப்படி? தபால் இலாகாவிலே அவருடைய விசிறிகள் நிறைய இருக்கிருர்கள் என்பது தெளிவாக வில்லையா?

* * *

கீதா பலியின் நாய்க்குட்டி ஒரு பெரிய நாயிடம் சண்டைக்குப் போய் அவஸ்தைப் பட்டது. அதைக் காணச் சகியாத நடிகை அவைகளை விலக்கிக் குட்டியைக் கையில் எடுத்துத் தடவிக் கொடுத்தார். பாதிச் சண்டையில் பிரித்துவிட்ட ஆத்திரம் குட்டிக்கு. நடிகையின் கையிலிருந்தபடியே பெரிய நாயைப் பார்த்துக் குரைத்தது. அப்படிச் செய்யும்போது நாய்க்குட்டியின் பல் நடிகையின் கையில் பட்டு ரத்தம் கசிந்து விட்டது. நடிகை அதற்காக நாய்க்குட்டியைக் கடிந்து தள்ளிவிடவில்லை!

* * *

கடந்த ஆண்டு ஜனவரியில் பம்பாய் நகரில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. பட உலகப் பிரமுகர்கள் பலர்—முக்கியமாக நக்ஷத்திரங்கள்—ஓட்டுப் போட வரவில்லை. காரணம்: நீண்ட கியூ வரிசைகளில் அவர்கள் நிற்கும் போது ரஸிகர்கள் வளை்துக் கொண்டு விட்டால் என்ன செய்வது என்ற பயம தான்!

* * *

பிரபல திரை உலக-நாடக நக்ஷத்திரமான பிருத்விராஜ் தாம் ஒரு 'எக்ஸ்ட்ரா' என்று சொல்லிக் கொண்டாரென்ருல் ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? அவர் பார்லிமென்டில் ஒரு மெம்பர் அல்லவா? பார்லிமென்ட் கூட்டத்திற்கு முதல் தடவை போய்விட்டு வந்த அவரைப் பலரும் வளைத்துக் கொண்டு கேள்விகள் மேல் கேள்விகள் கேட்டார்கள். "அங்குள்ள பல நக்ஷத்திரங்களுக்கு முன் நான் ஒரு எக்ஸ்ட்ராதான். நான் ஒரு 'எக்ஸ்ட்ராவாக' இருந்து பாடுபட்ட பழைய நாள் ஞாபகம்—வருகிறது. சினிமா உலகில் நான் நக்ஷத்திரமாகி விட்டது போல் அங்கு நக்ஷத்திரமாவது அதை விடக் கடினம்'' என்று சொன்னர்!

ரா.சுவின்
போர்ட்டர்
கந்தன்

போர்ட்டர் கந்தனில்.. சில படக்காட்சிகள்..

உள்ளம் உருக்கும் உணர்ச்சிச் சித்திரமாக டைரெக்டர் வேம்புவால் உருவாக்கப்பட்டிருக்கும் "போர்ட்டர் கந்தனி"ல் எம். கே. ராதா, எம். கே. முஸ்தாபா, டி. பாலசுப்ரமண்யம், எம். என். நம்பியார், டி. எஸ். துரைராஜ், கே. துரைசாமி, எஸ். வி. சுப்பய்யா, புதுமுகம் லலிதா, ஜி. வரலக்ஷ்மி, டி. பி. முத்துலக்ஷ்மி ஆகிய பிரபல நக்ஷத்திரங்கள் இதில் நடித்துள்ளனர்.

வி. எல். நரஸு
வின் இரண்டா
வது தயாரிப்பான
போர்ட்டர்
கந்தன்
ஏப்ரல் மாதத்தில்
தமிழ் நாடெங்கி
லும் வெளிவர
விருக்கிறது.
Parthan,



எந்த அளவில், எந்த மோஸ்தரில் எந்த
வடிவத்தில் வேண்டுமானாலும்

டன்லபில்லோ

மெத்தைகளே சரியானவை



டன்லபில்லோ நீடித்தசௌகரியம் தருவது; உங்கள் பர்னிச்சர்களுக்கு ஒருமுறை இவற்றை வாங்கி விட்டால் நீண்ட காலம் நிலைத்து விளங்கும்.

டன்லபில்லோ கைவசமுள்ளதும் புதிதுமான பர்னிச்சர்களுக்கு ஏற்ற வகையில் வெட்டித்திருந்தியமைக்கக் கூடியது.

டன்லபில்லோ மெத்தைகளுக்கு இப்பொழுதோ பிற்பாடோ உங்கள் விருப்பத்தை அனுசரித்து எந்த நிறத்திலும் சுலபமாக வெளியுறைகள் செய்து போடலாம்.

டன்லபில்லோ மெத்தைகளில் எச்சமயத்திலும் தொய்வு அல்லது முண்டு முடிச்சு ஏற்படாது.

டன்லபில்லோ அதன் அழகிய தோற்றத்தினாலும் நேர்த்தியான கோடுகளாலும் பர்னிச்சர்களுக்கே ஒரு அலாதியான சோபைத் தருகின்றது.

டன்லபில்லோ

டெடெக்ஸ் துரைத் தயாரிப்புகளில் முதன்மையானது—மிகச் சிறந்ததுங்கூட.

DPX 70 TM

அம்பி ஷூட்டிங் பார்க்கிறான்

அடுத்த கட்டத்துக்கான படப் பிடிப்பு ஆரம்பமாகியது. அங்குள்ளோர் அதற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொண்டிருந்தனர். அம்பி அவைகளை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். நடிக நக்ஷத்திரங்கள், மின்சார விசிறியின் அருகாமையில் உட்கார்ந்து கொண்டு 'காற்று வாங்கி'க் கொண்டிருந்ததைக் காண்பது அவனுக்கு அளவில்லாத சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய காட்சியாக இருந்தது. அப்போது மின்சார விசிறியின் வேகத்தினால் உண்டான காற்று, ஒரு நடிகருடைய மீசையைப் பறக்கச் செய்து விட்டது! எல்லோரும் சிரித்தார்கள்; அம்பியும் கூடச் சிரித்தான்.

காமிராவை நகர்த்தினார்கள். அது வேறு இடத்துக்கு வந்தது. மீண்டும் விளக்குகள் போடப்பட்டதை அம்பி பார்த்தான். ஒத்திகை ஆரம்பமாகியது. சிறிது நேரத்துக்கெல்லாம் முன்பு நடைபெற்ற மாதிரியே எல்லாம் நடைபெற்றன. அம்பி பேசாமல் அந்தக் கட்டத்தை ரஸித்துக் கொண்டிருந்தான். 'ஸ்டார்ட்' என்றார் டைரெக்டர் திருப்திகரமான ஒத்திகை முடிந்தவுடன். விளக்குகள் எரிந்தன. ஒளி, ஒலி, இயந்திரங்கள் இயங்கின. 'கிளாப்' தட்டப்பட்டது. நடிகர்கள் நடித்தார்கள். 'கட்' 'ஓகே' என்றார் டைரெக்டர்.

இந்தக் கட்டத்தில் அம்பி என்னைப் பார்த்து, "காமிரா ஏன் இந்தப் பக்கம் வந்தது?" என்று கேட்டான். வேறு இடம் நகருவதற்காக, காமிராமேன் திசை பார்த்துக் கொண்டிருந்தார். அம்பியை அழைத்துக் கொண்டு வெளியே வந்தேன். வெளியே போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தோம். பிறகு அம்பியை நோக்கிக் கூறினேன்

"இதோ பார் அம்பி, இதற்குத்தான் 'ஆங்கிள்' அல்லது 'கோணம்' என்று சொல்லுவார்கள். உதாரணமாக ஒரு தெருவில் ஒருவன் வேடிக்கை செய்கிறான் அல்லது நடனம் நடைபெறுகிறது என்று வைத்துக் கொள், ஒரே கும்பல சூழ்ந்திருக்கிறது. உனக்கு அந்த நடனத்தைப் பார்க்க விருப்பம். நீ என்ன செய்வாய்?" என்றேன்.

"கிட்டே சென்று பார்க்க எத்தனிப்பேன். முடியவில்லை என்றால் எங்காவது உயரே இருந்து கொண்டு பார்ப்பேன். நாட்டியம் முழுவதையும் ஒரே இடத்தில் இருந்து கொண்டே பார்த்தால் சகிக்க முடியுமா ஸார், கொஞ்ச நாழி உயரே இருந்து—சிறிது நேரம் கொஞ்ச தூரத்திலிருந்து—கொஞ்ச நாழிகை அருகே இருந்து—இப்படிப் பார்த்தால் தான் திருப்திகரமாக இருக்கும் ஸார்" என்றான்.

"ஆ! இதே மாதிரிப் பார்க்க மனித மனம் விரும்புகிறதல்லவா? இப்படிப்பட்ட மனதைத் திருப்திப்படுத்தத்தான் ஒளிப்பதிவாளர் அவ்வப்போது காமிரா நிலையை, (டைரெக்டர் கருத்துப்படி) மாற்றிக் காட்சியைப் படம் பிடிக்கிறார். ஒரே இடத்திலிருந்து பார்த்தால் சலிப்பு ஏற்படுமல்லவா? அதற்காகத்தான் பலவித கோணங்களில் படம் பிடிக்கிறார். நாட்டியத்தை உயரே இருந்து பார்த்தால் அதுவும் அழகாக இருக்கும். சற்று தொலைவில் இருந்து பார்த்தால் அது ஒரு ரகமாக இருக்கும். முக பாவனையைப் பார்க்க வேண்டுமென்றால் மிகவும் சமீபம் இருக்க வேண்டும். ஆக, மாறி மாறி அம்முறைகளில் பார்க்க கண்கள் விரும்பினால் நாம் அந்தக் குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று பார்க்கவேண்டி வருகிறது. இதைத்தான் காமிரா செய்கிறது. தொலைவிலிருந்து படம் பிடிக்கிறது. பிறகு சற்று சமீபத்தில் வந்து படம் பிடிக்கிறது. இன்னும் அருகே வருகிறது. வேண்டுமானால் இன்னும் நெருங்கி வந்து படம் பிடிக்கிறது. மறுபடி பலவித நிலைகளில் பல கோணங்களில் படம் எடுக்கிறது. தொலைவிலிருந்து கொண்டே மெள்ள மெள்ள நெருங்கி வந்து படம் எடுக்கிறது" என்றேன்.

"இதை எல்லாம் டைரெக்டர் சொல்லியபடி தானே எடுக்க வேண்டும்" என்

ருன் அம்பி. "ஆமாம், அநேகமாக அப்படித்தான். ஆனால் சம்பவத்துக்குத் தகுந்தாற்போல், டைரெக்டர் ஒளிப்பதிவாளருடன் கலந்தாலோசித்து எடுக்கப்பட வேண்டிய கட்டங்களை காமிரா பாஷையில் பிரித்துக்கொள்ளுவதுண்டு. இவற்றிற்கு 'ஷாட்டுகள்' என்று பெயர். காமிராவை வேண்டிய இடத்துக்குக் கொண்டு போயோ, அல்லது 'லென்ஸ்' என்ற கண்களை மாற்றியோ, படம் பிடிப்பதுண்டு. தொலைக் காட்சிகளுக்கு 'லாங் ஷாட்' என்றும், சற்று சமீபமான காட்சிகளுக்கு 'மீடியம் லாங் ஷாட்' என்றும், அதற்கு அடுத்த சமீபமாக உள்ள காட்சிக்கு 'மிட் ஷாட்' என்றும், சற்றுப் பெரிதாகவும் வெகு சமீபம் கண்ணுக்குப் பெரிதாகத் தெரியக்கூடிய காட்சி அமைப்புக்கு 'குளோஸ் ஷாட்' அல்லது 'குளோஸ் அப்' என்றும், இன்னும் பெரிதாக எடுக்கப்பட வேண்டியதற்கு 'பிக் குளோஸ்' என்றும் கூறுவார்கள்' என்று அம்பிக்கு விளக்கினேன்.



ஏவி. எம். தயாரித்துவரும் "செல்லப் பிள்ளை" தமிழ்ப் படத்தில் கே. ஆர். ராமசாமி, சாவித்திரி, தங்கவேலு தோன்றும் கட்டம்.

அம்பி, சற்று சந்தேகப் பார்வை பார்த்தான். அவனுக்கு விளங்கவில்லை என்று எண்ணி உதாரணத்துடன் விளக்கினேன். ஒரு நபர் தெருக் கோடியில் இருந்து வருவதைத் தொலையில் இருந்து படம் பிடிக்கிறோம் என்று வைத்துக்கொள்ளுவோம். இதை 'லாங் ஷாட்' என்று குறிப்பிடுவதுண்டு. அந்த நபர் யார் என மனம் அறிய விரும்புகிறது. அவரை முழங்கால் பாகம் வரை படம் பிடித்து, அடையாளம் தெரியுமாறு காட்டுகிறோம். இதை 'மீடியம் லாங் ஷாட்' எனலாம். இன்னும் அவரை நன்றாக அறியத் துடிக்கிறது. இடுப்பளவு வரை காட்டுகிறோம். இது 'மிட் ஷாட்'. கழுத்து வரை பார்க்கத் துடிக்கிறது மனம். இது 'குளோஸ் அப்'. அவரது கண்களை மட்டும் கவனிக்க விரும்புகிறது என்றால் அக் கண்களை மட்டும் பெரிது படுத்திக் காட்டுகிற ஷாட் 'பிக் குளோஸ்' எனலாம்.

"இவை காமிரா பாஷைகளில் பொதுவாக அடிபடுபவை. காமிரா முன்னுக்கு நகர்ந்து படம் பிடிக்கப் படுவதை 'டிராலி பார்வேர்டு' (Trolly forward) என்றும், பின்புறமாக நகர்ந்து போவதை 'டிராலி பாக்வேர்டு' (Trolly back-ward) என்றும், ஒரு இடத்தில் இருந்து மேல் பக்கமாக உயர்த்தப் படுவதை 'டில்ட் அப்' (Tilt up) என்றும், கீழ்ப் பக்கத்துக்குக் குனிவதை 'டில்ட் டௌன்' (Tilt down) என்றும், பக்கவாட்டாகத் திரும்புவதை 'பானிங்' (Paning) என்றும் குறிப்பிடுவதுண்டு" என்று அம்பிக்கு நிதானமாகச் சொன்னேன். பின் குறிப்பிட்ட ஷாட்டுகளுக்கும், காமிரா பாஷைகளுக்கும் உதாரணத்துடன் விளக்கம் கேட்டான். தான் சமீபத்தில் ஏவி. எம். ஸ்டுடியோஸார் தயாரித்த "பெண்" படத்தைப் பார்த்திருப்பதாகவும் கூறினான். ஆகவே, அம்பிக்கு எனக்கு ஞாபகத்திலுள்ள காட்சிகளைக் கொண்டு விளக்கினேன். வைஜயந்திமாலா, குதிரை மீது தொலைவில் ஒரு வாராவதியின் மீது வருகிறார். அது தொலைக் காட்சி. அதாவது 'லாங் ஷாட்'. படம் பார்ப்போருக்கு, யார் வரு

வது என முதலில் தெரிந்து கொள்ள முடிவதில்லை. ரஸிகன் மனம் யார் என அறியத் துடிக்கிறது. சமீபத்தில் வாரா வதியைச் சேர்த்து, அவர் உருவம் தெரியும் படி ஒரு காட்சி வருகிறது. இது 'மிட்லாங் ஷாட்'. பிறகு இடுப்பளவு ஒரு காட்சி. வைஜயந்தி கடிவாளத்தைக் கையில் பற்றிக்கொண்டு வருகிருர். இது 'மிட் ஷாட்'. பாடுகிருர்; இக் காட்சி சமீபத்தில தெரிகிறது கழுத்தள வுடன். இது 'குளோஸ் அப்'. கண்கள் மட்டும் படபடக்கின்றன. இவை பெரிதாகத் தெரிகின்றன. இது 'பிக் குளோஸ்' என்றேன். அம்பி தனக்குப் புரிந்ததாகத் தலையாட்டினன்.

பிறகு 'டில்ட் அப்', 'டில்ட் டௌன்', 'பானிங்' இவைகளை விளக்க, சில உதாரணங்களைக் கேட்டான் அம்பி. நான் ஆரம்பித்தேன். "ஒருவன் உட்கார்ந்திருக்கிருன். அவன் மணி என்ன என்று கூறிய பின் மேலே பார்க்கிருன். அவன் பார்க்கும் இடத்தை, அவன் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே காமிராவை மேற்பாகத்துக்குத் தூக்கவும், சுவரில் உள்ள கடிகாரம் மணியைக் காட்டுகிறது. உட்கார்ந்திருந்தவன் முகத்தில் இருந்து ஆரம்பித்து மேலாக சுவரில் உள்ள கடிகாரத்தைக் காட்டும் வரை ஏற்படுகிற நிலைக்குத்தான் 'டில்ட் அப்' என்பார்கள். ஆனல், அதே ஆசாமி, உட்கார்ந்த இடத்திலிருந்து எதையோ போட்டுவிட்டு எடுக்கப் போகிருன். அல்லது அவன் கை, தரையில் விழுந்து கிடக்கும் ஒரு சாவிக் கொத்தை எடுக்கிறது என வைப்போம். இதைப் படம் பிடிக்கும் நிலைக்கு 'டில்ட் டௌன்' என்று பெயர். ஆனல் அதே ஆசாமி, தான் உட்கார்ந்திருக்கும் அறையைக் கண்ணேட்டம் பார்க்கிருன் என்ருல் அவன் கண்கள் முதலில் மேஜையைப் பார்க்கின்றன; பிறகு பீரோ, பிறகு ரேடியோ, பிறகு அலமாரி, பிறகு அங்குள்ள கோட் ஸ்டாண்ட் இத்யாதி. இவை ஒவ்வொன்ருக, தொடர்ந்தாற் போல், வரிசையாகப் பக்கவாட்டாகவே படத்தில் காட்டப்பட்டு வந்தால் இவை 'பானிங் ஷாட்' என்று கூறப்படுவதுண்டு. இது தவிர வரிசைக் கிரமப்படி ஒரு சிலர் நிற்கிருர்கள். அவர்களை ஒவ்வொருவராக, காமிரா, பக்கவாட்டில் நகர்ந்து கொண்டே, தனித்தனியாகப் படமாகப் பிடித்துக் காட்டப்படுகிறது என்ருல் இதுவும் 'பானிங்' வகையைச் சேர்ந்ததே என்று அம்பிக்கு மூச்சு விடாமல் கூறி முடித்தேன்.

அம்பி சிறிது நேரம் யோசித்தான். "லென்ஸ் என்றீர்களே, அது என்ன?" என்ருன்.

"ஓ அதுவா! மனிதனுக்குக் கண்கள் எப்படி அவசியமோ, அப்படி காமிராவுக்கு அவை. முன்பே சொல்லியிருக்கிறேன். காமிராவை நகர்த்தி நகர்த்தி வேண்டிய இடத்துக்குக் கொண்டுவந்து படம் பிடித்துக் கொள்ளலாம் என்று. அப்படி சௌகரியப்படா விட்டால் இருந்த இடத்தில் இருந்து கொண்டே 'லென்ஸ்'களை மாற்றிஅமைத்துப் படம் பிடிக்கலாம்" என்றேன்.

"முன்பு சொன்னீர்களே 'ஷாட்'டுகள் அந்த மாதிரி எடுக்க வேண்டுமென்ருல் ஒரே இடத்திலேயே படம் பிடிக்கப்பட்டால் நன்ருக இராதே. இந்த லென்ஸ்கள் ஏதாவது உபகாரம் செய்கிறதா?" என்று கேட்டான் அம்பி.

"ஏனில்லாமல்? லென்ஸ்கள் பல உள்ளன. அனேகமாக உபயோகத்தில் நெ. 40 (லென்ஸ்) என்றும் நெ. 50 (லென்ஸ்) என்றும், 75 என்றும், 25 என்றும், 100 என்றும் குறிப்பிடுவதுண்டு. காமிராவை நகர்த்தி வைத்துப் படம் பிடிக்கா விட்டாலும், இவைகளைக் கொண்டு எடுத்தால் காட்சி அமைப்புகள் மாற்றிப் படம் எடுத்தாற்போல வே காணப்படும். ஒரே கோணத்தில் இருந்து 40ஐ உபயோகித்து ஒரு காக்ஷி எடுக்கப்படும். 50ஐ உபயோகித்தும் அதே கோணத்தில் அதே காக்ஷி எடுக்கப்படும். இவைகளுக்குச் சிறிது வித்தியாசம் இருக்கும். நமக்கு நம் கண் போல, காமிராவுக்கு 'லென்ஸ்'. சாதாரணமாக 75ஐ உபயோகித்தால் 'குளோஸ் அப்'பும், 50ஐ உபயோகித்தால் 'மிட் ஷாட்'டும் கிடைக்கும். 40ஐ 'மிட் லாங் ஷாட்'டுக்கும், சில சமயம் 'லாங் ஷாட்'டுக்கும் உபயோகப் படுத்துவதுண்டு. 100ஐ மிகப் பெரியதாகக் காட்டுவதற்கு உபயோகப் படுத்துவதுண்டு" என்று சொன்னேன்.

பக்கத்திலிருந்த, நான்கு சக்கரங்களை உடைய ஒரு வண்டியில் உயரமாக இரும்பால் செய்யப்பட்ட ஒரு இயந்திரத்தைச் சுட்டிக் காட்டி, "இதென்ன ஸார்; இவ்வளவு பெரிதாக இருக்கி

டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸாரின் "கோமதியின் காதலன்" என்ற தமிழ்ப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரனும், முத்துலக்ஷ்மியும் தோன்றும் இக் காட்சி சேர்ந்திருக்கிறது.

றதே" என்ருன். "இதுவா? இதற்குப் பெயர் 'கிரேன்' என்று பெயர். உயரே இருந்து கொண்டு, இதில் படம் பிடிக்க வசதி உண்டு. சாதாரணமாக காமிரா பளுவாக உள்ளது. இதை உயரே கொண்டு போய்ப் படம் பிடிப்பது கஷ்டம். அதுவும் தவிர, இந்த கிரேனில் காமிராவைப் பொருத்துவதற்கும், ஒளிப்பதிவாளர், டைரெக்டர், தொழில் உதவிக் கலைஞர்கள் உட்காருவதற்கும் வசதி உண்டு. மேலுக்கோ, பக்கவாட்டிலிருந்து மேலெழுந்தவாரி போவதற்கோ, அல்லது மேலேயிருந்து கீழே பாய்ந்து வருவதற்கோ இதில் வசதி உண்டு. "உதாரணமாக, கோஷ்டி நடனம் நடைபெறுகிறதென்று வை. கண்கள் அந்நடனத்தை உயாந்த இடத்தில் இருந்து பார்க்க விரும்புகிறது; அல்லது மாடியிலிருந்து சிலர் பார்க்கிருர்கள். அக்காட்சி எப்படி யிருக்கும் என்று ரஸிக மனம் பார்க்க விரும்புகிறது. தாமரை மலர் மாதிரி அந்நடனப் பெண்கள் காட்சியளிப்பார்கள். இந்த அழகை 'கிரேன்' உதவிகொண்டு, காமிரா பதிவு செய்கிறது. இதற்கு 'கிரேன் ஷாட்' என்று பெயர். இங்கே இடைமறித்தான் அம்பி. "ஆமாம் ஸார், நடனக் காக்ஷிகளிலெல்லாம் இம்மாதிரி அனேக தடவை பார்த்திருக்கிறேன். தெய்வ வழிபாடு காக்ஷிகளில் 'டிராலி ஷாட்' வருகிற மாதிரி நாட்டியக் காக்ஷிகளில் இந்த 'கொக்கு ஷாட்' வருகிறது" என்ருன் சிரித்துக் கொண்டே.

மறுபடி மணி அடித்து "ஸைலன்ஸ்" என்று ஒரு பையன் கூக்குரலிடவே அம்பி என்னைப் பேசாதிருக்கும்படி சொல்லிவிட்டு, ஸ்டுடியோவினுள் போக விரும்பினன். அவனுடன் நானும் பின் தொடர்ந்தேன். அங்கு போடப்பட்டிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து மற்ற படப்பிடிப்பையும் தொடர்ந்து பார்த்தோம். ஒரு சில மணி நேரத்துக்கெல்லாம் படப் பிடிப்பு அன்று முடிவடைந்தது. டைரெக்டரிடம் விடை பெற்றுக் கொண்டு நாங்கள் வீடு திரும்பினேம்.

(தொடரும்)

காலத்திற்கு ஏற்ற படம்—"முதல் தேதி"

அஞ்சலி—கணேசன் அற்புத நடிப்பு

எங்கு நோக்கினும் வேலையில்லாத் திண்டாட்டம்; அதன் காரணமாக வறுமை; முடிவு தற்கொலை—இம்மாதிரி செய்திகளை தினசரி பத்திரிகைகளில் படிக்கும் காலமாக இருக்கிறது இது. அப்படிப்பட்ட இக்காலத்திற்கு ஏற்ற படம் "முதல் தேதி" என்று கூறினல் மிகையாகாது. தற்கொலை செய்துகொள்வது எத்தகைய மகத்தான தவறு; மனிதனுடைய கஷ்டம் அத்துடன் தீருவதற்குப் பதில் அதிகரிக்கவே செய்கிறது என்பதை "முதல் தேதி" அழகாகச் சித்தரிக்கிறது. அத்துடன் கூட பத்திரிகைகள் அனைத்தும் எழுதிவரும் "இன்றையக் கல்வி பயனற்றது" என்ற உண்மையை ஆழப் பதிய வைக்கிறது "முதல் தேதி". மேற்கூறிய இரு கருத்துகளும் மக்கள் மனதில் நன்கு பதியும் முறையில் சம்பாஷணைகளை, கனல் தெறிக்கும் வசனமோ, அடுக்கு மொழியில்லாமல் சிறப்பாக எழுதி யிருக்கிறார் ப. நீலகண்டன்.

நடிப்பு என்று வரும் போது, அதில் முதல் ஸ்தானத்தை சிவாஜி கணேசனுக்கா அல்லது அஞ்சலி தேவிக்கா, யாருக்கு அளிபபது என்பதும் பெரும் பிரச்னை தான். அஞ்சலி தேவி தனியே தோன்றும் கட்டங்களைப் பார்க்கும் போது அவருக்கே அந்தப் புகழ் என்று தோன்றுகிறது. ஆனல், அடுத்து சிவாஜி கணேசனின் நடிப்பைப் பார்க்கும்போது, 'இல்லை கணேசனுக்குத் தான்' என்று சொல்லத் தோன்றுகிறது இருவரும் சேர்ந்து நடிக்கும் கட்டங்கள் வரும் போது, இருவருமே பிரமாதம் என்று தான் சொல்லத் தோன்றுகிறது.

சிவாஜி கணேசன் இப்படத்தில் இது வரை நடிக்காத புது மாதிரியான ஒரு பாத்திரத்தில் நடித்திருக்கிறார். வயோதிகக் குடும்பத் தலைவனாக அவர் நடித்திருக்கிறார் என்று சொல்வதை விட—அப்படியே மாறிவிட்டார் என்று கூறுவதே மிகவும் பொருத்தமாகும். தற்கொலை செய்து கொள்ள திட்டமிட்ட பின் தன் மனைவி மக்களை அருகில் அழைத்து வைத்துக்கொண்டு பேசும் கட்டத்தில் அவரது நடிப்பு உள்ளத்தை உருக்குகிறது. அதுவும் தன் தனயனிடம், "இவளைப்போல் தாய் கிடைக்கமாட்டாள்" என்று கூறும் கட்டத்தில் கண்ணீர் விடச் செய்கிறார். சுருங்கக் கூறின், "சபாஷ் சிவாஜி!" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

பொறுப்புணர்ந்த, குடும்பத் தலைவியாக—அன்றாடம் கணவனுக்கு கோட்டு மாட்டிவிட்டு, டிபன் கொடுத்து—இப்படியாக, நாம் வாழ்க்கையில் காணும் நடுத்தர குடும்பத் தலைவியாக அஞ்சலி வெகு இயற்கையாக நடித்திருக்கிறார். வெல்லம் எந்தப் பாகத்தில் தித்திப்பாக இருக்கிறது என்று சொல்ல முடியாதோ அப்படி இவரது நடிப்பு எந்தக் கட்டத்தில் நன்றாக இருக்கிறது என்று கூற முடியாமல் இருக்கிறது. கணவன் கலங்கும் போது ஆறுதல் கூறுகிறார்; கணவன் பணத்தைப் பறி கொடுத்ததாகக் கூறும் போது அன்புடன் கடிகிறார். பசி தாங்காத தன் குழந்தை பக்கத்து வீட்டில் சாப்பிட்டது கண்டு கடிந்து கொள்ளும் கட்டத்தில் மானமே பெரிதெனக் கருதும் ஸ்திரீயாகக் காட்சி அளிக்கிறார்.

மூத்த மகளாக வரும் குமாரி சுசீலாவுக்கு நல்ல முகவெட்டு இருக்கிறது. கொடுத்த வரை தம் பாகத்தைத் திறமையுடன் நடித்திருக்கிறார்.

சிறுவன் மோகன், சிறுவர் உலகத்துக்கே, அவர்கள் பின்பற்ற வேண்டிய ஒரு உதாரணப் பையனாக விளங்குகிறான். தன் தந்தைக்கு வேலைக்காக முதலாளியிடம் மன்றாடும் கட்டத்திலும், பின் தன் தந்தையின் தற்கொலையைக் கூவிப் பத்திரிகை விற்கும் கட்டத்திலும் இவனது நடிப்பு கண்ணீரை வருவக்கிறது. பேபி உமாவின் தோற்றமே "ஐயோ பாவம்" என்று எண்ணச் செய்கிறது. வறுமைக் குடும்பத்தில் வாடும் குழந்தையாக வளமுடன் நடித்திருக்கிறார் இச் சிறுமி.

கிருஷ்ணன் — மதுரம் ஜோடியின் ஹாஸ்ய பாகம் இபபடத்திறகு மிகவும் அவசியமாகவே இருக்கிறது. அவர்களது நடிப்பு மிகையின்றி, கன கச்சிதமாய் அளவுடன் அமைந்திருக்கிறது. ஒரே ஒரு இடம் தவிர மற்ற இடங்களில் கிருஷ்ணனின் அதிகப்பிரசங்கமே

இது கவர்ச்சிகரமாக
இருக்க வேண்டிய சமயம்

மணமிக்க புதிய

ஆப்கான் ஸ்னோ

பெண்மையின் அழகை பாதுகாப்பதுடன் அதிகரிக்கச் செய்கிறது . .

சருமத்தை நாள் முழுவதும் மழமழப்பாகவும் மிருதுவாகவும் வைக்கிறது.......

அப்கான் ஸ்னோ

பாடன்வாலா

வாசனைகள், அழகுச் சாதன[illegible]



அரவிந்த் பிக்சர்ஸாரின் ''முல்லை வன''த்தில் காதலர்களாகத் தோன்றும் ஸ்ரீராம், குமாரி ருக்மணி.

இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ''திறமையுள்ள ஏழை வேலைக்குத் திண்டாடும்போது, சிபாரிசுள்ள திறமையற்ற பணக்காரர்களுக்கு வேலை கிடைக்கிறது. பணக்காரர்கள் போட்டி போடாமல் இருந்தால் வேலைத் திண்டாட்டத்திற்கே நம் நாட்டில் இடம் இல்லை'' என்ற கருத்துகளை அவர் அழகாகக் கூறும் கட்டத்தில் கை தட்டப்படுகிறது என்ருல் அது ரொம்ப நியாயம் என்றே நமக்குப் படுகிறது. அவர் ''கோட்டு-சூட்டு'' இவைகளைத் தவிர்த்திருக்கலாம் என்றே நமக்குப் படுகிறது. பணக்காரர் மாப்பிள்ளை என்பதற்காக அந்த உடை போதும்! இவர் கடன்காரர்களை விரட்டும் கட்டம் மிகவும் மட்டமான பத்தாம்பசலி ஹாஸ்யமாக இருப்பதையும் இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியவில்லை. தயிர் விற்றவன் வேலைக்காரனுக வருவது—ஏற்கெனவே சில நாடகங்களில் கையாளப்பட்டுளது எனினும்—அவன் கூவுவது சலசலப்பை ஏற்படுத்துகிறது.

பாட்டுகள் நல்ல கருத்துடன் எழுதப்பட்டுள்ளன. கிருஷ்ணன் பாடும் ''ஒண்ணுலே யிருந்து'' என்ற உடுமலைக் கவியின் பாட்டு பல பச்சை உண்மைகளை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. ''ஏழையை ஏன் படைத்தாய்'' என்னும் கே. டி. சந்தானம் அமைத்த பாட்டில் நல்ல கருத்து இருக்கிறது. தேசிகர் முதன் முறையாக இப் படத்தில் பின்னணியில் பாடியிருக்கிருர். கணீரென்றுகேட்க இனிமையாகப் பாடியிருக்கிருர்.

நடனங்கள் அலுப்புத் தட்டும் அளவக்கு இருக்கின்றன. பேபி சசசு சிறுமியருடன் ஆடும் நடனம் அவசியமில்லை. தேவலோக நடனங்களையும் குறைத்திருக்கலாம். சேகரின் காட்சி ஜோடனைகள் தேவலோக—யமலோகக் காட்சிகளில் நன்கு சோபிக்கின்றன. ஒலிப்பதிவும், ஒளிப்பதிவும், நன்ருகவே இருக்கின்றன.

டைரெக்டர் ப. நீலகண்டனுக்கு இப் படம் ஒரு பிரமாத வெற்றியே. இவருடைய திறமை பல இடங்களில் வெளிப்படுகிறது. குடும்பத் தலைவன் தற்கொலை செய்து கொண்டு விட்டதாகவே எண்ணும்படியே—கடைசிவரை அது கனவு என்ற உண்மையை மறைத்து—விறுவிறுப்பாகச் சம்பவங்களைக் கொண்டு போயிருக்கிருர்.

மறுநாள் பிறக்கப் போகும் முதல் தேதி, பணத்தைக் கொண்டு வந்து கொட்டுவதாக மனைவிக்கும், அதே முதல் தேதி கணவனை பயமுறுத்துவதாகவும் காட்டியிருப்பது ஒரு சிறந்த அம்சம்.

அங்கங்கே குற்றங்களும் இல்லாமல் இல்லை. சொர்க்கலோக, யமலோகக் காட்சிகளை இன்னும் குறைத்து படத்தை மேலும் விறுவிறுப்பாக்கி யிருக்கலாம். ஒரு இடத்திலாவது ஆபாசம், விரஸம் இவை யில்லாது படத்தைத் தயாரித்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மொத்தத்தில், ''முதல் தேதி'' பத்மினி பிக்சர்ஸார் தயாரித்துள்ள ஒரு லட்சியப் படம். ஒவ்வொரு குடும்பமும் பார்க்க வேண்டிய நல்ல படம்.

—**''ஜாம்பவான்''.**

தயாராகும் புதுப் படங்கள்

நடிகர் கே. ஆர். ராமசாமியின் முயற்சியில் விஜயா பில்ம்ஸ் என்ற படக் கம்பெனி ஆரம்பமாகியுள்ளது. இக் கம்பெனியார் ரேவதி ஸ்டுடியோவில் "நீதிபதி"யைப் படமாக்குவதில் முனைந்திருக்கின்றனர். 'சோலைமலை' என்பவர் எழுதியுள்ள இக் கதையின் வசனங்களை ஏ. கே. வேலன் எழுதியுள்ளார். இது ரேவதியில் படமாக்கப்படுகிறது. ஏ. எஸ். ஏ. சாமி டைரெக்ட் செய்து வரும் இப்படத்தில் கே. ஆர். ராமசாமி, டி. எஸ். பாலய்யா, குசலகுமாரி ஆகியோர் பிரதம பாகங்களில் நடித்து வருகின்றனர்.

"பத்மினி"யைத் தயாரித்துத் திரையிட்டுள்ள அசோகா புரொடக்ஷன்ஸார், அடுத்தபடி "வேலை காலி இல்லை" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். படக் கதை வசனம் இவைகளை எழுதுவதுடன் டைரெக்ஷனையும் வேல்சாமிக் கவியே ஏற்பாராம். இப் படத்திலும் பி. எஸ். கோவிந்தன் பிரதம பாகத்தில் நடிப்பார்.

சுந்தரி பிக்சர்ஸார் தங்களது இரண்டாவது தயாரிப்பாக "இன்ப வாழ்வு" என்ற படத்தைத் தயாரிக்கப் போகிறார்கள். இப் படத்தின் ஆரம்ப விழா பிப்ரவரி மாதம் 5ம் தேதி நடந்தது. கே. பி. ஜானகிராம் எழுதியுள்ள இக் கதைக்கு வில்லன் டி. எஸ். நடராஜன் வசனங்களையும், கே. பி. காமாக்ஷி பாட்டுகளையும் எழுதியுள்ளனர். வாஹினியில் இப் படம் தயாராகிறது. கே. பி. ஜானகிராம், கே. பி. ஜே. சுந்தராம்பாள், ஸி. ஆர். ராஜகுமாரி, நம்பியார், ஜி. சகுந்தலா, பாக்கியம் ஆகியோர் இப்படத்தில் நடித்து வருகின்றனர். படத்தை கே. வேம்பு டைரெக்ட் செய்கிறார்.

"அண்ணன்-தம்பி" என்ற படத்தை பார்வர்ட் ஆர்ட் பிலிம்ஸார் தங்களது இரண்டாவது படமாகத் தயாரிக்கப் போகிறார்கள். படம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவிலேயே தயாரிக்கப் படுமென்றும் படத்தை எஸ். ஏ. நடராஜனே டைரெக்ட் செய்வாரென்றும் தெரிகிறது. இப் படத்தின் கதை-வசனம் எஸ். டி. சுந்தரத்தால் எழுதப்பட்டுள்ளது எனத் தெரிகிறது.

இலங்கையில் பேராதரவைப் பெற்றுத் திரும்பியுள்ள டி. கே. எஸ். சகோதரர்கள், தங்கள் ஔவை புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாக "யார் பையன்?" என்ற ஒரு படத்தைத் தயாரிக்க முன்னேற்பாடுகளைச் செய்து வருகிறார்கள். இது ஒரு பிரபல மராட்டிய கதையைத் தழுவியதாகும். டைரெக்ஷன் கே. ராமனாத்திடம் ஒப்படைக்கப்படலாமென்றும் தெரிகிறது.

சில வருஷங்களுக்குப் பின் மீண்டும் என். எஸ். கிருஷ்ணன் சொந்தப் படத் தயாரிப்பில் இறங்கியிருக்கிறார். அவர் தமது என்னெஸ்கே பில்ம்ஸின் தயாரிப்பாக "படித்த முட்டாள்" என்ற படத்தைத் தயாரிக்கப்போகிறார். இதற்கான ஆரம்ப விழாவை அவர் பிப்ரவரி மாதம் 27ம் தேதி வாஹினி ஸ்டுடியோவில் நடத்தினார். விஜயா புரொடக்ஷன்ஸ் அதிபர் நாகி ரெட்டி காமிராவை முடுக்கி விட்டார். இப் படத்தில் நாகய்யா, பாலய்யா, மனோஹர், லலிதா, பி. கே. சரஸ்வதி, கிருஷ்ணன், மதுரம் ஆகியோர் நடிப்பார்கள்.

நடிகை மாதுரிதேவி சம்பந்தப்பட்ட ஸ்ரீமதி பிக்சர்ஸார், கோவை சென்ட்ரல் ஸ்டுடியோவில் "தம்பி என் தெய்வம்" என்று ஒரு படத்தைத் தயாரித்து வருகிறார்களாம். இப்படத்தின் கதை வசனம் சக்தி கிருஷ்ணசாமியால் எழுதப்பட்டுள்ளது. ஜி. ஆர். ராவ் டைரெக்ஷனில் தயாராகும் இப்படத்தில் டி. ஆர். ராமச்சந்திரன், ஏ. பி. நாகராஜன், மாதுரி தேவி, ராஜ சுலோசனா, எம். எஸ். எஸ். பாக்கியம், ஏழுமலை, கருணாநிதி ஆகியோர் நடித்து வருகின்றனர்.

நண்பன் படத்தைத் தயாரித்த எம். டி. வி. புரொடக்ஷன்ஸார் அடுத்தபடி "மகா சக்தி" என்ற படத்தைத் தயாரிக்க முன்னேற்பாடுகளில் மும்முரமாயிருக்கின்றனர். படத்தின் கதை-வசனத்தை எம். லக்ஷ்மணன் எழுதியிருக்கிறார். படத்தில் சிவாஜி கணேசன், லலிதா, பத்மினி, கிருஷ்ணன்-மதுரம் ஆகியோர் நடிக்கக் கூடுமென்றும் தெரிகிறது.

கோபிச் செட்டிப் பாளையத்தைச் சேர்ந்த கே. கே. இரத்தினக் கவுண்

டர் என்பவர் புதிதாக இப்பொழுது பட உலகில் காலடி வைத்திருக்கிறார். இவர் மைசூர் பிரிமியர் ஸினிடோன் ஸ்டுடியோவில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரிக்கப் போகிறார். அப்படத்தில் பி. எஸ். கோவிந்தனும், அஞ்சலி தேவியும் பிரதம பாகங்களில் நடிப்பார்களாம்.

கிருஷ்ண பிக்சர்ஸார், தங்களது தயாரிப்பான "காவேரி"க்கு மக்கள் அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, அடுத்தபடி "மதுரை வீரன்" தமிழ்ப் படத் தயாரிப்பு வேலையையும் தொடங்கிவிட்டனர். வழக்கம் போலவே இப்படத்திலும் சிவாஜி கணேசன், பத்மினி தவிர இன்னும் பல நக்ஷத்திரங்களும் நடிக்கக்கூடும். படம் இவ்வருஷ தீபாவளி வெளியீடாக இருக்குமென்றும் இப்போதே அறிவித்துள்ளனர்.

"நல்ல தங்காளை"ப் படமாக்குகிறார் "கனவு" படத்தைத் தயாரித்த பி.வி. கிருஷ்ணய்யர். இப் படத்தில் ஏ. பி. நாகராஜன் நல்லண்ணனாகவும், மாதுரி தேவி மூளி அலங்காரியாகவும் நடிக்கின்றனர். நல்ல தங்காளாக நடிக்க ஒருபிரபல நடிகை ஒப்பந்தம் செய்யப்படலாமெனத் தெரிகிறது.

பரணி பிக்சர்ஸார், "சிந்தாமணி" தவிர "சண்டிதாஸ்" என்ற படத்தையும் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிப்பார்களாம். படத்தில் பிரதம பாகத்தில் பானுமதி நடிப்பார் என்பதும் ராமகிருஷ்ண படத்தை டைரெக்ட் செய்வாரென்பதும் நிச்சயம்.

டைரெக்டர் பி. எஸ். ரங்கா அடுத்துத் தாம் தயாரிக்க திட்டமிட்டிருக்கும் "தெனாலிராமனி"ல் நடிக்க சிவாஜி கணேசனை ஒப்பந்தம் செய்திருக்கிறார்.

தமிழ்நாட்டில் தயாராகும் ஹிந்திப் படங்கள்

ஜெமினி ஸ்டுடியோவில், "தோதுலே" (இரண்டு மாப்பிள்ளைகள்) என்ற ஒரு ஹிந்திப் படம் வெகு சுருசுருப்பாகத் தயாராகி வருகிறது. இப்படத்தில் சஜ்ஜனும்-ஷியாமாவும் காதல் ஜோடியாக நடித்து வருகின்றனர். இவர்கள் தவிர வனஜா, கன்யாலால், ஆகா, பொட்டை கிருஷ்ண மூர்த்தி, லலிதாபவர் ஆகியோரும் நடித்து வருகின்றனர். கே. ஜே. மஹாதேவன் டைரெக்ஷனில் தயாராகி வரும் இப்படம் இம் மாதம் திரைக்கு வந்து விடலாம்.

பாய் பாய்

ஏவி. எம். ஸ்டுடியோவில் இரண்டு ஹிந்திப் படங்கள் தயாராகி வருகின்றன. "பாய் பாய்" என்பது ஒன்று. எம். வி. ராமன் டைரெக்ட் செய்யும் இப் படத்தில் அசோக் குமார், கிஷோர் குமார், நிம்மி, நிருபராய், மீனு ஷோரி, ஓம்பிரகாஷ் ஆகப் பல வட இந்திய நக்ஷத்திரங்கள் நடிக்கின்றனர். படத்தின் வசனமும்-பாடல்களும் ராஜேந்திர கிருஷ்ணனால் எழுதப்பட்டுள்ளன.

சிவ-பக்தா

அங்கு தயாராகும் மற்றொரு படம் "சிவ பக்தா" என்ற புராணப் படமாகும். "காளஹஸ்தி மஹாத்மியம்" ஹிந்தியில் தயாரிக்கப்படுகிறது. மோகன்லால் பாஜ்பாய் இப் படத்தின் வசனங்களையும், நேபலி என்பவர் பாட்டுகளையும் எழுதியுள்ளனர். சங்கீத டைரெக்ஷனை சித்ர குப்தா கவனித்து வருகிறார். திரைக் கதையை எழுதியுள்ள எச். எல். என். ஸின்ஹாவே படத்தை டைரெக்ட் செய்து வருகிறார். தமிழ் நாட்டில் தயாரிக்கப்படும் முதல் ஹிந்தி புராணப் படமாகும் இது. பத்மினி, பண்டரி பாய், இவர்களுடன் குமாரி தேவி, மிஸ்ரா, ஆனந்த குமார், சாஹு மோடக் ஆகப் பல பம்பாய் நக்ஷத்திரங்களும் நடிக்கும் இப் படம் இம் மாதம் திரையிடப்படும் எனத் தெரிகிறது.

லாஜ்

ஜம்பு புரொடக்ஷன்ஸின் "லாஜ்" ஓரளவிற்குப் படமாகி நிற்கிறது. ரா. வெங்கடாசலம் எழுதியுள்ள "மனைவியின் மகன்" கதைதான் இது. வைஜயந்திமாலா, கரன் திவான், கிஷோர் ஆகியோர் நடிக்கும் படம் இது.

பொதுஜனம் பேசுகிறார்

★ யுனைடெட் பிலிம் ஆர்ட்ஸின் "வள்ளியின் செல்வன்" என்ற படத்தைப் பார்த்தேன். டைரெக்டர் கொத்தமங்கலம் சுப்புவைப் போற்றுகிறேன். இதில் அவர் திறம்பட ஒரு செயலை தைரியமாகச் செய்து இருக்கிறார். அது யாதெனில் இப் படத்தில் வரும் கதாநாயகன், கதாநாயகனின் தோழன் அல்லது உப பாத்திரங்களில் வரும் எவருமே சிகரெட் அல்லது சுருட்டு போன்ற பொருள்களை உபயோகப்படுத்தாதிருப்பதே ஆகும். இப்பொழுது வரும் படங்களிலெல்லாம் கதாநாயகன் வருத்தமுறுவது, சந்தோஷமுறுவது அல்லது எப்பொழுதுமே படம் ஆரம்பம் முதல் முடியும் வரை சிகரெட்டைக் குடித்துக் கொண்டிருப்பதைப் பார்ப்பது வழக்கமாகி விட்டது. வில்லனே என்றால் கேட்கவே வேண்டியதில்லை. அவர் முதலில் தோன்றும் போதே சிகரெட்டைப் பிடித்துக்கொண்டுதான் வருவது வழக்கமாகி விட்டது.

கோ. இராமமூர்த்தி, சென்னை-1.

டைரெக்டர்கள் கவனிக்க

ஒரு படத்தின் வெற்றிக்கும், தோல்விக்கும் முழுப் பொறுப்பாளி அதன் டைரெக்டர் தான். அப்படத்தின் கதைப் போக்கு, எக்காலத்திய கதை, எந்த சூழ்நிலையில் எடுக்கப்படுகிறது என்ற எல்லாவிதமான கருத்துகளோடும் கவனமாக டைரெக்ட் செய்கிறார். ஆனால் இதிலே எத்தகைய குற்றங்கள் செய்யப்படுகின்றன என்பதை அவர்களில் பலர் தெரிந்துகொள்வதே இல்லை. உதாரணமாக 'எதிர்பாராதது' என்ற படத்தில் சுந்தருக்கு கண் 'ஆபரேஷன்' முடிந்து கட்டு அவிழ்க்கப்படுகிறது. அந்த சமயத்தில் அந்த அறையிலே ஆயிரம் வால்ட் பல்புகள் அதிகமாக பிரகாசிக்கிறது. உண்மையில் கண் ஆஸ்பத்திரிகளில் பார்ப்போமானால் கட்டவிழ்க்கக் கூடிய நேரத்தில் அந்த அறையின் ஒரு மூலையில் ஒரு சிறிய பல்புதான் எரிந்து கொண்டிருக்கும். பிறகுதான் டாக்டர் ஒவ்வொன்றாகக்காட்டி பரீக்ஷை செய்வார். "மனோகரா" படத்தின் கடைசிக் காட்சிகளில் மனோகரனின் குழந்தையின் கால்களில் 'சாக்ஸ்' போடப்பட்டிருக்கிறது. மனோகரா சேர, சோழ, பாண்டிய காலத்துக் கற்பனைக் கதை. தன் பிள்ளையின் கால்களுக்கு 'சாக்ஸ்' அணிவித்து மகிழக் கூடிய அளவிற்கு அன்றையத் தமிழன் நாகரிகம் அடையவில்லை. "ரத்த பாச"த்தில் பம்பாயில் சுத்தித் திரியும் ராஜா வைர நெக்லஸைத் திருடிவிட்டு சிறைக்குப் போகிறான். ஆனால் அவனை விடுதலை செய்ய மதராஸிலிருந்து 'ஸ்பெஷல்' போலீஸ் வருகிறது. "ஔவையார்" படத்தில் குமாரி வனஜா பூப்பந்து ஆடுவதற்குப் பதிலாக ரப்பர் பந்து ஆடுகிறார். பார்ப்பதற்கு சிறியவைகளாகத் தெரியும் இக் குறைகள் கவனிக்கப்படவேண்டும்.

ஜி.என். ராஜகோபாலன், கொச்சி.

வாழ்க! "ரத்தக் கண்ணீர்"

சென்ற ஆண்டில் வெளியான "ரத்தக் கண்ணீர்" என்ற படம் இன்றைய வாலிபர்களுக்கு ஓர் ஒப்பற்ற படிப்பினையாகும். மேல் நாட்டு நாகரீகத்தில் மூழ்கித் திளைக்கும் ஆண்கள், படித்துப் பட்டங்கள் பெற்றுவிட்டதன் பயனாக, தங்களைப் பெற்று, சீராட்டி வளர்த்து அப்பட்டங்களை பெறக் காரணமாகயிருந்த தங்கள் தாயை மறந்து விடுகிறார்கள். மமதை கொண்டு அவளை அலட்சியப் படுத்துகிறார்கள். தாயென்று சொல்லிக் கொள்ளப்பெருமைப்படாமல் வெட்கப் படுகிறார்கள். கஷ்ட சமயத்தில்தான் தாயைப்பற்றி எண்ணுவார்கள். இவர்களெல்லாம் "ரத்தக் கண்ணீர்" படத்தைப் பார்த்த பின்பு திருந்துவார்களென்று நம்புகிறேன். அடுத்த முக்கிய விஷயம் என்னவெனில், இன்று அநேகர் அக்கினி சாட்சியாகக் கைப்பிடித்துத் தாலி கட்டிய மனைவியை மறந்து தாசிகளின் மோகவலையில் சிக்கி அப்பத்தினிகளைக் கண்ணீருடன் தவிக்க விடுகி

* பரிசு பெற்ற கடிதம் எழுதியவர் :—கோ. ராமமூர்த்தி, 14, ராமசாமி தெரு, சென்னை-17

திரிவேணி பிக்சர்ஸின் "ஒன்றே குலம்" படத்தில் மாதுரிதேவி முக்கிய பாகத்தில் இவ்விதம் தோன்றி நடித்து வருகிறார்.

றார்கள். பாவம்! கணவனே கண்கண்ட தெய்வம், அவன் சுகமே நம் சுகமென்று அவளது வாழ்க்கையை அவனுக்காகத் தியாகம் செய்யும் உத்தம மனைவிகளை உதாசீனம் செய்வதை இன்றும் காண்கிறோம். பத்தினிகளின் கண்ணீர் ஒரு நாளும் வீண் போவதில்லை. அவர்களுக்கு முடிவில் கிட்டும் பரிசு "ரத்தக் கண்ணீ"ரில் மோகனுக்குக் கிடைத்த கொடிய வாழ்வுதான். ஆகையால் சீர்கெட்டு இளம் மனைவிகளை வீட்டில் தவிக்கவிடும் வாலிபர்கள், இனிமேலாவது திருந்தி மனைவிகளை அன்புடன் நடத்தி இல்வாழ்க்கையை இன்பமுள்ளதாகத் திருத்தி அமைத்துக் கொள்வார்களாக! நேர்வழியினின்று பிசகி, கேவல வாழ்க்கையை மேற்கொள்ளும் கனவான்களுக்கெல்லாம் "ரத்தக்கண்ணீர்" சரியான ஒரு சவுக்கடி.

அம்பிகை ரங்கநாதன், ஸிலோன்.

குரங்கு மனிதன்!

தற்போது வெளிவரும் சில தமிழ்ப் படங்களில் ரஸிகர்களுக்கு வெறுப்பையும் அலுப்பையும் மூட்டும் சில பாட்டுகள் பாடப்படுகின்றன என்பதற்கு, "தூக்குத் தூக்கி"யில் வரும் 'குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன்' என்ற பாட்டை ஒரு உதாரணமாகச் சொல்லலாம். டார்வின் என்ற மேனாட்டவர் எப்போதோ சொல்லிய ஒரு கருத்தை வைத்துக் கொண்டு அது உலக ரீதியாக ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையைப்போல பாடல் அமைத்திருப்பது கண்டனத்திற்குரியது. குரங்கிலிருந்துதான் மனிதன் பிறந்தான் என்பது சாதாரணமாக எல்லோராலும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மை அல்ல. அது தர்க்கத்துக்கு உரிய ஒரு விஷயம். இந்தப் பாட்டைக் கேட்கும் எழுத்தறிவு இல்லாத சாதாரண ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? குரங்கிலிருந்து தான் மனிதன் வந்தான் போலிருக்கிறது என்று தீர்மானிப்பார்களல்லவா? பகுத்தறிவுள்ள மனிதன் பகுத்தறிவில்லாத குரங்கிலிருந்து பிறந்தான் என்று சொல்லுவது மனித சமுதாயத்திற்கே ஒரு பெருத்த அவமானமாகும். அந்த அபத்தமான கருத்தை நம் தமிழ் நாட்டின் பாடலில் அமைத்திருப்பதோ அதைவிட மிகவும் வெட்கப்பட வேண்டிய விஷயம். இம்மாதிரி எல்லோராலும் ஏற்றுக்கொள்ள முடியாத, முரணான கருத்துக்களை நம் பாடலமைப்பவர்கள் ஏன் புகுத்த வேண்டும்?

அ. அல்போன்ஸ், பொன்மலை.

படம் பிழைத்தது

படித்த யுவதி பட்டிக்காட்டான் ஒருவனை மணக்க, பழமைப் பண்பாட்டில் பழகிய அவளுடன் பிறந்த இளையவள் நாகரிக வாலிபனுக்கு நாயகியாகிறாள். புதுமைப் பெண்ணுக்குக் கணணியமான கணவன் கிடைக்கவில்லையே என்ற கவலை. பழமை அணங்கிற்குப் பதியின் பண்புக்குத் தகுந்த படிப்பு தனக்கு இல்லையே என்ற ஏக்கம். இந்த இருவிதமான மனோ நிலையைச் சித்தரிக்கிறது "நல்ல தங்கை". குற்றமற்ற நகைச் சுவையுடன் விறு விறுப்பாக முன்னேறிக் கொண்டிருக்கும் கதையில் ஒரு நெருக்கடியான கட்டம். உன்னதமான குறிக்கோளுடன் உயர்ந்த பாணியில் உத்தமமான கருத்துக்களை விளக்கிக் காட்டும் படமா? அல்லது மனிதப் பிறவியை

விலங்கினத்தினின்றும் வேறு படுத்தும் கட்டுப்பாடு, ஒழுக்கம் முதலிய உயரிய குணங்களுக்குத் ''துறவு'' அளித்து, அடிப்படையான உணர்ச்சிகளையே அம்பலப் படுத்தும் அநாகரிகப் படமா என்ற மனக்கிலேசத்தை உண்டாக்கும் இடம். மணம் முடிந்த பிறகு படித்த பெண் இளையவளின் கணவனை நாகரிக வாலிபனைத் தனிமையான இடத்தில் சந்திக்கிறாள். அவனிடம் வெகு நாட்களாக ஒரு விஷயத்தைப் பற்றிப் பேச ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிவிக்கிறாள். தானும் படித்திருப்பதாகவும், வாலிபனும் படித்திருப்பதனால் அவனுடன் பேச இயற்கையாகவே தான் விரும்பியதாகவும் சொல்லுகிறாள். தனிமையில் சந்திக்கக் காத்திருந்ததாகவும் தெரிவித்தாள். 'பீடிகை பலமாக இருக்கிறதே, பாவையின் வாயிலிருந்து என்ன புரட்சிகரமான ''முத்துக்கள்'' உதிருமோ' என்று கவலைப் படுகிறோம். வாலிபனும் சந்தேகமுற்று விஷயத்தைச் சுருக்கமாகக் கூறும்படி கேட்கிறான். படித்த பெண் பயத்தைப் போக்குகிறாள். இல்வாழ்க்கையில் இளையவள் தெரியாமல் செய்யும் குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு அவளிடம் அன்புடன் நடந்துகொள்ளும்படி வாலிபனைக் கேட்டுக்கொள்கிறாள். ''அப்பாடா'' என்று, நமக்கு ஒரு பாரம் நீங்கியதுபோல் தோன்றுகிறது. படம் பிழைத்தது. இது ஒரு நல்ல கட்டம் என்பதில் ஐயமில்லை.

ஜே. ராஜலக்ஷ்மி, சென்னை—1.

பரிசுப் போட்டி !

இன்றைக்கு ஏறத்தாழ இரு ஆண்டுகளுக்கு முன் வெளியான சொஸைட்டி பிக்சர்ஸாரின் ''உலகம்'' பொது மக்களின்-குறிப்பாக ரஸிகர்களின் மனதில் இடம் பெறவில்லையென்றாலும், அது சம்பந்தமான 'அதிர்ஷ்டப் பரிசுப் போட்டி'யை அவர்கள் இன்னும் மறக்கவில்லை! அவர்கள் அதை மறக்காமல் என்றும் தங்கள் நினைவிலிருத்திக் கொண்டிருப்பதன் மூலம், அப்படத்தையும் ('உலகம்'!) அவர்கள் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கட்டும் என்பதற்காகத்தானே

புது வருஷ வாழ்த்து

உணவிற்கு சுசியும் ருசியும் அளிப்பது...

டி டி
மிஸ்கி
பெருங்காயம்

THE SCIENTIFIC
TT
MISKY
ASAFOETIDA

ரஷித் ஜம்ஷட் சன்ஸ் & கோ
தலைமை ஆபீஸ்: பம்பாய்-3.
கிளைகள்: மதுரை . கும்பகோணம் . சென்னை

எங்கள் டி. டி. பெருங்காய பாக்கெட்டில் பிரைஸ் கூப்பன் இருக்கிறது. கவனித்து வாங்குக.

அந்த 'அதிர்ஷ்டப் பரிசுப் போட்டி'யை ஏற்படுத்தினார்கள் என்று நினைக்க வேண்டியிருக்கிறது! அந்த அளவுக்கு மகத்தான முறையிலே, 'உலக'ப் பரிசுத் திட்டம் பற்பல வழிகளில் விளம்பரப்படுத்தப் பட்டது! இன்று அப்பரிசுத் திட்டத்தின் முடிவென்ன? இதைத்தான் இன்று பொதுமக்களும் ரஸிகர்களும் கூர்ந்து கவனித்து வருகிறார்கள். முதலில் பரிசுத் திட்டத்தின் முடிவு தேதியை 31-12-53 என்று விளம்பரப்படுத்திய சொஸைட்டி பிக்சர்ஸார், பின்னர் அத்தேதி கடந்ததும், 30-6-54 என்று முடிவைத் தள்ளிப் போட்டார்கள். அதன் பின் அத்தேதியும் கடந்த பின்னர், முடிவை 31-12-54-க்கு ஒத்திப் போட்டார்கள்! இன்று அத்தேதியும் கடந்து மூன்று மாதங்களாகிவிட்டன!! ஆனால் மூன்றாம் முறையாக முடிவு தேதியை அவர்கள் ஒத்திப் போடவில்லை(!) பரிசின் முடிவையாவது அறிவித்தார்களா என்றால், அதுவும் இல்லை! பின்னர் 'உலக'த்தின் ஒரு லட்ச அதிர்ஷ்டப் பரிசு திட்டத்தின் உண்மைதான் என்ன? இப்பரிசுத் திட்டமும் வெறும் பெயரளவில் பிசுபிசுத்து விடுமோ என்றுதான் ரஸிகர்கள் ஐயுறுகின்றனர்! சொஸைட்டி பிக்சர்ஸார் அவர்களுக்கு என்ன முடிவு கூறப் போகிறார்கள்?

"திரை வண்டு" இரவாஞ்சேரி.

அந்த நாளும் வந்திடாதோ?

சமீபத்திய வெளியீடான "பத்மினி" என்னும் படத்தில் பணத்திற்காகப் பைத்திய வேஷம் போடும் மகன், தன் தந்தையைப் பலமுறை அடிக்கிறான், காலால் எட்டி உதைக்கிறான். தமிழ் மக்களை தலையிறங்கச் செய்யும் காட்சி இது. "தந்தையின் கட்டளை" என்று சிற்றன்னை கூறியபோது கட்டுப்பட்டுக் கானகம் சென்றான் இராமன்; தந்தையின் ஆணையை ஏற்று அன்னையின் தலையைத் தயங்காது துண்டித்தான் பரசுராமன். உண்மையிலேயே பைத்தியமாக இருந்தாலும்கூட பாழும் பணத்திற்காகத் தந்தையை எந்தத் தமிழ் மகனும் எட்டி உதைக்கமாட்டான். மிகவும் ஹாஸ்யமாக இப்பாகத்தை அமைத்து விட்டதாகப் பெருமை கொள்ளும் டைரெக்டர்-திறம்பட நடித்துவிட்டதாக நினைத்து மகிழும் நடிகர்-இவர்களுக்கு ஏற்றபடி வசனமும் பாட்டும் இயற்கையாக அமைத்துக் கொடுத்து விட்டதாக எண்ணி இன்புறும் வசனகர்த்தா இவர்கள் கையிலே சிக்கிச் சிதைவுறும் இன்றையப் படக் கலையின் நிலை....அப்பப்பா! புதுமைக் கருத்துக்களைப் புகுத்துவதாக நினைத்து பாரதநாட்டுப் பண்பையே குலைக்கும் வகையில் வளர்ந்து வரும் நம் படக் கலையின் நிலை மாறி மக்களை மகிழச் செய்யும் அந்த நாளும் விரைவில் வந்திடாதோ?

ஆர். வஸந்தா, துறையூர்.

"வள்ளியின் செல்வன்" படத்தில் வனஜாவும், ஜெமினி கணேசனும் ஆடும் இந்த நடனத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

என்ன தவறு?

ஜனவரி மாத ஊசியில் 'தவறான கருத்து' என்ற தலைப்பில் சகோதரி இ. கே. ராஜலக்ஷ்மி எழுதிய பரிசு பெற்ற கடிதத்தைப் படித்தேன். "தூக்குத் தூக்கி" கதை இன்று நேற்று புதிதாகக் கற்பனை செய்யப்பட்டதல்ல;

எத்தனையோ காலமாகத் தமிழர்களின் பரம்பரையிலே உலவிவரும் அத்தைப் பாட்டிக் கதைதான் அது. சகோதரி, "பத்தினிகள் வாழ்ந்த நாடு இது, அதனால் இந்த மாதிரித் தவறுகக் கருதக் கூடாது" என அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். அவர் ஒரு துருவத்தை மட்டுமே பார்த்திருக்கலாம்; மறு துருவத்தையும் அவர் கண்ணுற வேண்டும். பத்தினிகள் வாழ்ந்த பாரத நாடுதான் இது. எனினும் இந்த மாதிரி 'பத்தினி'களும் இருந்திருக்கிறார்கள் என்று மக்களுக்கு நீதி கற்பிக்கும் வகையில், தீர்க்கதரிசிகளான நம் முன்னோர்களால் நமக்கு வழங்கப்பட்ட உதாரணக் கதைதான் "தூக்குத் தூக்கி". இன்னும் நாம் தினசரி ஏடுகளில் பல வழக்குகளைப் படிக்கிறோம். எவ்வளவோ ஆபாசமான கொலை வழக்குகளும் வருகின்றன. அதனால் உண்மையிலேயே பத்தினிகளாக இருப்பவர்களுக்கு மாசு கற்பித்துவிட முடியுமா என்ன? சகோதரி அவசரப்பட்டு மனதில் பட்டதை, மாறுபட்ட அர்த்தம் தொனிக்கும்படி எழுதிவிட்டார். முடிவாக, தவறை எடுத்துக் காட்டித்தான் நீதியைச் சொல்லமுடியும் என்ற பரந்த நோக்கோடு பார்த்தோமேயானால், "தூக்குத் தூக்கி" கதை ஒரு நல்ல, நீதி நிறைந்த, நாட்டிற்கு அவசியமான கதை என்றே கொள்ளலாம்.

கே. ரகுபதி, கும்பகோணம்.

கவனித்திருக்க வேண்டும்!

சமீபத்தில் வெளியான ஒரு சமூகப் படத்தில் சில வசனங்களைக் கேட்ட போது அவற்றை சென்ஸார் கேட்டுத்தான் அனுமதி அளித்தார்களா அல்லது காதை மூடிக் கொண்டுதான் அனுமதி அளித்தார்களா என்று சந்தேகமாக இருக்கிறது. ஒரு காட்சியில் கதாநாயகன் தன் மனைவியை மறந்து தாஸி வீடே சொர்க்கம் என நினைத்து அவளது அணைப்பில் சல்லாபமாக இருக்கும்போது கதாநாயகனின் நண்பனுடன் கதாநாயகி வந்து கதறும் போது அவன் அவளை "தேவடியாள்" என்று சிறிதும் கூசாமல் கூறுகிறான். அடுத்து ஒரு காட்சியில் தாஸியின் சகவாசத்தால் குஷ்டரோகியான கதாநாயகன் அவள் தன்னை வெறுத்தவுடன் கோபத்தோடு "தேவடியாள்

பெற்றெடுத்த திருமகளே'' என்று கூறு கிறன். இவ்வசனங்களை எழுதிய வசன கர்த்தாவிற்காவது தெரிந்திருக்க வேண்டும், இவ்வசனங்கள் யாவரும் கேட்கக் கூடிய நல்ல வசனங்களா என்று. அல்லது அப்படத் தயாரிப்பாள ருக்காவது தெரிந்திருக்க வேண்டும். இல்லையென்றல் சென்ஸாராவது கவ னித்துக் கத்தரிக்கோல் பிரயோகம் செய்திருக்கவேண்டும். இனிமேலாவது இவ்விதமான அசம்பாவித வசனங் களை சென்ஸார் நன்ருக கவனித்துத் தணிக்கை செய்யும்படி கேட்டுக்கொள் கிறேன்.

"மைனுவதிப் பிரியன்" கமுதி.

கண்கள் திறக்குமா?

மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் படமாக்க வெளிநாட்டார் ஒருவர் முயற்சி செய்து கொண்டிருப்பது எல் லோருக்கும் தெரியும். இதைத் தவிர சமீபத்தில் வந்த செய்திகள் புத்தர், தாகூர் இவர்களுடைய வாழ்க்கையை யும் வேற்று நாட்டவர் படமாக்க முயற்சிப்பதாகக் கூறுகின்றன. இதை யெல்லாம் பார்த்து விட்டும் இந்தியப் பட முதலாளிகளுக்கு வெட்கம் ஏற் படவில்லையே என்று வருந்துகிறேன். நம் நாட்டில் உதித்த மகான்களின் வாழ்க்கையைச் சித்திரிக்க நமக்கே அக்கறையில்லை என்ருல், எத்தனை வெட்கக்கேடு? 'குலேபகாவலி'யையும் 'தூக்குத் தூக்கி'யையும் இன்னும் படம் பிடித்துக் கொண்டிருக்கும் நம்முடைய பட முதலாளிகளின் கண்கள் என்று தான் திறக்குமோ?

வெ. ர. நாகராஜன், சிவகங்கை.

முன் வருவார்களா?

சிறந்த கருத்துக்களைக் கொண்ட கதைகளை சினிமா உலகிற்கு அளிக் கும் திரைப் படக் கதாசிரியர்களுக்கு தக்க பரிசை அளித்து அவர்களை கௌரவிக்க வட இந்தியத் திரை உல கம் தீர்மானித்திருக்கிறது. மேற்படி செயல் வரவேற்புக்குரியதாகும். சிறந்த கருத்துக்களைக் கொண்ட கதைகள் திரைப் படங்களாக வெளி வருமேயா கில் மக்கள் அவைகளைக் கண்டு களிப் புற வழி ஏற்படுகிறது தவிர சிறந்த கதைகளுக்கு சன்மானம் அளிக்கப் படுவதால், திரை உலகக் கதாசிரியர்கள் தங்களது கதை பரிசைப் பெறவேண் டும் என்று எண்ணி, ஊக்கத்துடன் சிறந்த கதைகளைத் திரை உலகிற்கு அளிக்க முயற்சிப்பார்கள். அவர்களின் உழைப்பின் மூலம் நல்ல கருத்துக் களைக் கொண்ட சினிமாப் படங்கள் வெளிவர, பட ரஸிகர்கள் அவைகளைப் பார்த்துப் பரவசமுற, பட முதலாளி களின் பெயரும், வருவாயும் அதிகரிக்க வழி புலனுகின்றது. கதாசிரியர்களை கௌரவிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வு வளம் பெறுவதுமன்றி பட ரஸி கர்களும், பட முதலாளிகளும் பலவித மான பயன்களைப் பெறுகிருர்கள். நம் தென் இந்தியத் திரை உலகமும், வட இந்தியத் திரை உலகைப் பின்பற்றித் திரை உலகக் கதாசிரியர்களை கௌரவி க்க முன்வருமா என் எதிர்பார்க்கிறேன்.

"பம்பாய்த் தமிழன்" பம்பாய்-22

கலைக்கு வேற்றுமை இல்லை!

பிப்ரவரி மாத "குண்டூசி" இதழில் 'கலையா வளர்க்கிருர்கள்' என்ற தலை ப்பில் ஒரு அன்பர் எழுதியுள்ள கடிதத் தைப் படித்தேன். சமீபத்தில் டில்லி யில் நடைபெற்றுள்ள நாடக விழா வில் தமிழ் நாடகத்திற்குப் பரிசு கிடை க்காத காரணத்தால் அவர் சங்கீத நாடக அகாடமி மீது மிகவும் சீற்றம் கொண்டிருக்கிருர். தமிழில் சிறந்த நாடகங்கள் இருக்கின்றன. இல்லை என யாரும் மறுக்க முடியாது. ஆனல் அவர்களுடைய நாடகங்களை விடச் சிறந்த நாடகங்கள் மற்ற மொழிகளில் இல்லையென்று கூறிவிட முடியுமா? கலைக்குப் பாஷை கிடையாது. எந்த மொழியில் ஆனலும் கலையைக் கலைக் கண்களுடன் பார்த்து ரஸிப்பவன் தான் உண்மைக் கலைஞனே தவிர, தேசீயப் பற்று, நாட்டு உணர்ச்சி, மொழியின் சிறப்பு இவைகளை மனதில் வைத்துக் கொண்டு மற்ற நாட்டினரின் கலைகளை நாம் பார்த்தோமானல், அது நாம் உண்மைக் கலைக்குச் செய்யும் துரோக மாகும். ஆகையால் நமது நாடகக் கலையை நாம் மேன்மேலும் வளர்க்க வேண்டுமே தவிர, மற்ற மொழி நாடக ங்களுக்குப் பரிசு கிடைத்தது பற்றி நாம் பொருமைப் படுதல் கூடாது.

இ. கே. ராஜலக்ஷ்மி,
கோழிக்கோடு (மலபார்)

சங்கமம்

மாயாவி

கதவு திறக்கப்பட்டது; திவாகரனும் அவனுடன் வந்தவரும் உள்ளே நுழைந்து கட்டிலின் அருகில் இருந்த ஸோபாவில் உட்கார்ந்து கொண்டனர். தொடர்ந்து அவர்களிடையே நிகழ்ந்த சம்பாஷணை, வந்திருப்பவர் யார் என்பதை எனக்குத் தெளிவாக்கிற்று. வேறு யாருமில்லை; சியாம் சுந்தர் தான் வந்திருந்தான். ஆனால், யாராயிருந்தாலும் அந்தச் சமயத்தில் நான் மறைந்திருந்த இடத்திலிருந்து வெளிப்பட்டால், வீணில் சந்தேகமே கொள்ளுவார்கள். ஆகவே, அசைவின்றி அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தேன்.

நண்பர்கள் மனம் விட்டு அளவளாவினர்கள். திவாகரனுக்கு சியாமிடம் எத்தனை வாஞ்சை! அதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட, அவன் என்னிடம் வைத்ததிலலையே! தனக்கு இன்னும வேலை கிடைக்கவில்லை எனறு சியாம் கூறியபோது, திவாகரன் அவனை எவ்வளவு உரிமையோடு கடிந்து கொண்டான்: "பாவி, நான ஒருவன் இருப்பதை அடியோடு மறந்து விட்டாயா? ஏன், என்னிடம் வந்து விவரத்தை முன்பே கூறவில்லை?"

"எனக்கு சங்கோசமாக இருந்தது, திவாகர்" என்றான் சியாம். அவன் உண்மையை மறைத்தே அவ்வாறு பதில் அளித்தான் என்பது எனக்குத் தெரியும். திவாகரனிடம் உதவி கோரிப் போகாதது, சங்கோசத்தால் இல்லை; அந்தச் சண்டாளி ஸ்நேகலதாவின் துரோக நினைவுக்குப் பயந்தே—என்பதை அவனே என்னிடம் சொல்லியிருக்க வில்லையா?

இவர்கள் இவ்வாறு வெகு நேரம் பற் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர். பிறகு, அறைக்குள் இன்னும் யாரோ ஒருவர் வந்ததுபோல் அறிந்தேன். வந்தது ஸ்நேகலதாதான் என்பது, தொடர்ந்து வந்த ஆர்ப்பாட்டமான பேச்சிலிருந்தே தெரிந்து விட்டது.

"ஹலோ! நீங்களா? ஏது, அத்தி பூத்தாற்போல், இந்தப் பக்கம்?" என்று சிரித்துக் கொண்டே கூறினாள் அந்த வஞ்சகி.

சியாம் அவளுக்குப் பதில் ஏதும் கூறவில்லை. வெறுமனே "நமஸ்காரம் அம்மா" என்று சொல்லியதோடு நிறுத்திக் கொணடான். ஆனால் திவாகரன் சொன்னான்: "சியாம நம்மை மறந்து விட்டான், ஸ்நேகா; பயல் பல மாதங்களாக வேலை இல்லாமல் திண்டாடுகிறானாம்; என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல வேண்டும் என்று அவனுக்குத் தோன்றவில்லை, பாரேன்."

"அடடா, அப்படியா? நல்ல காரியம் செய்தீர்கள், மிஸ்டர் சியாம். உங்களை, உயிரினும் இனிய தோழராக மதித்திருக்கிறார், இவர். இவரிடம் உங்கள் கஷ்டங்களை எடுத்துச் சொல்லத் தயக்கமா? நான் வேறு அடிக்கடி உங்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறேன்:

'இது உங்கள் வீடு; இந்த வீட்டில் உள்ள பொருள்கள் எல்லாவற்றிலும், இவருக்கு இருக்கும் உரிமை உங்களுக்கும் உண்டு என்ற நிலையில் பழகுங்கள்' என்று. போனது போகட்டும்; இப்பொழுதாவது, நாங்கள் உங்களுக்கு அந்தரங்கமானவர்கள் என்பது தோன்றிப் புறப்பட்டு வந்தீர்களே?"

அடி அம்மா! எத்தனை சாகஸமாகப் பேசினாள், அந்த விபசாரியின் மகள்!

திவாகரன் குறுக்கிட்டுச் சொன்னான்: "இப்பொழுதுகூட அவனாக வந்துவிடவில்லை, ஸ்நேகா. கிளப்பில் இருந்து வரும் வழியில், அவனைக் கண்டேன். அடேயப்பா! கணடுங்கூட அவனை இங்கே அழைத்து வருவதற்கு எத்தனை சிரமப்பட்டேன் தெரியுமா?"

"ஓ! அப்படியா?" என்று பேயைப் போல் சிரித்தாள் அந்தச் சிறுக்கி; "நாங்கள் என்ன சிங்கம், புலி, கரடியா? பயப்படாதீர்கள், மிஸ்டர் சியாம்; உங்களைக் கடித்துப் புசித்து விடமாட்டோம்...."

இப்படிப் பேசிக் கொண்டே போன ஸ்நேகலதா, சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவள் போல், "அடடா, மறந்துவிட்டேன், பார்த்தீர்களா?" என்றாள்.

"என்ன? எதையாவது லேடீஸ் கிளப்பில் மறந்து வைத்து விட்டாயா?" என்று கேட்டான் திவாகரன்.

"இல்லை; இல்லை. உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று வந்தேன்;



அதை மறந்துவிட்டு, நம் நண்பரின் பேச்சிலே ஆழ்ந்து விட்டேன். வீட்டுக்குத் திரும்பும் வழியில், உங்கள் ரொட்டரி கிளப் தலைவரைக் கண்டேன். ஏதோ காரியமாக உங்களை உடனே அங்கே புறப்பட்டு வரச் சொல்ல வேண்டும் என்றுகேட்டுக்கொண்டார்.''

"என்னையா? நான் இத்தனை நேரம் அங்குதானே இருந்தேன்?'' என்று ஆச்சரியம் தொனிக்கக் கூறினன், திவாகரன்.

"அங்கேதான் இருந்தீர்களோ; அல்லது வேறு எங்கேயாவது தான் போயிருந்தீர்களோ? எனக்கு என்ன தெரியும்? அவர் வழியில் என் காரை நிறுத்தி, நீங்கள் வீட்டில் இருந்தால் உடனே அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். வந்து விவரம் தெரிவித்து விட்டேன்; இனி நீங்கள் போகிறதானல் போங்கள்; இல்லாவிட்டால் விட்டுத் தள்ளுங்கள்.''

"சரிதான்; அந்த மனிதர் ஓர் பெரிய தொண-தொணப்புப் பேர்வழி. அவர் வரச் சொல்லிப் போகாவிட்டால், நாளைக்கு 'கன்னு-பின்னு' வென்று பேச ஆரம்பித்து விடுவார். சரி; நான் போய் என்னவென்று கேட்டு விட்டு வருகிறேன்.'' திவாகரன் ஸோபாவிலிருந்து எழுந்திருக்கும் ஓசை கேட்டது.

மறு நிமிஷம், "நானும் வருகிறேன் நண்பா; எனக்கும் அவசர வேலை ஒன்று இருக்கிறது'' என்று சியாமும் கிளம்பினன.

"நன்ருகத்தான் வந்த காலோடு கிளம்பினீர்கள்? எத்தனையோ மாதங்களுக்குப் பிறகு, இன்று அபூர்வமாக வந்திருக்கிறீர்கள். ஒரு வேளை எங்களோடு சாப்பாடுகூடச் சாப்பிடாமல் உங்களை விடமாட்டேன்'' என்று ஸ்நேகலதா கூறிவிட்டு, திவாகரனை நோக்கி, "நீங்கள் ஏன் நிற்கிறீர்கள்? போய், என்ன என்று கேட்டு விட்டுச் சீக்கிரம் திரும்புங்கள்'' என று கணவனையும் முடுக்கினள்.

"சாப்பாட்டுக்கு என்ன அம்மா? நான் இந்த வீட்டுச் சோற்றிலே வளர்ந்தவன் தானே!'' என்று சியாம் எழுந்தான்.

"அட சரிதாண்டா; ரொம்ப அளக்காதே! இரு என்று அவள் அன்போடு கேட்டுக் கொள்ளுகிருள்; மறுத்து விட்டுக் கிளம்புகிருயே! ஸ்நேகா, அந்தப் பயலைப் பிடித்து ஸோபாவில் உட்கார்த்தி, டீ வரவழைத்துக் கொடுத்துப் பேசிக் கொண்டிரு; நான் இதோ திரும்பி விடுகிறேன்'' என்று கூறி விட்டு திவாகரன் வெளியே நடந்தான.

"இல்லை நண்பா, நானும் வரத்தான் வேண்டும்'' என்று அவன் பின்னே நடக்க முயன்ற சியாமை, அந்த வேசைப் பெண் கைகளைப் பற்றி இழுத்து அமர்த்தி விட்டு, "இனிமேல் நான விட்டால்தான் நீங்கள் இங்கிருந்து போக முடியும், தெரியுமா?'' என்று கல கலவென நகைத்தாள்.

வெளியே திவாகரனின் கார் கிளம்பிப் போகும் சப்தத்துக்காகக் காத்திருந்தவள் போல், அவள் சற்றைக்கெல்லாம் அறையின் கதவையும் அடைத்துத் தாழிட்டு விட்டாள்!

"ஐயோ! கதவை ஏன் மூடுகிறீர்கள் அம்மா?'' என்று பதறிக் கொண்டு கேட்டான் சியாம்; ஓடிச் சென்று கதவைத் திறக்கவும் முயன்ருன் போலிருக்கிறது.

ஸ்நேகலதா அவன் கைகள் இரண்டையும் பற்றிக்கொண்டு, கொஞ்சலாக, "அதெல்லாம், அவ்வளவு எளிதாக உங்களை விட்டுவிட மாட்டேன்'' என்ருள்.

"அம்மா; இது தகாத செய்கை. அந்நியனை என்னை உள்ளே வைத்து அறைக் கதவை மூடி விட்டீர்களே; யாராவது பார்த்தால் தவருக நினைத்து விடப் போகிருர்களே'' என்று கிலி கொண்டு உரைத்தான் சியாம். அவள் நோக்கம அவனுக்குப் புரிந்து விட்டது போலும்!

"பயப்படாதீர்கள்; அப்படி யாரும் இங்கே இப்பொழுது வந்துவிட மாட்டார்கள். அவ்வளவு முன்னேற்பாடு இன்றி நான் எந்தக் காரியத்தையும் செய்து விடமாட்டேன். அதிருக்கட்டும்; எனக்குப் பயந்துதானே, இத்தனை நாட்களாய் எங்கள் வீட்டுப் பக்கம் தலை காட்டாது இருந்தீர்கள்? உண்மையைச் சொல்லுங்கள்.''

"ஆமாம் அம்மா; நான் பாவ தோஷங்களுக்குப் பயந்தவன். என்னை நீங்கள் சோதனை செய்ய ஆரம்பித்தீர்கள். என் குடும்பத்தின் பெயரையும்,



ஆர். பாலசுப்ரமண்யம், சாவித்திரி ஆகிய நக்ஷத்திரங்கள் தோன்றும் இக் காட்சி டி. ஆர். ஆர். புரொடக்ஷன்ஸின் "கோமதியின் காதலன்" சம்பந்தப்பட்டதாகும்.

எனக்கு அன்ன-வஸ்திரம் அளித்து ஆளாக்கிய குடும்பத்தின் பெயரையும் காப்பாற்றும் பொருட்டு, இங்கே நான் வராதிருக்க வேண்டியிருந்தது."

" இதோ பாருங்கள், சியாம்; உங்களைப் போல் பிழைக்கத் தெரியாத பிள்ளையை இந்த மூன்று உலகிலும் தேடினுலும் அகப்பட மாட்டான். கண்ணுக்கு இனிய பெண் ஒருத்தி, உங்கள் காதலைப் பெற, காலில் விழுந்து கதறுகிறேன். நீங்கள் என்னவோ, முற்றும் துறந்த முனிவரைப் போல், குடும்பம் கௌரவம் என்று கதை பேசுகிறீர்களே. நான் நினைத்தால், உங்களைச் சிக்க வைப்பது பிரமாதம் என்று எண்ணினீர்களா? இப்பொழுது பார்த்தீர்களா, இன்று உங்களை இங்கு எதிர்பாராது கண்டதும், நிமிஷத்தில் ஒரு நாடகமாடி, அவரை வெளியேற்றிவிட்டு, உங்களை அகப்பட்டுக் கொள்ளச் செய்து விட்டேன்! அதுபோல, எப்பொழுது நினைத்தாலும், உங்களைச் சிக்க வைக்க என்னுல் முடியும். அதுபோலவே நம்முடைய தொடர்பை உங்கள் நண்பர் அறியாதவாறு ஆயுள் பூராவும் மறைத்து விடவும் எனக்குச் சாமர்த்தியம் உண்டு. ஆகவே, அன்பரே நீங்கள் என் ஆசையை......."

" அம்மா, உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். தயது செய்து எனது இன்னுயிர்த் தோழனுக்குத் துரோகம் இழைக்கும் இக் காரியத்தில் என்னை இழுத்துப் போடாதீர்கள் " என்று கெஞ்சினுன் பேதை சியாம்.

ஆனுல், முற்றும் நனைந்தவருக்கு ஈரம் ஏது? எதற்கும் துணிந்திருந்தாள் அந்தக் கிராதகி. அவள் சொன்னுள்: "இதெல்லாம் வெட்டி வேதாந்தம், மிஸ்டர் சியாம். என் உள்ளம உங்களை நாடி விட்டது. என் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளாது, இன்று நான் உங்களை விடப் போவதில்லை. சியாம், இதோ என்னைப் பாருங்கள்; நான் அழகாயில்லையா? என்னிடம் இளமையின் கவர்ச்சி இல்லையா? அந்த இளமையையும், அழகையும் உங்களுக்கே அர்ப்பணிக்க நான் துடிப்பது உங்களுக்குப் பு[illegible]வில்லையா? என் காதலை ஏற்றுக் [illegible]காண்டீர்களானுல், உங்களை அரச போக வாழ்வு வாழச் செய்வேன். வெளியில் உள்ளோருக்

குத் தெரிந்து விட்டால் கேவலமாகி விடுமே என்று பயப்பட வேண்டாம். ஏன், எனக்கு மாத்திரம் அது கேவலமாக இராதா? அப்படி, வெளியில் உள்ளோர் அறியும்படி நான் உங்களோடு விகற்பமாகப் பழகுவேனா? மற்றோர் முன் நீங்கள் என் சகோதரர்; தனிமையில் காதலர், அப்படித்தான் நான் நடந்து கொள்ளுவேன். ஆகவே, எதற்கும், யாருக்கும், நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. வலிய வந்த ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளாதீர்கள். 'சரி' என்று உங்கள் குமுத வாயால் ஓர் இன்மொழி சொல்லி, அது உண்மை என்பதை நிரூபிக்க இந்தத் தனிமை நேரத்தில் என்னை....''

சே! மானமுள்ளவர்கள் வாய் திறந்து சொல்லத்தக்க பேச்சல்ல, அந்தப் பிரஷ்டை அச்சமயம் பிதற்றிய மொழிகள். உத்தமனான சியாம் எவ்வளவோ மன்றாடினான்; நயமாகக் கூறிப் பார்த்தான்; பயமுறுத்திப் பார்த்தான். ஆனால், காமப் போதை ஏறிய அந்த அரக்கி கேட்கவில்லை. கடைசியில் அவள் அவனைத் தொட்டு அணைய முற்பட்டு விட்டாள் போலும்.

''சீ! என்னைத் தொடாதீர்கள்; விலகி நில்லுங்கள்'' என்று சியாம் கோபத்துடன் கத்தியதும், மறுநிமிஷம் அவள் 'தொப்'பென்று சோபாவில் தள்ளப்பட்ட சப்தமும் கேட்டன.

அடுத்த சில விநாடிகளுக்கு அங்கே ஏக தடபுடலாக இருந்தது. மேஜைகளும், நாற்காலிகளும் அங்கும் இங்கும் தள்ளப்படும் ஓசை தொடர்ந்து கேட்டது. மோகலாகிரி கொண்ட அந்த வேசி சியாமைத் துரத்திப் பிடிக்க முயன்றாள் போலிருக்கிறது. பிறகு அங்கு 'டமார்' என்ற பேரோசை ஒன்று உண்டாயிற்று. மேஜைமீதிருந்த வெங்கலப் பூக் கூஜாவோ அல்லது அதுபோன்ற பேரொலி எழுப்பும் வேறு ஏதேனும் உலோகப் பொருளோ, கீழே உருண்டு விழுந்ததால் எழுந்த சப்தம் என்று நான் நினைத்தேன். அந்தச் சப்தத்தைத் தொடர்ந்து ஒரு விநாடி நேரம் அமைதி நிலவிற்று. பிறகு அறைக் கதவைத் திறந்து மூடும் சப்தம் கேட்டது. இப்பொழுது, அங்கு என்ன நடந்திருக்க வேண்டும் என்பதை நான் ஒருவாறு ஊகித்து விட்



''என் மகள்'', ''பொன் வயல்'' முதலிய படங்களில் இவர்களுடைய வீணை ஒலியைக் கேட்டிருப்பீர்கள். எஸ். என். ராமச்சந்திரன்-சத்தியமூர்த்தி திருச்சி ரேடியோவில் இம் மாதம் 3-ந் தேதி வீணை வாசித்தனர்.

டேன். தற்காப்புக்காக, சியாம் மேஜைமீதிருந்த ஏதோ ஒரு பொருளை எடுத்து ஸ்நேகலதாவின் மீது வீசி, அவளைக் காயப்படுத்தி விட்டு, கதவைத் திறந்து கொண்டு வெளியேறி விட்டான் போலிருக்கிறது.

இந்த ஊகத்தை அடுத்து என்னைப் புதிய விசாரம் ஒன்று சூழ்ந்து கொண்டது. “அட கஷ்டமே; நாம் நினைக்கிறபடி சியாம், ஸ்நேகலதாவைக் காயப்படுத்தி விட்டு ஓடிப் போயிருந்தால், அந்தப் பழி நம்மீது விழுந்து விடக் கூடுமே!''

ஏற்கெனவே ஸ்நேகலதாவை நான் மனமார வெறுப்பவளாகக் காட்டிக் கொண்டிருக்கிறேன். அறையினுள்ளே அவள் அடியுண்டு கிடப்பதையும், நான் ஒளிந்து கொண்டிருப்பதையும் கண்டு விட்டால், திவாகரன், நிச்சயமாக நானே அவளைக் காயப்படுத்தி விட்டேனென்று தீர்மானித்து விடுவானே. சியாம் தன்னைக் காயப்படுத்தினான் என்ற உண்மையை ஸ்நேகலதாவும் மறைக்கவே முயலுவாள். அதைச் சொன்னால் எதற்காக அவன் அவளைத் தாக்கினான் என்ற கேள்வி எழும். அதற்கு அவள் என்ன காரணம் கூற முடியும்? 'நான் அவனை அணைய முயன்றேன்; அதற்காக அவன் என்னைத் தாக்கினான்' என்று சொல்லுவாளா? ஆகவே, விதிவசமாக இங்கு வந்து அகப்பட்டுக் கொண்ட என் மீது பழியைச் சுமத்தத்தான் அவளும் முயலுவாள்! ஐயோ! அப்படியானால்.......?

சட்டென்று எனக்கு ஒரு அருமை யான ஆலோசனை தோன்றியது. 'நாம் ஏன், இந்த சமயத்தில் வெளியேறி விடக்கூடாது? இருக்கிற நிலைமையைப் பார்த்தால், ஸ்நேகலதா நினைவிழந்து கிடக்கிருள் என்று தோன்றுகிறது. சியாம் இதற்குள் கிட்டத்தட்ட வீடு போய்ச் சேர்ந்திருப்பான். திவாகரன் திரும்பி வர எத்தனை நேரம் ஆகுமோ? ஆமாம்; இது தான் சரியான சமயம். செத்தோம், பிழைத்தோம் என்று வெளியேறி ஓடிவிட வேண்டும். அம்மம்மா, இன்று கிளம்பிய போதே சகுனம் சரியாக இல்லை; அதன் பயனுகை, வந்தது முதல் ஒன்றன் பின் ஒன்ருக துர் நிமித்தங்களாகவே தோன்றிக் கொண்டிருக்கின்றன.

இந்த முடிவுடன் நான் கட்டிலின் துணியைச் சற்றே விலக்கி வெளியே நோக்கினேன். ஐயோ! அங்கே நான் கண்டது என்ன?

நான் நினைத்ததற்கு நேர் மாருக, ஸ்நேகலதாவுக்குப் பதிலாக, சியாம் கதவடியில் மண்டையிலிருந்து ரத்தம் ஒழுக விழுந்து கிடந்தான்!

"ஐயோ சியாம்!" என்று கத்த எழுந்த என் வாய், மறு நிமிஷம் அப்படியே அடைத்து விட்டது. ஆம்; அச்சமயம் அறையின் கதவு திறந்தது; திவாகரன் உள்ளே வந்தான்.

நான் திரையின் மறைவில் மறுபடியும் மறைந்து கொண்டேன்.

உள்ளே வந்த திவாகரன், சியாம் காயமுற்றுக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டான். "நண்பா, சியாம்; இது

தமிழ்ப் புத்தாண்டு வெளிவரவிருக்கும் எம். ஏ. வி. பிக்சர்ஸின் "பெண்ணரசி" தமிழ்ப் படத்தில் ஏ. பி. நாகராஜன், எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா ஆகியோர் தோன்றும் இக் காட்சியை நீங்கள் கண்டு களிக்கலாம்.

என்ன?'' என்று அவனிடம் பாய்ந்தான். மறு நிமிஷம் அவன் அலறிய அலறல் என்னை அப்படியே பேச்சு மூச்சற்றவ னாக்கி விட்டது. "கொலை! கொலை!! யாரோ, என் நண்பனைச் சுட்டுக் கொன்று விட்டார்கள் !!!''

கொலை!

என் குடல் பதறிற்று. 'ஐயோ! சியாமை அந்தக் கொலைகாரி கொன்றே விட்டாளா? பாத்திரம் ஏதோ விழுந்தது போன்று எனக்குக் கேட்ட அந்த ஓசை, துப்பாக்கியின் குண்டு வெடித்த ஓசை தானா? அட கொடிய விதியே! ஒரு தாய்க்கு ஒரு பிள்ளையும், உத்தமனுள் உத்தமனுமான சியாம் சுந்தரனின் முடிவை எவ்வளவு கொடூர மாக்கி விட்டாய்!'

'இனி நாம் ஒளிந்திருப்பது தவறு. வெளியே வந்து இங்கே நடந்தது அனைத்தையும் திவாகரனுக்குக் கூறி விடத் தான் வேண்டும்' என்று நான் கட்டிலின் அடியிலிருந்து வெளிவர முயன்றபோது மற்றொரு அதிர்ச்சிஅளிக் கும் சம்பவம் நிகழ்ந்தது. சில போலீஸ் வீரர்களும், ஒரு ஸார்ஜெண்டும் முன் வர ஸ்நேகலதா அங்கே வந்தாள். வந்ததுமே, "இதோ ஸார்ஜெண்ட் கொலை செய்யப்பட்டவர்; இதோ கொலை செய் தவர்!'' என்று கூவினாள்.

இது என்ன சூழ்ச்சி!

நான் திரையைச் சற்றே விலக்கிக் கொண்டு நோக்கினேன். ஆம்; திவாகரன் கையில் அச்சமயம் ஓர் துப்பாக்கி இருந்தது!

எப்படி? இது எப்படி நடந்தது?

மறு நிமிஷம் திவாகரனே அதை விளக்கி விட்டான்.

"என்ன? நான்—நானா கொன்றேன் சியாமை? 'இல்லை ஸ்நேகா; இல்லவே இல்லை. நான் இப்பொழுது தான் இங்கே வந்தேன்; கதவைத் திறந்து பார்த்த போது சியாம் கீழே விழுந்து கிடந்தைக் கண்டேன். அருகில் இந்தத் துப்பாக்கி கிடந்தது. அதை எடுத்து பார்த்துக் கொண்டிருந்தபோது....'' என்று அவன் உள்ளம் பதறி வார்த்தைகள் தடுமாறிக் கூறிக்கொண்டு வந்த போது, ஸார் ஜெண்ட் ஏளனமாக நகைத்து, "ஆமாம் ஸார், நீங்கள் கீழே கிடந்த துப்பாக்கி

ஆர். எஸ். பதி கம்பெனியாரின் மற்றுமொரு தயாரிப்பு

ராமர் படை மருந்து

மேகப் படைகள், ரிங்வொர்ம் பத்துகள், கஜ்சு பத்து, வண்டு கடி முதலிய சகல படைகளும் ஆச்சரியமாகக் குணமாகும்.

பாட்டில் 1க்கு விலை அணா 8. (தபாற் சிலவு வேறு.)

தயாரிப்பவர்கள் :

ஆர். எஸ். பதி அண்டு கோ, (Regd)

214 & 215, மேல மாசி வீதி, :: மதுரை.

தபால் பெட்டி நிர்: 99 தந்தி : "சித்தர்"

இம் மாதம் 14ந் தேதி வெளிவரவிருக்கும் ''பெண்ணரசி'' தமிழ்ப் படத்தில் ராஜசுலோசனாவின் ஒரு தோற்றம்.

யை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது நாங்கள் வந்து விட்டோம், இல்லையா? சரி தான்; நீங்கள் கொலை செய்தீர்களா, இல்லையா என்பதை கோர்ட்டில் வந்து நிரூபித்துக் கொள்ளுங்கள். இப்பொழுது கிளம்புங்கள் எங்களுடன் ஸ்டேஷனுக்கு'' என்றார்.

இப்பொழுது ஸ்நேகலதாவின் சூழ்ச்சி முழுவதும் எனக்கு விளங்கி விட்டது. சியாமைச் சுட்டுக் கொன்று அப்பழியை என் மகன் மீது சுமத்தத் துணிந்து விட்டாள் அந்தப் பாதகி.

போலீஸாரின் முன் கையும் களவுமாய் நிற்கிறான் திவாகரன். அவன் குற்றவாளியல்ல என்பதை, பெற்ற தாயான நான் அறிவேன். ஆனால் அதை எப்படி நிரூபிப்பது? எவ்வாறு அவனை இந்தக் குற்றத்திலிருந்து காப்பாற்றுவது?

''நிரூபிப்பது துர்லபந்தான்; இருந்தாலும் நீ துணிந்தால் அவனை இதிலிருந்து விடுவித்து விட முடியும்'' என்றது என் உள் மனது.

''எப்படி? நான் திவாகரனைப் பெற்றெடுத்த அன்னை என்பதை இங்குள்ள எவரும் இன்னும் அறிய மாட்டார்கள்; எனினும் அவனைப் பெற்ற பிள்ளைக்கும் மேலாக வளர்த்தவள் என்பது எல்லோருக்கும் தெரியுமே! ஆகவே, இங்கு நடந்தவற்றைக் கூறி, ஸ்நேகலதாவே சியாமைக் கொன்றாள் என்று விளக்கினாலும் கூட, வளர்த்த பிள்ளையைத் தப்புவிக்கும் பொருட்டு, கொலைப் பழியை, நான் வெறுத்து வரும் ஸ்நேகலதாவின் மேல் சுமத்துகிறேன் என்றுதானே யாவரும் கருதுவார்கள். தவிர நான் இப்படி அசந்தர்ப்பமாக வந்து, இந்த அறையில் சிக்கிக் கொண்டேன் என்று கூறுவது ஏதோ கட்டுக் கதை போல் இருக்குமேயன்றி, எவரும் நம்பக்கூடியதாக இல்லையே! பின் எவ்வாறு அவனை விடுவிக்க முடியும்?''

''முடியும்; நன்றாகச் சிந்தித்துப் பார்; வழி தென்படும்'' என்றது, மீண்டும் என் உள்ளத்தின் ஒலி.

''ஒன்றும் தென்படவில்லையே!'' என்று அலறினேன் நான்.

''தென்படவில்லையா? அப்படியானால் நீ உன் வாக்களிப்பை மறந்து விட்டாய்; திவாகரனின் தாய் என்பதையும் மறந்து விட்டாய். பெற்ற தாய் ஒருபோதும், தன் மகன் அநியாயப் பழி சுமத்தப்பட்டுத் தண்டனை அடைய பார்த்துக் கொண்டிருக்க மாட்டாள். தன்

உயிரைக் கொடுத்தாகிலும், மகனை மீட்கவே முயலுவாள். நீயும் அவ்வாறு தான் முன்பு கோட்ஸேக்கு வாக்களித்திருக்கிறாய், ஞாபகம் இருக்கிறதா?"

"நன்றாக நினைவிருக்கிறது. ஆனால் என் உயிரை வாங்கிக்கொண்டு, திவாகரனை விடுவிக்க மாட்டார்களே இந்த போலீஸார்?"

"அப்படிச் சொன்னால் எந்த முட்டாளும் உன்னை விட்டுவிட மாட்டான். மகனை விடுவிக்க வேண்டும் என்பது உண்மையிலேயே உன் விருப்பமானால் உடனே இக் கட்டிலின் அடியிலிருந்து வெளியே வா; தீவிரமாக போலீஸாரின் முன் போய் நின்று, சியாமை நீயே கொன்று விட்டதாகக் கூறு. சந்தர்ப்பங்கள் உனக்கு அநுகூலமாகவே அமைந்திருக்கின்றன. அதைப் பயன்படுத்திக் கொள். சில பொய்மொழிகளை உதிர்த்தாயானால், மகன் மீது சாய்ந்துள்ள பழி உன் மீது திரும்பிவிடும்.

நினைத்துப் பார்; திவாகரனுக்கும் உனக்கும் ஆகாது என்பதைஅநேகமாக எல்லோரும் அறிவார்கள். 'யமுனாவின் கல்யாணத்தை நடத்தப் பணம் கேட்டேன். திவாகரன் தர மறுத்து விட்டான். பணத்தைத் திருடிப்போக வந்து இரும்புப் பெட்டியைத் திறந்து கொண்டிருந்த போது, எதிர்பாராதபடி சியாம் வந்துவிட்டான். என்னைக் கையும் களவுமாகப் பிடித்துக்கொண்டு, திவாகரனிடம் காட்டிக் கொடுத்து விடப் போவதாகப் பயமுறுத்தினான். கோபத்தில் அவனைச் சுட்டு விட்டேன்' என்று ஒரு கதையை அளந்தாயானால் போதும்; அப்புறம் குற்றம் உன்மீது ஸ்தாபிதமாகிவிடும்; திவாகரன் விடுதலை அடைந்து விடுவான்."

மனச்சாட்சி இவ்வளவு எளிதான வழியைக் காட்டித் தந்த பிறகு நான் கணங்கூடத் தாமதிக்கவில்லை. கட்டிலிலிருந்து வெளியே வந்து, திவாகரனை அழைத்துக் கொண்டு கிளம்பிக்கொண்டிருந்த போலீஸாரின் முன் போய் நின்றேன். "அவன் நிரபராதி; அவனை விட்டுவிடுங்கள்; இதோ இருக்கிறேன் சியாமைக் கொன்ற பாதகி. என்னைப் பிடித்துச் செல்லுங்கள்" என்று இருக்கிற தைரியத்தை எல்லாம் திரட்டிக் கொண்டு கூறினேன்.

ஸ்நேகலதா உட்பட யாவரும் திடுக்கிட்டுப் போயினர்.

"நீ........நீங்களா?" என்று அலறினான் திவாகரன்.

"ஆமாம்; நான் தான் வெறியில் சியாமைச் சுட்டுவிட்டேன்" என்று ஆரம்பித்து, மனச்சாட்சி கற்றுத் தந்த பாடத்தை அவர்கள் முன் ஒப்புவித்தேன்.

"இல்லை சார்ஜெண்ட்; இதை நான் நம்ப முடியாது" என்றான் திவாகரன். "யமுனாவின் கல்யாணத்துக்குப் பணம் தர நான் மறுக்கவேயில்லை. மறுத்திருந்தாலும், திருடும் அளவுக்கு இவளுக்குத் துணிவு கிடையாது. அப்படியே திருடி, சியாம் அதைக் கண்டு விட்டிருந்தாலும், அவனைக் கொல்லக்கூடியவள் அல்ல இவள். பெற்ற பிள்ளைக்கு மேலாக அவனிடம் அன்பு செலுத்துபவள் இவள். ஸார்ஜெண்ட், இவள் சொல்வதை நம்பாதீர்கள். இதில் ஏதோ சூது இருக்கிறது" என்று கூறினான் திவாகரன்.

திவாகரன் இப்படி எனக்குச் சாதகமாகப் பேசுவான் என்பதை நான் எதிர்பார்க்கவில்லை. 'ஐயையோ! இவன் நம் முயற்சி முழுவதையும் தவிடு பொடியாக்கி விடுவான் போலிருக்கிறதே!' என்ற பயம் பிடித்துக்கொண்டது எனக்கு.

ஆனால் நல்ல வேளையாக ஸார்ஜெண்ட் அவன் வார்த்தைகளுக்கு மதிப்பு அளிக்கவில்லை. "அதையெல்லாம் கோர்ட்டில் வந்து நிரூபியுங்கள் ஐயா; இப்போதைக்கு இந்த அம்மாளைக் கைது செய்ய வேண்டியது தான் எங்கள் கடமை" என்றார் அவர்.

"ஆஹா! நீங்கள் நீடூழி காலம் வாழ வேண்டும் ஐயா" என்று நான் அந்த ஸார்ஜெண்டை மனமார வாழ்த்தினேன். ஆமாம்; அவருடைய அவ்வார்த்தைகள் அமிருத தாரையாகவல்லவோ என் செவியில் விழுந்தன! (தொடரும்)

தேபர் கண்டனம்

தற்காலத்து மாணவர்கள் சினிமா நக்ஷத்திரங்களைப்போல இருக்கின்றனர். அவர்களது நடை, உடை, பாவனை தலைமயிரைச் சிங்காரித்துக் கொள்ளும் விதம் எல்லாம் நட்சத்திரங்களை நினைப்பூட்டுபவையாக உள்ளன. இந்த அபிப்பிராயத்தை காங்கிரஸ் அக்கிராசனர் தேபர், மாணவர் யுவர் மகாநாட்டில் சென்ற மாதம் மூன்றும் தேதி பேசுகையில் தெரிவித்தார்.

...இது செய்தி

அனுமதி மறுப்பு

பம்பாய் படவுலகைச்சேர்ந்த ஏ. ஜே. பட்டேல் என்பவர் (இவர்தான் "பம் போஷ்" என்றபடத்தைத் தயாரித்தவர்) ஜப்பானியப் படக் கம்பெனி ஒன்றுடன் சேர்ந்து "வங்கப் புலி" என்று ஒரு படத்தைத் தயாரிப்பதாக இருந்தார். ஆனல் இந்திய சர்க்கார் அதற்கு அனுமதி அளிக்க மறுத்து விட்டனர். திரைக் கதையைப் பரிசீலித்துப் பார்த்ததில் அக்கதை இந்தியா—ஜப்பான் கூட்டுறவில் தயாரிக்கத் தகுதியற்றது என்றும், அதனுல் இரு நாடுகளுக்கிடையே தப்பு அபிப்பிராயம் ஏற்படக் கூடுமென்றும் இந்திய சர்க்கார் காரணம் கூறியுள்ளனர்.

ரஸிகர்கள் விளைவித்த சேதம்

நாராயணன் கம்பெனியார் தங்கள் படத்திற்கான சில வெளிப்புறக் காட்சிகளைத் தயாரிக்க பிப்ரவரி மாதம் பங்களூர் போயிருந்தனர். போலீஸ் காவலையும் மீறி ஷூட்டிங் பார்க்க முயற்சித்தது ரஸிகர் கூட்டம். கூட்டத்தைக் கண்டு மிரண்டுபோன குதிரை தன் மீதிருந்த கணேசனைக் கீழே தள்ளிவிட்டு ஓடியது. நல்லகாலமாக கணேசன் சிறு காயங்களுடன் தப்பினர்.

மற்ருெரு "மதுரைவீரன்"

கிருஷ்ணு பிக்சர்ஸ் தவிர, வேறு ஒரு பட முதலாளியும் "மதுரை வீரனை"ப் படமாக்க ஏற்பாடுகள் செய்து வருவதாகத் தெரிகிறது. அப்படத்தில் எம். ஜி. ராமச்சந்திரன் மதுரை வீரனுக நடிப்பாரென்றும் தெரிகிறது.

வங்க சர்க்காரின் படம்

மேற்கு வங்க சர்க்காரின் பண உதவி மூலம் தயாரான முதல் முழு நீளப் படம் "பாதர் பஞ்சலி" தற்போது திரையிடப்படுவதற்குத் தயாராக இருக்கிறது. இப்படத்தில் நடிக்கும் ஒரு சிலரைத் தவிர இதர எல்லா நடிகர்களும் புது முகங்கள். இப்படத்தை எடுக்க செலவான 1,30,000 ரூபாயை ராஜ்ய சர்க்காரே கொடுத்துள்ளது.

சலுகை நீடிப்பு

சென்னை சர்க்கார் நாடகங்களுக்கு தமாஷா வரி கிடையாது என்ற சலுகை இம் மாதம் முதல் தேதி முதல் மேலும் ஒரு வருஷத்திற்கு நீடித்திருக்கின்றனர்.

சீன—"தோபிகா ஜமீன்"

இந்தியாவுக்கும், சீனவுக்குமிடையே பிலிம்கள் பரிவர்த்தனை நடக்கவேண்டுமென்றும், இதனல் இரு நாடுகளுக்கு மிடையே உள்ள நட்பு வளர உதவியாக இருக்கும் என்றும் சீனத் தூது கோஷ்டித் தலைவர் இந்திய சினிமா விவாத அரங்கில் பேசுகையில் கூறினர். இந்தியா பல அற்புதமான படங்கள் எடுத்திருப்பது குறித்துத் தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகவும் "தோபிகா ஜமீன்" படத்தை சீனவில் பார்த்தவர்கள் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள் என்றும், சீன மொழியில் இப்படம் 'டப்' செய்யப்படும் என்றும் சீன கோஷ்டித் தலைவர் தெரிவித்தார்.

கார்ப்பரேஷனின் புதிய வரி

சென்னை தியேட்டர்களில் காட்டப்படும் விளம்பரத் துண்டுப் படங்களுக்கு, மாதம் தோறும் 20 ரூபாய் வீதம் வரி விதிக்க கார்ப்பரேஷன் முடிவு செய்திருப்பது. தென்னிந்திய சினிமா படத் திரையிடுவோரிடையே தொந்தரவை ஏற்படுத்திருப்பதாகத் தெரிகிறது. இம் மாதம் முதல் இப்புது வரி அமலுக்கு வருகிறது. யுத்தத்திற்கு முன்னல், இம்மாதிரியான விளம்பரப் படங்களுக்கு மாதம் தோறும் 5 ரூபாய் வீதம் வரி விதிக்கப்பட்டு வந்தது. தியேட்டரில் காட்டப்படும் "ஸ்லைட்" ஒன்றுக்கு கார்ப்பரேஷன் ஏற்கெனவே ரு. 2-8-0 வீதம் வரி விசூலித்து வருகிறது. இப்புதிய வரி இதற்குக் கூடுதலாக இருககும். முழு வரியையும் ரத்து செய்ய வேண்டா மென்றும் அதைக்

குறைக்க வேண்டு மென்றே திரையிடு வோர் கேட்டுக் கொள்வார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பிலிம் வர்த்தக சபை இப்பிரச்னையை ஆராய்ந்து, மேயரையும் சம்பந்தப்பட்ட மந்திரியையும் சந்திக்க ஒரு தூது கோஷ்டியை அனுப்பலாமெனக் கூறப்படுகிறது. இப்புது வரி காரணமாக தியேட்டர்களில் காட்டப்படும் விளம்பரத் துண்டுப் படங்களின் எண்ணிக்கை குறையக் கூடும்.

'பத்ம பூஷணம்'

கோகிலகான எம். எஸ். சுப்புலக்ஷ்மிக்கு சென்ற மாதம் 11-ம் தேதி சென்னை கவர்னர் ஸ்ரீபிரகாசா, ராஷ்டிரபதி சார்பில் 'பத்ம பூஷணம்' பட்டத்திற்குரிய விருதுகளை வழங்கினர். அரசியல் பிரமுகர்களும் அதிகாரிகளும், சங்கீத வித்வான்களும் மற்றும் பிரமுகர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டனர். ராஷ்டிரபதியின் சார்பில் இவ்விருதுகளை தாம் வழங்குவதில் மிகவும் சந்தோஷப்படுவதாகவும் சென்னை மக்களே பெருமிதமடைவார்கள் என்று நம்புவதாகவும் கவர்னர் கூறினர். பின்பு வேண்டுகோளுக்கிணங்க எம்.எஸ். சுப்புலக்ஷ்மி சில கீர்த்தனங்கள் பாடினர். இவ்விழா ராஜபவனத்தில் நடைபெற்றது.

குழந்தைகள் சங்க சினிமாப்படம்

குழந்தைகள் பிலிம் சங்கம் முதல் வருஷம் தயாரிக்கும் முழு நீளப் படத்தின் செலவு முழுவதையும் இந்திய சர்க்கார் ஏற்கத் தீர்மானித்துள்ளனர். சென்ற மாதம் 10-ம் தேதி ராஜ்ய சபையில் ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் செய்தி, ஒலிபரப்பு இலாகாவின் பார்லிமெண்டரி காரியதரிசி ஜி. ராஜகோபாலன் இத்தகவலைத் தெரிவித்தார். இரண்டாவது வருஷத்தில் தயாரிக்கப்படும் முழு நீளப் படம், இரண்டு துண்டுப் படங்கள் இவைகளுக்காகும் செலவில் 75 சத விகிதத்தை இந்திய சர்க்கார் ஏற்கும் என்றும், முதல் படவிநியோகத்தின் மூலம் வருமானம் 25 சத விகிதத்திற்கு மேல் அதிகமானால் சர்க்காரின் பங்கு குறையும் என்றும் மூன்றாவது வருஷமும் 50 சத விகித செலவை இந்திய சர்க்கார் ஏற்குமென்றும் ராஜகோபாலன் மேலும் தெரிவித்தார். இதற்கு பட்ஜெட்டில் 1,82,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகள் பிலிம் சங்கத்தைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் பூர்த்தி அடைந்து விட்டதாகவும் ராஜகோபாலன் கூறினர்.

நடிப்புப் போட்டி

சென்ற மாதம் 13-ம் தேதி, ஜார்ஜ் டவுன் பெத்துநாயக்கன் பேட்டையிலுள்ள டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. ஹைஸ்கூலில், சூழ் நிலை நாடக மன்றத்தாரின் "நடித்துப் பார்" என்ற ஓரங்க 'நவரச நாடக' நடிப்புப் போட்டி ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரின் தலைமையில் நடைபெற்றது. சினிமா நடிகர் கே. சாரங்கபாணி ஆசிரியர் முத்துகிருஷ்ணன், டைரெக்டர் நமசிவாயம், சி. டி. டி. அரசு முதலியோர் நீதிபதிகளாக இருந்து தீர்ப்புக் கூறினர்.

சினிமாப் பார்க்கக் கூடாது

உசிலம்பட்டி நகரில் வாழும் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் சினிமாப் பார்க்கக் கூடாது என்று முஸ்லீம் பெரியவர்கள், தங்களுக்குள்ளாக ஒரு கட்டுப்பாடு விதித்திருக்கின்றனர். இந்தத் தடை உத்தரவை மீறி இரண்டு முஸ்லீம் பெண்கள் சினிமாவுக்குப் போனதால் அது விஷயம் முஸ்லீம் பெரியவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, அந்தக் குடும்பத்தினர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டது.

வாழ்த்துகிறோம்

"லக்ஷ்மி" என்ற புனைபெயரில் பல நாவல்களை எழுதிப் பிரபலமாகியுள்ள டாக்டர் திரிபுரசுந்தரி சென்ற மாதம் 25-ம் தேதி ஒருவருக்கு வாழ்க்கைத் துணைவியானர். தென் ஆப்ரிக்கா, டர்பன் நகரிலுள்ள "கிராபிக்" பத்திரிகையின் நிர்வாகியும், மெர்க்கெண்டைல் அச்சகத்தின் மானேஜிங் டைரெக்டருமான சிரஞ்சீவி கண்ணபிரான்தான் அவருடைய கைபிடித்தவர். இவர்களது விவாகம், சென்னை, அடையார் பிரம்மஞான சமாஜத்தில் நடந்தது. மணமக்களுக்கு நிறையப் பரிசுகளும், ஏராளமான ஆசிச் செய்திகளும் வந்தன.

ஹாஸ்ய நடிகை டி. பி. முத்துலக்ஷ்மி தமது மாமன் மகள் சௌ. பார்வதியை, படங்களில் நடித்துவரும் சிரஞ்சீவி

எம். என். கிருஷ்ணனுக்குத் திருமணம் செய்துவைத்தார். சென்ற மாதம் 10ம் தேதி என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது இந்த விவாகம்.

ஏவி. எம். தயாரிப்பான ''செல்லப்பிள்ளை''யில் கே. ஆர். ராமசாமியை பண்டரிபாய் ஆண் உடையில் தோன்றி ஏமாற்ற முயலும் இக் காட்சியை நாம் காணலாம்.

நாமகரண விழா

திரிவேணி பிக்சர்ஸார் தாங்கள் தயாரித்து வரும் தமிழ்ப் படத்திற்குப் பெயர் சூட்டும் விழாவை சென்ற மாதம் 10ம் தேதி நடத்தினர்கள். இந்த விழா சபா நாயகர் ஜே. சிவஷண்முகம் பிள்ளை தலைமையில் பிலிம் சென்டர் ஸ்டுடியோவில் நடந்தது. தலைமை வகித்த சபாநாயகர் பேசுகையில், முத்தமிடும் காட்சிகளும், ஆபாசக் காட்சிகளும் இல்லாமல் படம் தயாரிக்கவேண்டுமென்று சொன்னர். முதல் மந்திரி காமராஜ் படத்திற்கு "ஒன்றே குலம்" என்ற பெயரைச் சூட்டினர். விழாவுக்குப் பட உலகப் பிரமுகர்களும் பத்திரிகாசிரியர்களும், மனோஹர், குமுதினி, ஸஹஸ்ர நாமம், மாதுரி தேவி ஆகிய நக்ஷத்திரங்களும் வந்திருந்தனர்.

நடிகைக்கு சிறை வாசம்

"காஞ்சன", "பசியின் கொடுமை", "அவன் யார்" ஆகிய படங்களில் நடித்துள்ள குமாரி என்ற மலையாள நடிகைக்கு சென்ற மாதம் 18ம் தேதி ஆல்வாய் முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் 10 நாள் சிறைத் தண்டனை கொடுத்தார். விபசாரம் செய்ததாக அவர்மீது வழக்கு நடைபெற்றது.

பரிசளிப்பு விழா

பம்பாயிலிருந்து வெளிவரும் "பிலிம் பேர்" சினிமாப் பத்திரிகை சென்ற மாதம் 14ம் தேதி, பரிசளிப்பு விழா ஒன்றை நடத்தியது. 1954ம் வருஷம் திரையிடப்பட்ட படங்கள் சம்பந்தமாக மேற்படி பத்திரிகை நடத்திய தேர்தலில் வெற்றி பெற்றோருக்கு அன்று பரிசுகள் வழங்கப்பட்டன. பம்பாய் முதன் மந்திரி மொரார்ஜி தேசாய் பரிசுகளை வழங்கினர். சிறந்த நடிகையாக மீனகுமாரிக்கும், சிறந்த நடிகராக பரத்பூஷனுக்கும், சிறந்த டைரெக்டராக பிமல் ராய்க்கும், சிறந்த படத் தயாரிப்பாளராக ராஜ்கபூருக்கும், உயர்ந்த படப்பிடிப்புக்காக தாராதத்துக்கும், கதைக்காக முகிராம் சர்மாவுக்கும், பாடல்களுக்காக பர்மனுக்கும், ஒலிப் பதிவுக்காக இஷான் கோஷுக்கும் பரிசுகள் வழங்கப் பட்டன.

''தூக்குத் தூக்கி'' பாட்டு

யாதவ சமூகத்தினர், தங்கள் சமூகத்தை இழிவுபடுத்துவதாக இருக்கிறது "தூக்குத் தூக்கி"யில் வரும் ஒரு பாட்டு என்று அனுப்பிய மகஜர், மத்திய பிலிம் போர்டிற்கு, தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் நிர்மலா

டிரமாடிக் ஆர்ட்டிஸ்ட் அஸோஸியேஷன் அங்கத்தினர்கள் தங்கள் இரண்டாவது நாடகமான **டாக்டர் நிர்மலாவின்** ஆரம்ப பூஜையை சென்ற மாதம் 5-ம் தேதி நடத்தினர்கள். "ஆனந்த விகடன்" உதவி ஆசிரியர் ஜி. சதாசிவம் தலைமை வகித்தார். இந்த நாடகத்தை எஸ். வி. எஸ். மணியன் எழுதியிருக்கிறர். இந்த நாடகம் இம் மாதம் இறுதி வாரத்தில் மேடை ஏற்றப்படுமெனத் தெரிகிறது.

முதல் இந்திய டெலிவிஷன்

இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் டெலிவிஷன் ஸெட், சென்ற மாதம் 17-ம் தேதி, ஜபல்பூரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஜபல்பூர் தொழில் நுணுக்கக் கல்லூரியில் மத்தியப் பிரதேச கவர்னர் பட்டாபி சீதாராமய்யா ஆரம்பித்து வைத்தார். கல்லூரியில் நடத்தப்பட்ட ஒரு சங்கீத வகுப்பு டெலிவிஷனில் காட்டப்பட்டது.

தொழிலாளர் மகாநாடு

தென்னிந்திய சினிமாத் தொழிலாளர் மகாநாடு சென்ற மாதம் 28-ம் தேதி காலை நடைபெற்றது. மாலையில் திருவல்லிக்கேணி கடற்கரையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. மகாநாட்டை முதல் அமைச்சர் காம்ராஜ் துவக்கி வைத்தார்.

"இசைத் தென்றல்"

காயல்பட்டினம் சென்ட்ரல் ஹையர் எலிமெண்டரி பாடசாலையின் 22-வது ஆண்டு விழாவில் தலைமை வகித்த சென்னை முதல் அமைச்சர் கே. காமராஜர், பள்ளி மாணவர்கள் நடத்திய "சட்டத்தின் முன்" என்ற நாடகத்திற்குத் தலைமை தாங்கிய திருச்சி லோகநாதனுக்கு, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு எம். எல். ஏ. முன்னிலையில், "இசைத் தென்றல்" என்ற பட்டத்தை வழங்கினர்.

ஜெமினியில் சேகர்

ஆர்ட் டைரெக்டர் சேகர் மீண்டும் ஜெமினி ஸ்டுடியோவில் சேர்ந்துள்ளார். அநேகமாக இவரைப் பின்பற்றி டைரெக்டர் ராம்நாத்தும் மீண்டும் ஜெமினியில் சேரக் கூடும் என்று தெரிகிறது.

வாழ்த்துகிறோம்

நமது பத்திரிகை அச்சாகும் கமர்ஷியல் அச்சகத்தில் வேலை பார்க்கும் சிரஞ்சீவி வி. முத்துகிருஷ்ணன், சென்ற மாதம் 30-ம் தேதி செள. கமலத்தை வாழ்க்கைத் துணைவியாக அடைந்தார் சிதம்பரத்தில்.

இசை விழா

ஸத்குரு ஸங்கீத ஸபாவின் ஆதரவில் சென்ற மாதம் 20-ம் தேதி முதல் 26-ம் தேதி முடிய ஒரு இசை விழா நடந்தது. இவ்விழாவை சங்கீத கலாநிதி முடிகொண்டான் வெங்கட்டராமய்யர் ஆரம்பித்து வைத்தார்.

லண்டனில் இந்தியப் படம்

சென்ற மாதம் 20-ம்தேதி "மிலாப்" என்ற ஹிந்திப் படம் லண்டனில் திரையிடப்பட்டது. இப்படம் இந்தியன் பிலிம் சொஸைட்டி ஆதரவில் திரையிடப்பட்டது.

வாஸனே மீண்டும் தலைவர்

சென்ற மாதம் 30ம் தேதி பம்பாயில் பிலிம் சம்மேளனத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அன்றையக் கூட்டத்தில் இவ்வருஷத்துக்கு ஜெமினி அதிபர் எஸ். எஸ். வாஸனே மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

இம்மாத வெளியீடுகள்

இம்மாதம் முதல் வாரத்தில் திரைக்கு வரவிருக்கிறது "உலகம் பலவிதம்" தமிழ்ப் படம். நாஷனல் புரொடக்ஷன்ஸின் தயாரிப்பாகும் இது. பிரபல நக்ஷத்திரங்கள் பலர் நடித்துள்ள இப்படத்தின் பூரண உரிமையையும், ஆலப்புழை ராதாகிருஷ்ண பிலிம்ஸார் பெற்றுள்ளனர்.

நீலவேணி

ஜெமினியில், அவர்களது "நீலவேணி" படப் பிடிப்பு ஆரம்பமாகி விட்டதாகத் தெரிகிறது. இது முழுக்க முழுக்க கொத்தமங்கலம் சுப்பு தயாரிப்பாக இருக்குமென்றும் கணேசன், வனஜா பிரதம பாகங்களில் நடிப்பார்களென்றும் தெரிகிறது.

நடிகை வழக்கில் தீர்ப்பு

சென்னையில் மார்ச் மாதம் 19ம் தேதி சினிமா நடிகை கே. சாவித்திரியும், அவரது தகப்பனர் கே. வெங்கட்ராமையா செளத்ரியும் 'ரூபவாணி' என்ற தெலுங்கு சினிமா சஞ்சிகையை அச்சிடுபவரும், பிரசுரகர்த்தருமான பி. சீதாராமய்யா மீதும், அஸோஸியேட் ஆசிரியர் மகேஸ்வர் மீதும் தொடர்ந்த வழக்குகளில், 8வது மாகாண மாஜிஸ்திரேட் ஒவ்வொரு வழக்கிலும் ரூ 100 அபராதம் விதித்ததற்கு எதிராகச் செய்து கொண்ட ரிவிஷன் மனு மீது சென்னை

ஹைக்கோர்ட் நீதிபதி ஸ்ரீ. என். சோம சுந்தரம் விசாரணை நடத்தி கீழ்க்கோர்ட் தண்டனையை ஊர்ஜிதம் செய்தார். நீதிபதி தமது உத்தரவில் எதிரிகளைக் கடுமையாகத் தண்டித்திருக்க வேண்டும் என்றும், சிறைக்கு அனுப்பியிருந்தால் கூட அதில் தலையிட்டிருப்பதற்கில்லை என்றும் சமூகத்திற்கு இது போன்ற சஞ்சிகைகள் தொல்லை கொடுக்கக் கூடியவையாக இருக்கின்றன என்றும் கூறியிருக்கிறார்.

கோவாவில் தணிக்கை

இந்திய சினிமாப் படங்கள் இப்பொழுது கோவாவில் தணிக்கை செய்யப்படுவதாகத் தெரிகிறது. சம்பந்தப்பட்ட ஜில்லா அதிகாரிகள் அங்கீகாரம் செய்தாலன்றி இந்திய சினிமாப் படத்தையும் கோவாவில் திரையிட முடியாதாம். சமீபத்தில் ஒரு இந்திய சினிமாப் படம் இரண்டு நாள் திரையிடப்பட்ட பின்னர் தடை செய்யப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின்னர்தான் மேற்கூறிய சினிமாப் படத்திலுள்ள அரசியல் விவகாரங்களை அதிகாரிகள் கண்டு பிடித்தார்களாம்.

கலைஞர்களுக்குப் பரிசுகள்

1955-ம் வருஷத்திற்கு எட்டு வித்வான்களுக்கும், கலைஞர்களுக்கும் டில்லி அகாடமிப் பரிசுகள் கிடைத்துள்ளன. அவர்களில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் பிரபல கர்னாடக சங்கீத வித்வான் மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர், நாதசுரம் ராஜரத்னம் பிள்ளை, நடனம்: பரதநாட்டியம்: ஸ்ரீமதி பால சரஸ்வதி ஆகியோர்.

கலர் சினிமா

தென் இந்திய பிலிம் வர்த்தக சபை, தென் இந்திய சினிமா ஸ்டுடியோ சங்கம் ஆகியவைகளின் சார்பில் கோடக் (கச்சா பிலிம் தயாரிக்கும்) கம்பெனி தலைவரான எச். எஸ். கார்ப்பெண்டர் விற்பனை மானேஜரான ஏ. பாட்லி ஆகியோருக்கு சென்னை மயிலாப்பூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் சென்ற மாதம் 16ம் தேதி ஒரு விருந்துபசாரம் நடைபெற்றது. விழாவுக்கு ஜெமினி ஸ்டுடியோ அதிபர் வாஸன் தலைமை வகித்தார். அனைவரையும் வரவேற்று எஸ்.எஸ். வாசன் பேசியதாவது: சினிமாத் தொழில் சம்பந்தமான பிரச்னைகளைக் குறித்து ஆராய மந்திரிகளிடமோ அரசாங்க அதிகாரிகளிடமோ போனால் நாம் கச்சா பிலிம் தயாரிக்கிறோமா அல்லது சினிமா சம்பந்தமான மற்ற சாதனங்களைத் தயாரிக்கிறோமா என்று கேட்கிறார்கள். தற்போது தயாரிக்கப்படும் சினிமாப் படங்கள் போல் சாதாரணப் படங்கள் தயாரித்தால் இன்னும் இரண்டு வருஷத்தில் வெளி நாடுகளில் நம் படங்களின் மதிப்பு குறைந்துவிடும்.

அக்ஷராப்பியாசம்

ஜெமினி விளம்பர நிர்வாகி வி. கே. என். சாரி, சென்ற மாதம் 30ம் தேதி, தமது பங்களாவில் ஒரு தேனீர் விருந்தளித்தார். தமது மகன் சிரஞ்சீவி வி. என். ஸ்ரீனிவாஸனது அக்ஷராப்பியாசம், தமது மகள் சௌ. காயத்ரியின் இரண்டாவது ஆண்டு விழா இவைகளை முன்னிட்டே இந்த விருந்து அளித்தார். பட உலகப் பிரமுகர்களும், பத்திரிகாசிரியர்களுமாகப் பலர் விஜயம் செய்திருந்தனர்.

வாத்தியார்கள் கோரிக்கை

ராசிபுரம் தாலுகா ஆரம்பப் பள்ளி வாத்தியார்கள் சங்கக் கூட்டம் "சினிமாப் படங்களில் வாத்தியார்களை இழிவுபடுத்துகிறார்கள். அம்மாதிரிக் காட்சிகளைத் தடை செய்ய வேண்டும் என" சர்க்காருக்கு ஒரு கோரிக்கை அனுப்பியுள்ளது.

உபசரிப்பு

சீக்கிரமே ஜப்பான் போன்ற பல நாடுகளுக்குப் போய்வர விருக்கும், மைசூர் பெர்டிலைஸர் கம்பெனியைச் சேர்ந்த, வி. வேணுகோபாலுக்கும் அவரது மனைவிக்கும், சாரி அட்வர்டைஸிங் ஸ்தாபனம் ஒரு உபசரிப்பு அளித்தது. சென்ற மாதம் 26ம் தேதி, உட்லாண்ட்ஸ் ஓட்டலில் நடந்த இந்த உபசரிப்பில் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

அரங்கேற்றம்

ஆறே வயதான பேபி கே. குமுதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் சென்ற மாதம் 25ம் தேதி மியூஸியம் தியேட்டரில் நடைபெற்றது. சுமார் இருபது நிகழ்ச்சிகளையும் இக்குழந்தை அநாயாசமாக ஆடி சபாஷ் பெற்றார். அன்று தலைமை வகித்த கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்த்திரிகள் குமுதாவின் திறமையையும், சிக்ஷை சொல்லிவைத்த சிதம்பரம் பி.எஸ். குஞ்சிதபாதம்பிள்ளையின் திறமையையும் பாராட்டினார்.

வாழ்க்கை வர்ணனை

(34-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படித் தவித்துக் கொண்டிருந்த போது, அவர் ஒரு சமயம் லால்குடிக்குச் செல்ல நேர்ந்தது. அங்கு பொன்னுசாமி பிள்ளை கம்பெனி "கிருஷ்ண லீலா" நாடகத்தை நடத்திக் கொண்டிருந்தது. கம்சன் வேஷத்தில் நடித்து வந்த எம். ஆர். ராதா அன்று எங்கோ சென்றுவிட்டார். அதனால், பொன்னுசாமி பிள்ளை இவர் அந்த வேஷத்தில் தோன்றும்படி செய்தார். சிவாஜி கணேசன் அன்று தேவகியாகவும், ருக்மணியாகவும் நடித்தார். தற்காலப் புகழ் டி. வி. ராதாகிருஷ்ணனும் அந்த நாடகத்தில் நடித்தார். இது சகாதேவனின் வாழ்க்கையில் ஒரு மறக்க முடியாத சம்பவமாம்.

இப்படி கடும் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த சமயத்தில் தகப்பனார் தேக அசௌக்கிய முற்றிருந்ததால் சகாதேவன் எட்டயாபுரத்திற்குச் சென்றிருந்தார். அந்த சமயத்தில்தான் எட்டயபுரம் ராஜாவின் தம்பியான காசி மஹாராஜா "காசி மஹாராஜா பிலிம்ஸ்" என்ற படக் கம்பெனியை ஆரம்பித்து சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் கூட்டுறவில் "தயாளன்" படத்தைத் தயாரிக்க ஏற்பாடு செய்திருந்தார்.

சகாதேவன் மஹாராஜாவை கோயில் பட்டியில் போய்ப் பார்த்தார். அவர் இவரை சேலத்திற்கு அனுப்பி வைத்தார். "தயாளன்" படத்தில் இவருக்கு வில்லன் வேஷம் அளிக்கப்பட்டது.

சகாதேவன் நாடகமேடையில் பாடுவது வழக்கமாயிருந்ததால் முதல் படமான "ராஜ சேகரனி"ல் அவருக்கு "பருவ மோஹனாங்கி பத்மலோசனி" என்ற பாட்டு அளிக்கப்பட்டது. இரண்டாவதான "தயாளனி"லும் அவர் "யோகமே இது ராஜயோகம்" என்ற ஒரு பாட்டைப் பாடியிருக்கிறார்.

"தயாளன்" படத்தில் சகாதேவன் கூடியவரையில் நன்றாக நடித்திருந்ததால் அவரை மாடர்ன் தியேட்டர்ஸார் மாதச் சம்பளத்தில் இரண்டு வருஷ காலத்திற்கு அமர்த்திக் கொண்டனர். அது முடிந்ததும் படத்திற்குப் படம் ஒப்பந்தம் செய்து கொண்டும் நடிக்கலானார். சேலம் சென்றது முதல் அவருக்குப் படங்களில் இடைவிடாமல் நடிப்பதற்கான வசதி ஏற்பட்டு விட்டது.

அவர் மூன்றாவதாக நடித்த படம் "சதி சுகன்யா" இதைத் தொடர்ந்து அவர் (4) சிவலிங்கசாக்ஷி, (5) தேவ கன்யா, (6) அருந்ததி, (7) திவான் பகதூர், (8) சௌ சௌ, (9) பக்த ஹநுமான், (10) லக்ஷ்மிவிஜயம், (11) சித்ரா, (12) சுபத்ரா ஆக ஒரு டஜன் படங்களில் நடித்து முடித்தார். பதின்மூன்றுவது படமான "கலாவதி" அவருக்கும் சரி, படத்திற்கும் சரி படுதோல்வியாக முடிந்தது. ஆனால், பதினான்காவது படமான "ஆ. த. வா. அபூர்வ சிந்தாமணி" இவருக்குப் புகழை அளித்தது. அந்தப் படத்தில் முதன் முதலாகத் தலையைக் கொடுத்து நடித்தவர் இந்த மஹானுபாவர்தான்.

இதன் பிறகு அவர் "போஜன்" படத்தில் சேனாதிபதியாக நடித்தார். "மாரியம்மனி"லோ சிவனாக நடித்திருப்பதோடு ஒரு பாட்டையும் பாடியிருக்கிறார். பின்னர் கோவை சென்று "கன்னியின் காதலி"யில் நடித்துவிட்டு, சேலத்தில் "இன்பவல்லி"யை முடித்துக் கொண்டு சென்னையில் குடியேறினார்.

ஜூபிடரின் "உலகம்" அவருக்கு இன்ஸ்பெக்டர் உத்தியோகத்தை அளித்தது. சமீப வருஷங்களில் அவர், "வாழப் பிறந்தவள்", "மாமியார்", "நால்வர்", "சொர்க்க வாசல்", "மனிதனும் மிருகமும்", "கூண்டுக் கிளி", "மலைக்கள்ளன்", "காவேரி" ஆகிய படங்களில் நடித்து வெளிவந்துள்ளன. சமீப காலப் படங்களில் சகாதேவனின் நடிப்பு வரவர மெருகு ஏறிக்கொண்டே வருகிறது. "நால்வரி"லும் "மலைக் கள்ளனி"லும் அவரது நடிப்பை ரஸிகர்கள் மிகவும் போற்றுகிறார்கள்.

சகாதேவன் இதுவரையில் 26 படங்களில் நடித்து முடித்திருக்கிறார். இவர்

நடித்துள்ள "பெண்ணரசி" இம்மாதம் வெளிவருகிறது. நடித்த படங்கள் யாவற்றிலும் "ஆ. த. வா. அபூர்வ சிந்தாமணி", "நால்வர்", "மலைக்கள்ளன்" ஆகியவையே இவருக்கு மிகப் பிடித்த படங்களாம். "பெண்ணரசி"யிலுமஇவருக்கு நல்லதோர் வேஷம் கிடைத்திருக்கிறதாம்.

சகாதேவன் தற்போது "குலேபகாவலி", "மறு மலர்ச்சி", "புதையல்", "மாமன் மகள்", "குணசுந்தரி" ஆகிய ஐந்து படங்களில் நடித்து வருகிறார். "மதுரை வீரன்", "டௌன பஸ்", "மரகதம்", "அலிபாபா" ஆகிய படங்களில் இவர் நடிக்கக்கூடும் என்று தெரிகிறது.

ஜகன்னாதய்யர் கம்பெனியில் சகாதேவன் சேர்ந்தது முதல் அங்கு ஹார்மோனிஸ்டாக இருந்த சங்கர மேனனிடம் சங்கீத சிக்ஷை பெற்றார். மதன கோபால் முதல் எஸ். வி. வெங்கட்ராமன் வரை பிரபல நடிகர்கள் பலரும் மேனனிடம் சிக்ஷை பெற்றவர்களே என்பது குறிப்பிடத்தக்கது. சகாதேவன் மூன்றே படங்களில்தான் பாடியிருக்கிறார் என்றாலும் அவர் இப்பொழுது நடிக்கும் நாடகங்களில்கூட பாடத்தான் செய்கிறார்.

சகாதேவன் பெரியப்பாவான ஷண்முகத்தேவர் என்பவர் ஒரு பயில்வானாக இருந்தார். சிறு வயதில் சகாதேவன் அவருடன் அடிக்கடி சென்று வந்ததால் விளையாட்டாகவே குச்சி விளையாட்டு, குஸ்தி முதலியவைகளைக் கற்றுக் கொண்டார். சினிமாவில் நடிக்க வந்த சமயத்தில் எம். ஆர். ராதா இவருக்கு கத்திச் சண்டையும் கற்றுக் கொடுத்தார். பிறகு குதிரை சவாரி செய்யவும் இவர் கற்றுக் கொண்டார். உப பாத்திரங்களில் தோன்றி வந்தாலும், மேற்சொன்ன வித்தைகளே சகாதேவனுக்கு ஒரு தனி மதிப்பை ஏற்படுத்தி யிருக்கின்றன.

சகாதேவனின் தாய் பாஷை தமிழ் தான். அவருக்கு மலையாள பாஷையும் பேசத் தெரியும். "சொர்க்க வாசல்" தெலுங்குப் படத்தில் அவர் சம்பாஷணைகளைக் கற்றுக்கொண்டு பேசியிருக்கிறார். அடிக்கடி அவர் ரேடியோவில் நடைபெறும் நாடகங்களில் நடித்துவருகிறார்.

ஐந்தடி பத்தங்குல உயரமும் ஆஜானபாகுவான சரீரமும், அழகிய கம்பீரமான முகத்தோற்றமும் உடையவர் சகாதேவன். அவரிடம் உள்ள திறமைகளை அறிந்து முதன் முதலாக அவருக்கு "தயாளன்" படத்தில் சண்டையிடும் பாத்திரத்தை அளித்து ஆதரித்தவர் டி. ஆர். சுந்தரம். பிறகும் இவருக்கு இடைவிடாது நடிக்கசந்தர்ப்பம் அளித்து ஊக்கியிருக்கிறார் சுந்தரம். டைரெக்டர் டி. ஆர். ராமண்ணாவும் சகாதேவனுக்கு நல்ல ஆதரவு அளித்திருக்கிறார். டைரெக்டர் ஸ்ரீராமுலு நாயுடு வோ பாத்திரங்களைத் தாமே பேசி நடித்துக் காட்டி, சகாதேவனை சக்கையாகப் பிழிந்து வேலை வாங்கியிருக்கிறார். "அப்பொழுது எனக்கு இது கஷ்டமாக இருந்ததென்றாலும் சமீப காலத்தில் இப்பாத்திரம் எனக்கு ஒரு தனிப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்திருப்பதால் ஸ்ரீ. நாயுடுவுக்கு நான் மிகக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்று சகாதேவன் மனம்விட்டுக் கூறுகிறார். டைரெக்டர் வேம்புவோ சகாதேவனை ஒரு சகோதரர்போல ஆதரித்து வருகிறாராம். எம். கே. ராதாவும், டி. எஸ். பாலய்யாவும் இவருடைய முழு மதிப்பிற்குரிய நடிகர்களாம்.

சகாதேவன் நாடக நடிகராயிருந்த காலத்தில் மிக்கப் புகழுடன் விளங்கி வந்தார். நாகலிங்கம் செட்டியார் கம்பெனி சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடத்திய "மனோகரா", "மோஹன சுந்தரம்" ஆகிய நாடகங்களில் சகாதேவன் பிரதம பாகங்களில் நடித்துப் பிரமாதமான புகழைப் பெற்றார். இந்த நாடகங்களின் ஆசிரியர்களான ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார், ஜே. ஆர். ரங்கராஜு ஆகியோரே அவரது நடிப்பைப் பாராட்டிப் பரிசளித்திருக்கிறார்களாம். ஆனால், நாடகம் அவ்வளவு அவர் சினிமாவில் இன்னும் புகழ் பெறவில்லை யென்பது உண்மைதான்.

முப்பத்தியேழு வயதான போதிலும், விவாகமின்றியே வாழ்ந்துவரும் சகாதேவனின் ஒரே வாழ்க்கை லக்ஷியம் தாம் "தென்னிந்திய பிருதிவிராஜ் ஆகிவிடவேண்டும்" என்பது ஒன்றுதானும்.

எது நடிப்பு?

ஸ்ரீகாந்தன்

பொதுவாக ஒரு கதையின் வெற்றி, அதில் வரும் பாத்திரங்களை உருவாக்குவதிலும், சித்தரிப்பதிலும் தான் இருக்கிறது. ஆசிரியர் தன் கற்பனையில் ஒரு பாத்திரத்தை உருவாக்கிக் கொண்டு, பின் அதை எழுத்து மூலம் சித்தரிக்கிறார். ஒரு பாத்திரத்தைச் சித்தரித்தல் என்றால், படிப்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் அந்தப் பாத்திரத்தின் குணதிசயங்களை உள்ளபடி புரிய வைத்து, அதன் உருவத்தை மனத் திரையில் பதியுமாறு விவரிப்பதாகும். கதைகளிலும் நாவல்களிலும் இது ஆசிரியரின் திறமையைச் சார்ந்தது. ஆனால் நாடகத்திலோ, திரையிலோ ஆசிரியரின் வேலை பாத்திரங்களை உருவாக்குவதோடு நின்றுவிடுகிறது. அதைச் சித்தரிக்கும் பொறுப்பு பெரும்பாலும் நடிகனைப் பொறுத்ததே.

ஆகவே, மேடையிலோ, திரையிலோ, ஆசிரியரும் டைரெக்டரும் கற்பனை செய்துள்ளபடி, சித்தரிக்கும் பெரும் பொறுப்பைக் கொண்ட நடிகன் அதை ஏற்றுக் கொள்ளுமுன் சில விதிகளைக் கையாள வேண்டும்.

1. தான் ஏற்று நடிக்கப் போகும் பாத்திரத்தைப் பற்றி நன்றாகத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அவ்வாறின்றி எந்த பாகத்தில் நடிக்கப் போகிறோம், அதில் எந்த உணர்ச்சியை அதிகமாகப் பிரதிபலிக்க வேண்டும் என்றே தெரிந்து கொள்ளாமல் நடிக்கும் பழக்கம் மாறவேண்டும்.

2. தன்னுடைய நடிப்புத் திறமையையும், உடலமைப்பையும் சீர்தூக்கிப் பார்த்து, தன்னால் அந்தப் பாகத்தை ஏற்றுத்திறம்பட நடிக்கமுடியுமா என்று ஆலோசித்துப் பார்க்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான குணங்களைச் சித்தரிப்பதில் மிக்க திறமை பெற்றிருக்கிறார்கள். அதோடு, மேக்கப்பின் உதவியுடனே, இல்லாமலோ — தான் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்திற்குப் பொருத்தமாகத் தன்னுடைய உடல் அமைப்பும், தோற்றமும் உள்ளதா என்று கவனிக்க வேண்டும். ஏதோ வாய்ப்பு கிடைத்திருக்கிறதே, அதை நழுவ விடுவதா என்று எண்ணி, தகுதியற்ற பாகங்களை ஏற்று, திருப்தியற்ற முறையில் நடிப்பது இந்த அருங் கலைக்கே அழிவு தேடுவது போலாகும்.

3. அந்த பாகத்தை ஏற்று, சிறப்பாக நடிக்க முடியுமென்று நம்பிக்கை கொண்டால், பின் தன் கருத்தையும் செயலையும் அதற்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொள்ள வேண்டும். அதாவது, அந்தப் பாத்திரம் எந்த முறையில், நினைவு உணர்வு நோக்கங்களைக் கொண்டுள்ளதாகக் கற்பனைசெய்யப்பட்டிருக்கிறதோ அதே போல், தன் நினைவு, உணர்வு, நோக்கங்களை மாற்றிக் கொள்ள முயல வேண்டும்.

இவைகளில் வெற்றி கண்டாலன்றி, நடிகன் தான் தாங்கிய பாகத்திற்குப் பூரண நீதி வழங்க முடியாது.

நடிப்பில், நடிகன் தன் மனோபாவங்களிலும், நோக்கங்களிலும், அந்தப் பாத்திரத்தின் மனோபாவங்களையும் நோக்கங்களையும் பிரதிபலிக்கும் போது தான் அவனுடைய உணர்ச்சிகள் பாத்திரத்தோடு ஒன்றுபடுகின்றன. அப்போது அவன் நடிப்பதில்லை. தானே அந்தப் பாத்திரமாக மாறி விடுகிறான். நகைப்பு—அழுகை, மகிழ்ச்சி—வருத்தம், கோபம்—சாந்தம் முதலிய எல்லா சுவைகளிலும் அவன் அந்தப் பாத்திரத்தோடு ஒன்றுபட்டு விடுகிறான். அப்போதுதான் அந்தப் பாத்திரம் எவ்வாறு கற்பனை செய்யப்பட்டதோ, அதே போல் அது சித்தரிக்கப்படுகிறது. அங்க அசைவுகளாலும், முகபாவங்களாலும், உதடு, கண், நெற்றி இவைகளின் நெளிவுகளாலும் கூட, நடிகன் ஆசிரியரின் கருத்தோவியத்துக்கு உயிரளிக்கிறான். மேடை நடிப்பில் முகபாவங்களை விட அங்க அசைவுகளே அதிகம் தேவை. ஆனால் திரையிலோ, முக மாற்றங்களே முக்கியமாக முதலிடம் பெறுகின்றன.

சொற்களா லில்லாமல், செய்கையினாலேயே தன் கருத்தை வெளிப்படுத்துவதில் தான் நடிகனின் திறமை சோதிக்கப் படுகிறது. ஆனால், சிற்சில இடங்களில் பேச்சும் அவசியப்படுகிறது. நடிப்பின் தரத்தை உயர்த்த, நடிகன் தன் குரலை இடத்திற்குத் தகுந்தாற்போல் மாற்றிக் கொள்கிறான். உதாரணமாக, 'சரி' என்ற ஒரே சொல் அதைச் சொல்லும் தொனியினாலும், விதத்தினாலும், பலவாறான பொருளையும், சொல்லுபவனின் மன நிலையையும் உணர்த்துகிறது. உரத்தும்–தாழ்த்தியும், வேகமாகவும்–மெதுவாகவும், குறைத்தும்—கூட்டியும் பேசுவதால், பார்ப்பவர்கள் உள்ளத்தில் ஓர் உண்மையான நிகழ்ச்சியைக் காணும் பிரமை ஏற்படுகிறது.

அதோடு நடிப்பின் தரத்தை, உடை அமைப்பு, சூழ்நிலை அமைப்பு, ஒலி, ஒளி அமைப்பு முதலியவைகளும் உயர்வு படுத்துகின்றன. செயற்கையின் உதவி எவ்வளவு தான் இருந்த போதிலும், ஒரு பாத்திரத்தின் வெற்றி நடிகனின் திறமையைப் பொறுத்தே இருக்கிறது. ஒரு நடிகன் தன் திறமையால் குறைவாக சிருஷ்டிக்கப்பட்ட பாத்திரத்தைக் கூட நிறைவுள்ளதாகச் சித்தரிக்கலாம், அதே போல் தன் தரமற்ற நடிப்பால் சிறந்த உருவாக்கங்களையும் உணர்ச்சியற்றவையாகவும் செய்யலாம். ஆகவே, டைரெக்டர்களும், பட முதலாளிகளும் நடிகர்களைத் தேர்ந்தெடுப்பதில் அதிகமான கவனமும், கருத்தும் செலுத்த வேண்டும். பொதுவாக, நடிகன் பிறக்கிறானே யன்றி, உண்டாக்கப்படுவதில்லை. மற்ற கலைகளைப் போல் நடிப்பு பழக்கத்தால் கற்றுக் கொள்ளக் கூடியதல்ல. இந்தக் கலையைப் பிறவியிலேயே பெற்றிருக்க வேண்டும். எல்லோரிடமும் இந்தக் கலை ஓரளவிற்குப் புதை பொருளாகப் பதிந்திருக்கிறது. என்றாலும், ஒரு சில இடங்களில் மட்டுமே பயனளிக்கிறது. அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொருவரும் தனக்குத் தெரிந்தோ தெரியாமலோ நடித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். ஆனால், அது பலர் காண மேடைக்கு வரும்போது மட்டுமே நடிப்பாகக் கருதப்படுகிறது.

இந்தப் புதை செல்வத்தை நடிகன் தன் உழைப்பாலும், ஆராய்ச்சியாலும் சீர்படுத்தி மெருகிட்டுக் கொள்ளவேண்டும். அப்போது தான் ஷேக்ஸ்பியர், காளிதாஸன் போன்ற பேராசிரியர்கள் கற்பனையிலே உருவாகிய குணசித்திரப் பாத்திரங்களை ஏற்று இயற்கையாக நடிக்க முடியும். இதற்குக் கல்வியறிவும் ஓரளவுக்குத் தேவைப்படுகிறது. எனவே, படித்த — நடிப்பில் திறமையும் ஆர்வமும் உள்ள இளைஞர்களைப் பட முதலாளிகளும், டைரெக்டர்களும் ஆதரித்து, அவர்கள் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

சில பாத்திரங்களை வெவ்வேறு நடிகர்கள் வெவ்வேறு விதமாக நடிக்கலாம். சில சமயங்களில் ஆசிரியரின் கருத்துக்கு முற்றிலும் முரண்பாடாகக் கூட சித்தரிக்கலாம். இதை அவரவர்களுடைய 'தனிப் பாணி' (manerism) என்று கூறுவார்கள். வாழ்க்கையில் உன்னத குறிக்கோள்களைப் பின்பற்றி வாழ்ந்த புத்தர், காந்தியடிகள் போன்ற உலக மேதைகள் ஒவ்வொருவரும் ஒரு தனிப்பட்ட குணச்சித்திரங்கள். அவர்களைச் சித்தரிக்க வேண்டுமானால் நடிகன் தன் வாழ்விலும் அந்தக் கொள்கைகளை ஒரு சில நாட்களுக்காவது பின்பற்றி அவர்கள் வாழ்ந்தவாறே வாழ முயற்சி செய்யவேண்டும். அப்போது தான் அவன் நடிப்பில் இயற்கை மிகுந்து காணப்படும்.

ஏனவே, நடிப்புக் கலை மிகவும் உன்னதமானதொன்று. அதோடு கடினமானதும் கூட. இல்லாத ஒன்றை கற்பனை செய்து கொண்டு இயற்கையாக நடிப்பதென்பது அவ்வளவு எளிதல்ல. சோகம், காதல், நகைப்பு, வீரம் முதலிய எல்லா சுவைகளையும் ஏற்று, அவ்வவற்றிற்குத் தகுந்தாற்போல், தோற்றத்தையும், நோக்கத்தையும் மாற்றி, இயல்பாக நடிப்பது அதனிலும் அரிது. இவ்வாறு பல் சுவையும் ததும்ப நடிப்பவனே குணச்சித்திர நடிகனாகிறான். தன்னுடைய சக்தியால் காண்போரைத் தன் வயப்படுத்தி, காண்பது நாடகமல்ல, உண்மையானதொரு நிகழ்ச்சி என்ற உணர்வை ஊட்டுவிக்கும் இக் கலைதான் முத்தமிழில் மேலானதாகப் போற்றப்பட்டு வருகிறது. ஆனால், இந்த உன்னதக் கலை வளர்வதும், வாழ்வதும் ரஸிகர்களின் அன்பிலும், ஆதரவிலுமே இருக்கிறது. வாழ்க கலை! வளர்க நடிப்பு!!

குழந்தைகள் சினிமா—நாடக விழா

சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டு, சென்ற மாதம் 6ம்தேதி காலை குழந்தைகள் பிலிம் விழா நியூ எல்பின்ஸ்டன் தியேட்டரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிதி மந்திரி சி. சுப்ரமணியம் விழாவை ஆரம்பித்து வைத்தார். நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் தலைமை வகித்தார்.

இம்மாதிரி விழா சென்னையில் நடப்பது இதுதான் முதல் தடவை. குமாரி பூமாவும் மாஸ்டர் கிருஷ்ணனும் இறை வணக்கம் பாடினர்கள். பலர் விழாவுக்கு ஆசி கூறி செய்திகள் அனுப்பி யிருந்தனர்.

சங்கத் தலைவர் ஏ. அருணாசலம் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். சினிமாக்களை இப்போது, வயது வந்தோர் மட்டும் பார்க்கக் கூடியது; எல்லோரும் பார்க்கக் கூடியது என்று இரண்டாகப் பிரித்து சில படங்களைக் குழந்தைகள் பார்க்கக் கூடாது என்று செய்திருப்பது எதிர்மறை ஏற்பாடு. இதைப் பார்க்காதே, என்பதை விட இதைப் பார் என்று குழந்தைகளுக்கான படங்களைத் தயாரிப்பது என்பதே சிறந்த முறை. இந்த வகையில் முயற்சிக்கு அடிகோலத்தான் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று அவர் கூறினர். ஏழு ஆண்டுகளாக சங்கம் செய்துவரும் சேவைகளைக் குறிப்பிட்டார்.

சி. சுப்ரமணியம் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது: சினிமா வேண்டுமா வேண்டாமா என்று சர்ச்சை செய்த காலம் மலையேறிவிட்டது. அது நம் வாழ்க்கையில் ஒரு அம்சமாகி விட்டது. ஆகையால் தான் சினிமாக்கள் விஷயத்தில் அதிக சிரத்தை கொள்ளத் தொடங்கி யிருக்கிறேம். மக்கள் மனதையும், நடத்தையையும் உருவாக்கும் சக்தி சினிமாவுக்கு இருக்கிறது. மக்களின் சிந்தனை நடத்தை ஆகியவைகளை உருவாக்கும் சினிமாக்கள் நம் குழந்தைகளின் மனதைக் கெடுத்து விடாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டிய கடமை சர்க்காருக்கு உண்டு. சுயநலமுள்ளவர்கள் தான் சர்க்கார் தலையிடக்கூடாதென்று சொல்லுவார்கள். குழந்தைகளுக்கான படங்களைத் தயாரிப்பதற்கு ஊக்கமளிக்கத்தான் இந்த விழா கொண்டாடப்படுகிறது. சினிமாக்கள் பொதுவாக, சில கெடுதல்களும் செய்திருக்கிறது என்பதையும் சொல்லாமல் இருப்பதற்கில்லை. ஆபாச விளம்பரங்களைக் கண்டால் கிழித்தெறியப் பொது மக்களுக்கு உரிமை இருக்க வேண்டும்.

நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் பேசுகையில், குழந்தைகள் படங்களை வெளி நாடுகளிலிருந்து தருவிக்காமல், இந்தியாவில் வழங்கும் சிறுவர் கதைகளைக் கொண்டு சின்னஞ்சிறு குழந்தைகள் படங்கள் எடுத்துப் பள்ளிக்கூடங்களில் காட்டலாம் என்றுர். படங்களின் தரக் குறைவுக்கு லாப நோக்கே காரணமென்றும், நமது பண்பாட்டையொட்டியதாய் குழந்தைகளுக்கான படங்களை சர்க்காரே எடுக்க வேண்டுமென்றும் அவர் கூறினர். சங்கத்தின் கௌரவ பொதுக் காரியதரிசி இ. பி. சாமுவேல் நன்றி கூறினர். கூட்டம் முடிந்தபின் இந்திய சர்க்கார் எடுத்த சில துண்டுப் படங்களும் மற்றும் ரஷியா, பாரமௌண்ட் பிக்சர்ஸ், எம். ஜி. எம். படங்களும் காட்டப்பட்டன.

இந்தக் குழந்தைகள் பிலிம் விழா 7ம் தேதி முதல், 12ந் தேதிவரை ஆறு நாட்கள் நடந்தன. பல நாடுகளிலிருந்தும் தருவிக்கப்பட்டிருந்த முப்பது குழந்தைகளின் படங்கள் தினசரி காலை 10-மணிக்கு அசோக், பிராட்வே, கபாலி, மஹாராணி, பாரகன், சன் ஆகிய ஆறு தியேட்டர்களில் காட்டப்பட்டன.

சென்னையிலுள்ள குழந்தை எழுத்தாளர் சங்கத்தினர் ஒரு குழந்தைகள் நாடக விழாவை நடத்தினர்கள். இந்த விழாவை சென்ற மாதம் 21ம் தேதி ராஜாஜி துவக்கி வைத்தார். 24, 25, 26 ஆகிய மூன்று நாட்களிலும் தினசரி இரண்டு நாடகங்கள் வீதம் ஆறு நாடகங்கள் நடிக்கப்பட்டன. இரண்டாவது தினம் நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் தலைமை வகித்தார். மூன்றுவது தினம் மந்திரி எம். பக்தவத்ஸலம் தலைமை வகித்து சிறந்த நாடகங்களுக்குப் பரிசுகள் வழங்கினர்.

Edited and Published by P. R. S. Gopal (Gundoosi) at 26, Godown St., Madras—1. Printed by S. Sriraman at the Commercial Printing and Publishing House, 46, Armenian Street, Madras—1.

ஏவி. எம். "செல்லப் பிள்ளை" தமிழ்ப் படத்தில் சாவித்திரியை இந்தக் கோலத்தில் காணப் போகிறீர்கள்

Registered as a News Paper in Ceylon.